janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakththitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakththitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2022 மே 22 - 28 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 07





**எது ஆக்கிரமிப்பு?**

பாம்புக்கு புற்றுண்டு; பறவைக்கு கூடுண்டு! ஆனால் மனிதர்களுக்கு வசிப்பிடம் உண்டா? நாம் போற்றுகின்ற, நாட்டை வழி நடத்துகின்ற நமது அரசியலமைப்புச் சட்டம் மனிதர்கள் வாழ்க்கை குறித்து >>> ப 02




**வைசேடிகம்**

இந்தியாவின் பழமையான தத்துவங்களில் வைசேடிகமும் ஒன்று. இதை உருவாக்கியவர் கணாதர் எனப்படுகிறார். இவர் எழுதிய நூல் "வைசேடிக சூத்திரம்" எனப்படுகிறது. பழங்காலத்திலேயே அணு பற்றி பலர் >>> ப 05



**உயர் கல்வியும்...**

நாடு முழுவதும் உயர்கல்வி குறித்த உரையாடல்கள் தொடர்ந்து கொண்டுள்ளது. அரசு தலைவர்கள், அரசியல் தலைவர்கள், பல்கலைக் கழகங்கள், அறிவுத்துறையினர் என பலரும் இது பற்றி பேசுகிறார்கள் உடற்கூறியல், விண்வெளி ஆய்வுகள், தொழில்நுட்பவியல், >>> ப 03

## தேசிய கல்விக் கொள்கைக்கு எதிராக சென்னையில்

# மாணவர்கள் போர்க்குரல்!



சென்னை: அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் சார்பில் தேசிய கல்விக் கொள்கைக்கு எதிராக தேசிய மாநாடு மே 15 அன்று சென்னை பிட்டி. தியாகராயர் அரங்கில் நடைபெற்றது.

மாநாட்டிற்கு தேசிய தலைவர் சுவம் பானர்ஜி (மேற்கு வங்கம்), தேசிய செயலாளர்கள் தினேஷ் சீரங்கராஜ் (தமிழ்நாடு), ஜி.ரங்கண்ணா (ஆந்திரா), தேசிய துணைத் தலைவர்கள் பங்கஜ் சவான் (மகாராஸ்டிரா), சிவராமகிருஷ்ணா (தெலங்கானா), தேசியக் குழு உறுப்பினர்கள் சங்கமித்ரா (ஒடிசா), அமின் ஹம்சா (பிகார்), கபீர் (கேரளா) ஆகியோர் தலைமை தாங்கினார்கள்.

மாணவர் பெருமன்ற கொடியினை தேசிய தலைவர் சுவம் பானர்ஜி ஏற்றி வைத்தார். தியாகிகள் நினைவு ஸ்தூபிக்கும், நீட் தேர்வால் பலியான மாணவர்களுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

கற்பி கலைக்குழுவினரின் பறை இசை நடன நிகழ்ச்சி, சீனிவாசன் குழுவினரின் சிலம்பாட்ட நிகழ்ச்சியுடன் மாநாடு துவங்கியது.

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தரும், மாநாட்டு வரவேற்புக் குழுவின் தலைவருமான வி.வசந்தி தேவி வரவேற்புரையாற்றினார். இம்மாநாட்டினை, தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு உயர்கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி, கேரள உயர்கல்வித் துறை அமைச்சர் ஆர்.பிந்து, மகாராஸ்டிரா வீட்டு வசதி வாரியத் துறை அமைச்சர் ஜித்தேந்திரா அவாத், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் பினாய் விஷ்வம் எம்.பி., பல்கலைக்கழக, கல்லூரி ஆசிரியர் சங்கத்தின் தேசிய தலைவர் முனைவர் அருண்குமார், பொதுப் பள்ளிகளுக்கான மாநில மேடையின் பொதுச் செயலாளர் பு.பா.பிரின்ஸ் கஜேந்திரபாபு, அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் பொதுச் செயலாளர் இரா.திருமலை ஆகியோர் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார்கள்.

மாணவர் பெருமன்ற பொதுச் செயலாளர் தேசிய கல்விக் கொள்கையை ஏன் நிராகரிக்க வேண்டும்? என்பதற்கான அறிக்கையை சமர்ப்பித்து உரை நிகழ்த்தினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா கலந்துகொண்டு நிறைவுரையாற்றினார்.

தேசியக் கல்விக் கொள்கையை திரும்பப்பெற வேண்டும், கல்வியை அடிப்படை உரிமையாக வழங்கிட வழிச் செய்யும் கொள்கை உருவாக்க வேண்டும், கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும், நீட், கியூட் திரும்பப் பெற வேண்டும்; நீட் தேர்வில் விலக்கு கோரும் தமிழ்நாடு சட்ட முன்வடிவிற்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் வழங்க வேண்டும், மாநிலக் கல்விக் கொள்கை உருவாக்கிட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

மாநாட்டு வரவேற்புக் குழுவின் துணைத் தலைவர்களான சென்னை பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் எஸ்.சாதிக், சமூக சமத்துவத்திற்கான மருத்துவர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜி.ஆர்.இரவீந்திரநாத், குடியாத்தம் அரசு கலைக் கல்லூரியின் மேனாள் முதல்வர் பி.சிவக்குமார், பேராசிரியர் கே.கதிரவன் உள்ளிட்டோர் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். மேலும், நடன, பாடல் நிகழ்வுகளை அரங்கேற்றிய கலைஞர்களும் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். மாநாட்டை முன்னின்று நடத்தியதற்காக மாநில செயலாளர் தினேஷ் சீரங்கராஜ், மாநில தலைவர் மௌ.குணசேகர் ஆகியோர் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆர்.நல்லகண்ணு மாநாட்டில் கலந்துகொண்டதும், மாணவர் பெருமன்ற தேசிய பொதுச் செயலாளர் மற்றும் தலைவருக்கு கதராடை அணிவித்து வாழ்த்தியதும் அனைவருக்கும் உற்சாகத்தை அளித்தது.

மாதர் சம்மேளன தேசிய பொதுச் செயலாளர் ஆனி ராஜா, கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் ஆர்.முத்தரசன், மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், மாநில செயற்குழு உறுப்பினர்கள் நா.பெரியசாமி, பி.பத்மாவதி, ஏஐடியுசி மாநில துணைப் பொதுச் செயலாளர் கே.இரவி, இளைஞர் பெருமன்ற மாநில செயலாளர் க.பாரதி, மாணவர் பெருமன்ற மாநில பொருளாளர் சு.பாலசுப்ரமணியன், மாநில துணைச் செயலாளர்கள் ஜி.ஆர்.தினேஷ்குமார், இரா.இராமசாமி, ச.பூர்ணிமா நந்தினி, மாநில துணைத் தலைவர்கள் ஆ.பிரகாஷ், பா.தினேஷ், இளைஞர் பெருமன்ற தேசியக் குழு உறுப்பினர் க.அஸ்வினி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

மாநாட்டு வரவேற்புக் குழு துணைச் செயலாளர்களான வங்கி ஊழியர் சங்க நிர்வாகி ஜி.முரளி, தலைவர் த.கு.வெங்கடேஷ், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாநில செயலாளர் கி.சு.குமார், எஸ்.கே.சிவா, வி.சேதுலட்சுமி (கலை இலக்கியப் பெருமன்றம்), மோ.ரேணுகா (சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர்), எம்.ஜி.டி.ஸ்டாலின் (IAL), பி.செந்தில்குமார் (இஸ்கப்), எஸ்.மகேந்திரன் (ரயில்வே) உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். மேலும், பல்வேறு மாநிலங்களில் இருந்து மாணவ பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

மாணவர் பெருமன்ற மாநில தலைவர் மௌ.குணசேகர் நன்றி கூறினார்.

**டி.ராஜா உரை:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் டி.ராஜா பேசுகையில், மத்திய அரசு தேசிய கல்விக் கொள்கை போன்ற " அபத்தமான " கொள்கைகளை அமல்படுத்துவதற்கு பதிலாக, கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டும். இந்தக் கொள்கைக்கு எதிராக ஏஐஎஸ்எஃப் உறுதியான போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்கும். கல்வியை அடிப்படை உரிமையாக அங்கீகரித்து மக்களுக்கான கொள்கையை உருவாக்க வேண்டும், மாணவர்களின் உயிரைப் பறிக்கும் நீட் தேர்வையும் ஒழிக்க வேண்டும்.

நீட் தேர்வில் இருந்து தமிழகத்தை விடுவிக்க தமிழகம் நிறைவேற்றிய மசோதாவுக்கு குடியரசுத் தலைவர் ஒப்புதலை வழங்க வேண்டும்.

சொல்லப்போனால் கல்வியின் வருங்காலம் ஒன்றிய அரசின் வன்முறையால் கட்டமைக்கப்பட்டு வருகிறது என்று கூறினார்.




### அமைச்சர்கள் உரை

உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி பேசியதாவது: தேசிய கல்விக்கொள்கையை அமல்படுத்துவது கூட்டாட்சிக்கு எதிரானது, மாநில உரிமைக்கு எதிரானது. கல்வி கொள்கையை எதிர்க்க மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். தமிழ்நாட்டில் இருமொழிக்கொள்கை கடைபிடிக்கப்பட்டு வரும் நிலையில், 3 ஆவது மொழியை கற்க எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. ஆனால் திணிப்பைத் தான் எதிர்க்கிறோம். எங்கள் மீது இந்தியை திணிக்கக் கூடாது என்றார்.

தொடர்ந்து பள்ளிக்கல்வித்துறை அமைச் அன்பில் மகேஷ் பொய்யா மொழி பேசியதாவது, தேசிய கல்விக் கொள்கையை, தேசியக் கொள்கை என்பதற்காக எதிர்க்கவில்லை. அதில் கொள்கை இல்லை என்பதற்காக எதிர்க்கிறோம். இந்தி திணிப்பையும், சமஸ்கிருதம் தெரிந்தால் தான் மருத்துவப் படிப்பு என்பதையும் எதிர்த்த திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவன் நான். தேசிய கல்விக் கொள்கை மொழியாக்கத்தில் பல வாக்கியப் பிழைகள் உள்ளன. மொழி பெயர்ப்பில் சமஸ்கிருதம் குறித்து ஆங்கிலத்தில் உள்ளது. ஆனால், தமிழில் பெயர்க்க

தொடர்ச்சி 16ம் பக்கம் >>


## அறிவிப்பு

நியூஸ்பிரிண்ட் பேப்பர் விலை உயர்வு மற்றும் பல்வேறு கட்டண உயர்வுகளால் தவிர்க்க முடியாத நிலையில் ஜனசக்தியின் விலை கீழ்கண்டவாறு மாற்றம் செய்யப்படுகிறது. சந்தாதாரர்களும், ஏஜெண்டுகளும் தொடர்ந்து ஒத்துழைப்பு தர வேண்டுகிறோம்.

| | |
|---|---|
| ஆயுள் சந்தா | - ரூ.7500.00 |
| ஆண்டு சந்தா | - ரூ.750.00 |
| தனிப்பிரதி | - ரூ.15.00 |

பொது மேலாளர்
ஜனசக்தி





## கட்சிக் கடிதம்

# எது ஆக்கிரமிப்பு?

**பேரன்புமிக்க தோழர்களே!**

### பாம்புக்கு புற்றுண்டு; பறவைக்கு கூடுண்டு! ஆனால் மனிதர்களுக்கு வசிப்பிடம் உண்டா?

நாம் போற்றுகின்ற, நாட்டை வழி நடத்துகின்ற நமது அரசியலமைப்புச் சட்டம் மனிதர்கள் வாழ்க்கை குறித்து என்ன கூறுகின்றது.

இந்திய குடிமகன் ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும், பிறர் போற்றும் வாழ்க்கையாக இருந்திடல் வேண்டும் என்று உறுதிபடக் கூறுகின்றது.

நமது நாட்டில் வாழும் பல ஆயிரம் கோடி மக்களின் வாழ்க்கை பிறர் போற்றும், பாராட்டும் வண்ணம் உள்ளதா? அல்லது எள்ளி நகையாடும் வாழ்க்கையாக உள்ளதா?

அனைவராலும் பரிகசிக்கக்கூடிய வாழ்க்கையாகவா அமைந்துள்ளது.

ஒவ்வொரு குடிமக்களின் அடிப்படைத் தேவை இருக்க இடம், உண்ண உணவு, உடுத்த உடை இம்மூன்றும் தவிர்க்க முடியாத தேவையாகும்.

கடந்த 75 ஆண்டுகளில் இவை நிறைவேற்றப்பட்டுள்ளதா? நிறைவேறவில்லை என்பது தான் எதார்த்த உண்மை!

தமிழகத்தில் பரவலாக ஆக்கிரமிப்பு வீடுகள் அகற்றம், இடித்து தள்ளப்படுகின்றது – மக்கள் தெருவில் நிர்கதியாய் நிற்கின்றார்கள். மக்கள் போராடுகின்றார்கள். கூட்டத்தை கலைக்க போலீஸ் தடியடி, இத்தகைய செய்திகள் தினந்தோறும் ஊடகங்களுக்கு தீனியாகின்றன.

எது ஆக்கிரமிப்பு? யார் ஆக்கிரமிப்பு செய்கின்றார்கள்? ஆக்கிரமிப்புகள் முழுவதும் அகற்றப்படுகின்றனவா? என்பன போன்ற பல கேள்விகளுக்கு விடைகாண வேண்டும்.

ஏழை, எளிய மக்கள், நிலமற்றவர்கள், சொந்தமான குடிமனை அற்றவர்கள் வேறு வழியின்றி தரிசாக கிடக்கும் இடங்களில் தஞ்சம் புகுகின்றார்கள். இவர்களுக்கு யாருடைய பட்டா நிலத்தையோ அல்லது புறம்போக்கு நிலத்தையோ ஆக்கிரமிக்க வேண்டும் என்கிற சுயநலத்தால் அல்ல!

வேறு வழி இல்லை, தானும் வாழ வேண்டும் என்று விரும்புகிறான், குடும்பம் நடத்த வேண்டும் என்று எண்ணுகிறான், கிடைக்கின்ற இடத்தில் குடிசை அமைத்துக் கொள்கின்றான்.

நாடோடிகள் போன்று வயிற்றுப் பிழைப்புக்காக சொந்த ஊரை விட்டு, சொந்த பந்தங்களை துறந்து, எங்கே வேலை கிடைக்கும் என்று அலைந்து திரிகின்றான்.

அவன் தேடும் வேலை ஐஏஎஸ் – ஐபிஎஸ் வேலை அல்ல, மூட்டை தூக்க, கல் உடைக்க, கட்டிட பணிகள் செய்ய, ஹோட்டல்களில் வேலை செய்ய, எச்சிலை எடுக்க, மேஜைகளை துடைக்க, டீ கடையில் எச்சில் கிளாஸ் கழுவ, ஜவுளிக்கடையில், மளிகைக்கடையில் வேலை செய்ய, ஆட்டோ ஓட்ட, டிரைவர் வேலை பார்க்க, இன்ன வேலைதான் வேண்டும் என்றல்ல, என்ன வேலை கிடைக்கின்றதோ, என்ன கூலி கிடைக்கின்றதோ, அதனைத் தேடி நாய் போல அலைந்து திரிந்து கிடைக்கின்ற வேலைக்கு கொடுக்கின்ற ஊதியத்திற்கு உடன்பட்டு வேலை செய்கின்றான்.

கிடைக்கும் சொற்ப ஊதியத்தில் வாழ்க்கையை நடத்திட, அவனுக்கான ஒரு சொந்த குடும்பம் தேவை. அக்குடும்பம் வசிக்க ஒரு சின்னஞ்சிறு குடிசை வேண்டும், அக்குடிசை அமைக்க சிறிய இடம் தேவை. அத்தகைய அரசுக்கு சொந்தமான புறம்போக்குகளில் குடிசை அமைத்து வாழ்கின்றான்.

அவன் குடிசை அமைத்திருப்பது எந்த ஒரு தனிப்பட்ட நபருடைய பட்டா நிலத்திலும் அல்ல.

அரசு புறம்போக்குகள். அவைகள் நீர்ப்பிடிப்பு பகுதிகள், குளம் புறம்போக்கு, ஆற்றுப் புறம்போக்கு, ஏரி புறம்போக்கு, மேய்ச்சல் புறம்போக்கு, பாசன, வடிகால் புறம்போக்கு, சாலை புறம்போக்கு என பல வகை புறம்போக்குகள் உள்ளன.

இத்தகைய புறம்போக்குகளில் தான் ஏழைகள் குடிசை அமைத்து வாழ்ந்து வருகின்றனர்.

மேற்குறிப்பிட்ட புறம்போக்கு நிலங்கள் குறித்து, கிராம நிர்வாக அதிகாரி (விஏஓ) பதிவேட்டில் அவ்வாறு உள்ளது என்பதும் உண்மையே!

இத்தகைய கிராம அடங்கல் கணக்கு எப்போது தயாரிக்கப்பட்டது? எத்தனை நூறு ஆண்டுகளுக்கு முன்பு தயாரிக்கப்பட்டது? அல்லது எழுதப்பட்டது? என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

இவைகள் குறித்து ஒரு முழுமையான ஆய்வு தமிழகம் முழுவதும் மேற்கொள்ள வேண்டும்!

ஓர் உயர்மட்ட குழுவை அமைத்து இன்று, அத்தகைய புறம்போக்கு பகுதிகள் என எழுதப்பட்டது தற்போது பழைய நிலையில் உள்ளதா? என்பதனை முழுமையாக பரிசீலித்தால் உண்மை விளங்கும்!

சென்னை பெருநகரத்தில் தற்போதுள்ள தியாகராாசர் நகர் என அழைக்கப்படும் பகுதி ஏராளமான பெரும் செல்வந்தர்களின் பிரம்மாண்ட வீடுகள் உயர்ந்து நிற்கின்றன.

வீடுகள் மட்டுமல்ல அரசியல் கட்சிகளின் அலுவலகங்களும் உள்ளன.

இப்பகுதி முன்பு ஒரு மிகப்பெரும் ஏரியாக இருந்தது என்று கூறுகின்றார்கள்– ஏரியாக அன்று இருந்தது இன்று இல்லை–

சென்னை உயர் நீதிமன்றத்தின் கிளையாக செயல்படும் மதுரை உயர்நீதிமன்றம் இருப்பதும், சென்னை கோயம்பேட்டில் உள்ள பிரம்மாண்டமான பேருந்து நிலையம் அமைந்திருப்பதும் ஏரியில் தானே!

இவற்றை ஆக்கிரமிப்பு என்று அகற்றிட முடியுமா?

நீதி என்பது அனைவருக்கும் சமமாகத் தானே இருந்திடல் வேண்டும். ஏழைக்கு ஒரு நீதி – வசதிபடைத்தவருக்கு மற்றொரு நீதி என்றால் எவ்வாறு ஏற்க இயலும்?

தஞ்சையில் புகழ்மிக்க சாஸ்த்ரா பல்கலைக்கழகம் உள்ளது. தங்களுக்குரிய பட்டா நிலத்தில் வானளாவிய மிகப் பிரம்மாண்டமான கட்டிடங்கள் நிரம்ப உள்ளன.

அவைகள் போதாது என்று தமிழ்நாடு அரசு திறந்தவெளி சிறைச்சாலைக்குரிய இடத்தை ஆக்கிரமிப்பு செய்து கட்டிடங்கள் கட்டி பல ஆண்டுகள் ஆகிவிட்டன.

திறந்தவெளி சிறைச்சாலைக்குரிய இடத்தில் ஒரு தனியார் கட்டிடம் கட்ட எவ்வாறு அனுமதி வழங்கப்பட்டது? அதிகாரிகள் தன்னிச்சையாக வழங்கினார்களா? அவ்வாறு வழங்கி இருந்தால் அரசு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

பகிரங்கமான இந்த உண்மை குறித்து தஞ்சாவூர் மாவட்ட நிர்வாகத்திற்கும் – அரசுக்கும் தெரியாதா? அல்லது தெரிந்தும் மவுனம் காக்கப்படுகின்றதா?

மாவட்ட நிர்வாகத்தின், மாநில அரசின் மவுனத்தை மதுரை உயர்நீதிமன்றம் கண்டித்ததுடன், சாஸ்த்ரா பல்கலைக்கழக ஆக்கிரமிப்பு அகற்றப்பட வேண்டும் என்று ஒரு முறை அல்ல, பல முறை உத்தரவு பிறப்பித்தும் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

அங்கே ஏன் வருவாய்த்துறை அதிகாரிகள், காவல்துறையின் பாதுகாப்போடு புல்டோசர் கொண்டு கட்டிடங்களை இடிக்கவில்லை? உயர்நீதிமன்ற, உச்சநீதிமன்ற உத்தரவு, நாங்கள் என்ன செய்ய முடியும்? ஏழை மக்களின் வீடுகளை இடித்து தரைமட்டமாக்கவில்லை என்றால், எங்கள் மீது நீதிமன்ற அவமதிப்பு செய்தோம் என, தங்களை தண்டிக்கும் என வாய்கூசாமல் கூறும் அதிகாரிகள் சாஸ்த்ரா பல்கலைக்கழகம் நோக்கி செல்ல மறுப்பது ஏன்?

அவர் செல்வந்தர், பணம் பாதாளம் வரை பாயும் என்பதாலா? என்று பாதிக்கப்பட்ட ஏழை எளிய மக்கள் கேட்கத்தானே செய்வார்கள்!

சாஸ்த்ரா கல்வி நிறுவனம் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் உள்ள பல கல்வி நிறுவனங்கள் தங்களின் பண, அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி நீர்நிலை பகுதிகளை ஆக்கிரமிப்பு செய்து பல பிரம்மாண்டமான கட்டிடங்களை கட்டியுள்ளது அதிகார வர்க்கத்திற்கும், அரசுக்கும் உண்மையில் தெரியாதா? அல்லது தெரிந்தும் மவுனம் காக்கப்படுகின்றதா?

நேரடியாக பிரச்சினைக்கு வருவோரும். அரசு புறம்போக்கு நிலங்களில் குடிசை அமைப்பதற்கு எதிராக நீதிமன்றத்திற்கு செல்பவர்கள் யார்?

ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டும் என்று அரசு நீதிமன்றத்தை நாடவில்லை.

அரசு ஏழை மக்களின் சார்பாகத் தான் உள்ளது. அவர்களின் பக்கம் இல்லையெனில், அவர்களது குடிசைகளுக்கு வீட்டு வரி நிர்ணயம் செய்து வசூலிப்பதன் மூலம் மற்றும் மின் இணைப்பு, குடிநீர் வசதி, குடும்ப அட்டை (ரேஷன் கார்டு) வாக்காளர் பெயர் பட்டியலில் அவர்களது குடும்பத்தில் உள்ள அனைவரின் பெயரும் சேர்க்கப்பட்டு, அடையாள அட்டை மற்றும் ஆதார் அட்டை என அனைத்தும் வழங்கப்படுகின்றது. அவ்வாறெனில் அவர்கள் குடியிருப்பதில் அரசுக்கு எவ்விதமான ஆட்சேபணையும் இல்லை என்று ஏழை மக்கள் அரசு மீது மிகுந்த நம்பிக்கையோடு உள்ளார்கள்.

அரசு மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை சிதறடிப்பவர்கள் யார்? ஏழை, எளிய மக்களுக்கு எதிராக நீதிமன்றத்தை நாடுபவர்கள் யார்? அவர்கள் பொது நலத்திற்காக நீதிமன்றத்தை நாடுகின்றார்களா? அல்லது தங்களின் சுயநலத்திற்காக செல்கிறார்களா?

உதாரணமாக சென்னை ராஜா அண்ணாமலைபுரம் (ஆர்.ஏ.புரம்) கோவிந்தசாமி நகரில் பல்லாண்டு காலமாக குடியிருந்து வரும் ஏழை, எளிய மக்களுக்கு எதிராக ஆக்கிரமிப்பு செய்து விட்டார்கள். இதன் காரணமாக பக்கிங்காம் கால்வாய் பாதிக்கப்படும், ஏழைகள் குடியிருக்கும் பகுதி நீர்நிலை பகுதி என்று மிகுந்த பண செல்வாக்குப் படைத்த தனிப்பட்ட நபர் நீதிமன்றத்தை கடந்த 2008 ஆம் ஆண்டு நாடி தனக்கு சாதகமான தீர்ப்பை பெற்றார்.

இதன்விளைவாக நீதிமன்ற தீர்ப்பின்படி கடந்த மே 8ஆம் தேதி வீடுகள் இடிக்கப்பட்டன. அதிர்ச்சிக்கு உள்ளான வி.ஜி.கண்ணையன் என்ற தொழிலாளி தீக்குளித்தார். சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். நூற்றுக்கணக்கான மக்கள் வீடற்ற நிலையில் நிர்கதியாய் தெருவில் நிற்கின்றனர்.

பக்கிங்காம் கால்வாயில் இருந்து 70 அடி தூரத்தில் வீடுகள் உள்ளன. இதனால் கால்வாய்க்கு எவ்வித பாதிப்பும் இல்லை என்பதனை நேரில் சென்று பார்க்கும் மனசாட்சி உள்ள மனிதர்கள் அனைவரும் நன்கறிவார்கள்.

கால்வாயின் இடதுபுறம் 70 அடி தூரத்தில் உள்ள வீடுகள் பாதிப்பு என்று இடிக்கப்படும் அதேநேரத்தில், வலதுகரையின் விளிம்பிலேயே மதில் சுவர்களும், வீடுகளும் உள்ளன. அவைகள் பாதிப்பு இல்லையா? இவைகளைக் காட்டிலும் கால்வாயின் மேல்தான் பறக்கும் இரயில் மேம்பாலம் அமைக்கப்பட்டு இர யில்கள் இயங்கிக் கொண்டுள்ளன.

பாலத்தை தாங்கி நிற்கும் பெரும் தூண்கள் கால்வாயின் உள்ளே வழிநெடுகிலும் நூற்றுக்கணக்கில் அமைக்கப்பட்டுள்ளன. இவைகளால் பாதிப்பு இல்லையா?

இத்தகைய பாதிப்பை காட்டிலும் வீடுகள் எவ்வகையிலும் பாதிப்பு இல்லை.

நீதிமன்றம் சென்றவர் மிகப்பெரிய தொழிலதிபர். பல்வேறு நிறுவனங்களை நடத்திவரும் பெரும் முதலாளி ஆவார்.

தனது வீட்டின் பின்புறம் ஏழைகளின் வீடுகள் இருக்க கூடாது என்பதற்காக தொடுக்கப்பட்ட வழக்கு என்பதும், அவருக்கு சாதகமாக எளிய மக்களுக்கு எதிராக நீதிமன்றம் தீர்ப்பளித்து ள்ளது என்ற உண்மையை உணர வேண்டியவர்கள் உணர்ந்தால் சரி!

நாடும், மக்களும், முதல்வரும், பிரதமரும் போற்றிப் புகழும் மகாகவி பாரதியார் ஓர் கனவு கண்டார், அந்தக் கனவு இதுதான்!

“காணி நிலம் வேண்டும் பராசக்தி
காணி நிலம் வேண்டும், அங்கு
தூணில் அழகியதாய் நன்மாடங்கள்
துய்ய நிறத்தினதாய் அந்தக்
காணி நிலத்தினிடையே ஓர்மாளிகை
கட்டித் தரவேண்டும்”


வெள்ளையர் ஆட்சியில் தான் நம்பிக்கை கொண்ட பராசக்தியைப் பார்த்து பாரதி வேண்டுகோள் வைத்தான்.

இன்று முதல்வரை பார்த்து எங்களது வீட்டை இடிக்காதீர்கள் என்று வேண்டுகோள் வைக்கின்றார்கள்!

அவர்களது எளிய கோரிக்கை, நியாயமான கோரிக்கை, நேர்மையான கோரிக்கை நிறைவேறுமா? நிறைவேற்றப்படும் என்று நம்புகிறோம். மீண்டும் சந்திப்போம்.


**தோழமைமிக்க**

**இரா.முத்தரசன்**



மு.வீரபாண்டியன்

# உயர் கல்வியும் - சமூகக் கல்வியும்




**நாடு முழுவதும் உயர்கல்வி குறித்த உரையாடல்கள் தொடர்ந்து கொண்டுள்ளது.**

அரசு தலைவர்கள், அரசியல் தலைவர்கள், பல்கலைக் கழகங்கள், அறிவுத்துறையினர் என பலரும் இது பற்றி பேசுகிறார்கள்.

உடற்கூறியல், விண்வெளி ஆய்வுகள், தொழில்நுட்பவியல், பயோ – நானோ, சைபர் நுட்பங்கள் என அனைத்தையும் உயர் கல்வியில் இணைக்கும் சிந்தனை கூடுதல் பெறுகிறது.

பேரழிவு ஆயுதங்களைக் கூட நுட்ப வடிவில் வடித்தெடுக்க உயர்கல்வியை பயன்படுத்தும் போக்கும் நிலவுகிறது. இதற்கு எந்த வளர்ச்சி அடைந்த நாடும் விதிவிலக்கல்ல.

உயர்கல்வியின் அடித்தளம் ஆரம்பக் கல்வி தான். ஆரம்ப கல்விகள் பலவீனப்பட்டு உள்ள நாடுகளில் கூட உயர்கல்வி நாட்டம் கூடுதலாகி உள்ளது. எந்த ஒரு நாட்டிற்கும் உயர்கல்வி மிக மிக அவசியம் தான்.

ஏனெனில் உயர் கல்வி நுட்பவியல் சார்ந்தது. இது நுட்பயுகம், நுட்பங்கள் இல்லாமல் விரைவான மாற்றங்கள், முன்னேற்றங்கள் குறித்து சிந்திக்க முடியாது. நுட்பவியல், அதாவது உயர் கல்வி மிக மிக அவசியம். எனவே, இதற்கான உரிய கொள்கைத் திட்டங்கள், நிதி ஒதுக்கீடு, பிறநாட்டு உடன்பாடு இன்றியமையாதது தான்.

எனினும் உயர்கல்வி பேணும் எந்த ஒரு நாட்டிலும் சமூகக் கல்வி மிக மிக பின் தங்கியிருப்பது குறித்த உண்மையை கடந்து செல்ல முடியாது. சமீபத்தில் மேற்கத்திய ஆய்வுகள் பேய், பிசாசு, கடவுள் குறித்த ஆழமான நம்பிக்கைகள் உயர்கல்வி பெற்றவர்களிடம் உள்ளதாகக் கூறுகிறது.

2019 ஆக்ஸ்போர்டு ஆய்வு, லண்டனில் மட்டும் எடுத்த கணக்கெடுப்பில், பேய், பிசாசுகளை பார்த்ததாகவும், கடவுளோடு பேசியதாகவும் 60க்கும் மேற்பட்டவர்களை கண்டறிந்துள்ளது. இவர்கள் யாவரும் உயர் கல்வி பயின்றோர் என்பது குறிப்பிடத் தக்கது.

இந்தியாவிலும் மூளை அறுவை சிகிச்சை, இருதய அறுவை சிகிச்சை, மாற்று சிறுநீரகம் பொருத்தும் மகத்தான மருத்துவர்கள் கூட எங்கள் பணி ஆன மட்டும் செய்து விட்டோம், இனி எல்லாம் கடவுள் செயல் என்கின்றனர். இங்குதான் சமூகக் கல்வியின் அவசியத்தை உணர்த்தினார் தந்தை பெரியார். அறிவியல் பூர்வமாக சமூகக் கல்வி இல்லாமல் உயர்கல்வி அர்த்தம் பெறாது என்றார் அவர்.

அதே போலத்தான் இன்றைய விண்வெளி ஆய்வுகள். விண்வெளி ஆய்வுகளில் இந்தியா மாபெரும் முன்னேற்றங்களை எட்டுகிறது – மகிழ்ச்சி.

விண்வெளி தான் இன்றைய நுட்பங்களின் உச்சம். ஆனாலும், விண்வெளிக்கு விண்கலங்கள் செல்லும்போது தொழில்நுட்ப வல்லுனர்கள், விஞ்ஞானிகளும் கூட கற்பூரம், சூடம், தேங்காய் உடைப்பது என்பது எதைக் காட்டுகிறது?

ராக்கெட் ஏவும் போது தோல்வி அடையாமல் இருக்க பிராந்தை குறியீடுகள் செய்வதை எப்படிப் பார்ப்பது?

விண்வெளி எனும் மிக உயர்ந்த தொழில்நுட்ப கல்விக்கும், சமூக கல்விக்குமான இடைவெளி புரிகிறதல்லவா!

எந்த உயர் கல்வியும் சாதி குறித்தோ, மதம், கடவுள் குறித்தோ, தேசிய இனம் குறித்தோ, பாலின வேற்றுமைகள் குறித்தோ பேசுவதில்லை.

வரலாற்றில் கௌதம புத்தர் கடவுள் குறித்து, உருவ வழிபாடு குறித்து பேசியதாக அறிகிறோம். பின்னர், புகழ்வாய்ந்த நாளந்தா பல்கலைக்கழகத்தில் கூட இது குறித்த பாட முறைகள் இடம்பெறவில்லை. புத்தர் காலம் துவங்கி, சேர, சோழ, பாண்டியர் காலம், பின்னர் விடுதலை காலம், இன்றைய நவீன நிகழ்காலம் என அனைத்துக் காலங்களிலும் சமூக கல்வி குறித்த முழு சிந்தனைகள் இடம்பெறவில்லை.

தமிழ்ச்சமூகம், மொழியில், பண்பாட்டில், கலாச்சாரத்தில் சிறந்தோங்கி இருந்தது உண்மைதான். ஆனாலும், அப்போதும்கூட மதம், கடவுள், சாதி, பெண்ணடிமை குறித்து, பாட முறைகளில் இடம்பெறாமல் தான் தவிர்த்திருக்கிறார்கள்.

இதற்கு நேர்மாறாக ஐரோப்பிய சமூகம் உயர் கல்வியோடு சமூக கல்விக்கு மிகுந்த முக்கியத்துவம் வழங்கியது. ஐரோப்பாவில் அறிவுயுகம் ஒன்று தோன்ற இது உந்தித் தள்ளியது.

கெப்ளர், கலிலியோ, நியூட்டன், ஐன்ஸ்டீன், மார்க்ஸ், ஆடம்ஸ்மித், ஹெகல் என இன்னும் பல மேதைகள் உருவாகினர்.

இதன் பொருள் சமூக கல்வி குறித்த தயக்கம் ஐரோப்பிய சமூகத்திற்கு இல்லை என்பதல்ல.

உயிரியல் பரிணாம கோட்பாடு வகுத்த மேதை டார்வின் அவர்களிடமே இது நிலவியது.

**டார்வின் உயிரியல் பரிணாம கோட்பாடு வெளிவந்தபோது மார்க்ஸ் மிக துணிச்சலாக கடவுள் மீதான பலத்த அடி என்றார். டார்வின் கடவுள் பற்றி பேச மறுத்துவிட்டார். கடவுள் குறித்த அவர் தயக்கம்தான், மார்க்ஸ் தனது தாஸ் கேபிட்டல் நூலுக்கு அணிந்துரை கேட்டபோது டார்வின் தயங்கிய காரணமும் கூட.**

ஐரோப்பிய அறிவுலகத்திலும்கூட கடவுள் குறித்த தயக்கங்கள் இருந்தது. எனினும் இதனை அந்த யுகம்தான் உடைத்தது. அப்படி ஒரு சூழல், அப்படி ஒரு யுகம் இந்திய மண்ணில் இல்லை.

அங்கொன்றும் இங்கொன்றுமாக கடவுள் மறுப்பாளர்கள், சமூக சிந்தனையாளர்கள் தோன்றினார்கள்.

பெரியார் சுயமரியாதை இயக்கம் துவங்கி, கடவுள் மறுப்பு, சாதி மறுப்பு, பெண் விடுதலை, சமத்துவம் என முழங்கினார்.

கம்யூனிஸ்ட் அகிலத்திற்குப்பின் மிகத் துணிச்சலான இயக்கம் என இதனை சொல்லலாம்.

தேசிய இன விடுதலை, தேசிய இனப் பாகுபாடுகள் மீதான தாக்குதல், மூலதன எதிர்ப்பு, போர் எதிர்ப்பு, சகலவிதமான சுரண்டல் எதிர்ப்பு, கடவுள், மதம் குறித்த மறுப்பு என மார்க்ஸ் கருத்தை கம்யூனிஸ்ட் அகிலமும் தான் முதலில் அறிவியல்பூர்வமாக முன்மொழிந்தது. சமூகக் கல்வியின் அடித்தளம் இது.

இதன் உச்சமாக சர்வதேசியம், தேசிய இன சுயநிர்ணய உரிமை, போர் எதிர்ப்பு, மாற்றுப் பாலின உரிமைகள். ஓரினச் சேர்க்கையாளர் உரிமைகள் என உலகிலேயே லெனின் தான் துணிச்சலாக பேசினார்.

இந்தியாவில் கல்வி கற்றவர் உள்ளங்களிலும் கூட, சாதி ஆழமான எண்ணமாக வாழ்கிறது. ஆண் உயர்வு, பெண் தாழ்வு எனும் உளவியல் வாழ்கிறது. மதத்தை, கடவுளை கேள்வி கேட்க மனம் தயங்குகிறது.

மாற்று பாலினம் இங்கு இன்றும் கேலி பொருள்தான். சொத்து ஒரு பக்கமாக குவிக்கிறது. சட்டமன்றமோ, நாடாளுமன்றமோ மூச்சு விடுவதில்லை. எல்லைக் கோடுகள் பலமாக்கப்பட்டு தேசிய வெறி வளர்க்கப்படுகிறது; சர்வதேச பார்வை சிறிதும் வளரவில்லை. இச்சூழலில்தான் சமூக கல்வியின் தேவை அவசியமாகிறது.

## விலையேற்றம் மற்றும் வேலையின்மைக்கு எதிராக

# மே 25 முதல் 31 வரை அகில இந்திய போராட்டம்


இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), அகில இந்திய பார்வர்டு பிளாக், புரட்சிகர சோசலிஸ்ட் கட்சி மற்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்) லிபரேஷன் ஆகிய இடதுசாரி கட்சிகளின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள கூட்டறிக்கையில் கூறியுள்ளதாவது:

கட்டுக்கடங்காத விலையேற்றம் பொதுமக்கள் மீது முன் எப்போதும் இல்லாத அளவிற்கு பெரும் சுமையைத் திணித்து வருகிறது. கோடிக்கணக்கான மக்கள் துன்பத்தில் தவிக்கிறார்கள். பசிக்கொடுமை உண்டாக்கும் வலி மற்றும் வேதனையுடன் கூடிய அதீத வறுமைக்குள் அவர்கள் தள்ளப்படுகிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, அதிகரித்து வரும் வேலையின்மை மக்களின் துயரத்தை பன்மடங்கு அதிகரித்து வருகிறது.

பெட்ரோலியப் பொருட்களின் விலை கடந்த ஆண்டில் இருந்ததைக் காட்டிலும் 70%, காய்கறிகள் 20 % , சமையல் எண்ணெய் 23 %, தானியங்கள் 8 % அதிகரித்துள்ளன. கோடிக்கணக்கான மக்களின் பிரதான உணவான கோதுமையின் விலை 14% உயர்ந்துள்ளது. கோதுமை தானியத்தை பொதுமக்கள் வாங்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. கோதுமை கொள்முதலும் சரிவைச் சந்தித்துள்ளது. கடந்த ஆண்டு கொள்முதல் செய்யப்பட்ட கோதுமையின் அளவில், பாதிக்கும் குறைவாகவே ஒன்றிய அரசாங்கம் இந்த ஆண்டு கொள்முதல் செய்துள்ளது. கோதுமை கொள்முதலுக்கு இந்த ஆண்டு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலக்கு 44.4 மெட்ரிக் டன் ஆகும். ஆனால், இந்த ஆண்டு கொள்முதல் 20 மெட்ரிக் டன் அளவிற்கும் குறைவாகத்தான் இருக்கும்.

பெட்ரோலியப் பொருட்கள், சமையல் எரிவாயு உருளைகள் ஆகியவற்றின் தொடர் விலையேற்றம் மற்றும் கோதுமை பற்றாக்குறை, பணவீக்கத்தை மேலும் அதிகரிக்கச் செய்கின்றன. நிலக்கரிப் பற்றாக்குறை மின்சார கட்டண உயர்வை தீவிரமடையச் செய்கிறது.

### இடதுசாரி கட்சிகள் அறைகூவல்




இந்தச் சூழலில் ஒன்றிய அரசாங்கம் விலையேற்றத்தை, குறிப்பாக, சமையல் எரிவாயு உருளையின் விலையேற்றத்தை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்றும், அனைத்து பெட்ரோலியப் பொருட்கள் மீதான செஸ்/ மிகுவரியை திரும்பப் பெற வேண்டும் என்றும் இடதுசாரி கட்சிகள் வலியுறுத்துகின்றன. பொது விநியோகத் திட்டம் மூலம் கோதுமை வழங்கல் மீண்டும் செயல்படுத்தப்பட வேண்டும். விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த பொது விநியோகத் திட்டத்தை பலப்படுத்த வேண்டும். மே மாதம் 25 முதல் 31 வரை நடைபெறவுள்ள விலையேற்றம் மற்றும் வேலையின்மைக்கு எதிரான அகில இந்திய போராட்ட இயக் கத்தை இடதுசாரி கட்சிகளின் அணிகள் ஒருங்கிணைக்க வேண் டும் என்று அறைகூவல் விடுக்கிறோம். இவ்வாறு கூட்டறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மே 17 அன்று நடைபெற்ற கூட்டத்தில், தமிழகத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), விடுதலை சிறுத்தைகள் கட்சி, மற்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்லெனினிஸ்ட்) லிபரேசன் ஆகிய கட்சிகளின் சார்பில் 2022 மே 26 – 27 ஆகிய தேதிகளில் ஒன்றிய, நகர, வட்ட தலைநகரங்களில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்துவது எனவும், 2022 மே 25–31 ஆகிய தேதிகளில் வீடு, வீடாக துண்டு பிரசுரம் விநியோகித்து பிரச்சாரம் மேற்கொள்வது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

**இடதுசாரி கட்சிகளின் கோரிக்கை:**

1. பெட்ரோலியப் பொருட்களின் மீதான அனைத்து செஸ்/ மிகுவரியைத் திரும்பப் பெற வேண்டும்.
2. பொது விநியோகத் திட்டம் மூலம் கோதுமை வழங்கலை மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டும்.
3. பருப்பு மற்றும் சமையல் எண்ணெய் உள்ளிட்ட அனைத்து அத்தியாவசியப் பொருட்களையும் விநியோகிப்பதன் மூலம் பொது விநியோகத் திட்டத்தைப் பலப்படுத்த வேண்டும்.
4. வருமான வரி வரம்புக்கு வெளியே உள்ள குடும்பங்களுக்கான நேரடி நிதி மானியத்தை மாதம் ஒன்றுக்கு ரூ.7,500 ஆக உயர்த்திட வேண்டும்.
5. மகாத்மாக காந்தி ஊரக வேலை வாய்ப்பு திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டும்.
6. நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டத்திற்கான சட்டம் இயற்றப்பட வேண்டும்.
7. அனைத்து காலி பணியிடங்களையும் நிரப்ப வேண்டும்.
8. வேலையில்லா கால நிவாரணம் அளிப்பதற்கான மத்திய சட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 85 இதழ் 07

# மர்மமாய்ச் சதி புரிவார், வாழ்வுக்கு நஞ்சு வைப்பார்!

“இத்தனை ஆண்டுகளாக மசூதிக்குள் ஒரு சிவலிங்கத்தை மறைத்து வைத்திருக்கிறார்கள், இதைக் கண்டிக்க நாதியே இல்லையா” என்று ஒருவர் முகநூலில் பதிவிடுகிறார். உடனடியாக பலாப்பழத்தில் ஈ மொய்த்ததுபோல, “கண்டிக்கிறோம், விடமாட்டோம், அழித்தே விடுவோம்“ என்றெல்லாம் பல்லாயிரக்கணக்கில் பின்னூட்டங்கள் வருகின்றன. பார்ப்பவர்களுக்கு இது சகித்துக் கொள்ள முடியாத அநியாயமாகத்தானே தோன்றும்.

உத்தரபிரதேசம், வாரணாசியில் (அதாவது காசியில்) உள்ள ஞான வாபி மசூதி உள்ளது. காசி விஸ்வநாதர் ஆலயத்தில் உள்ள நந்தி, ஆலய கருவறையை நோக்கி பார்க்காமல் ஞானவாபி மசூதியை பார்த்து இருக்கிறதாம். அவ்வாறாயின், காசி விஸ்வநாதர் கருவறை அந்த மசூதிக்குள்தான் இருக்கிறது என்று கிளப்பியிருக்கிறார்கள்.

மசூதியில் அகழ்வாராய்ச்சி நடத்த வேண்டும் என்ற கோரிக்கை உடனடியாக நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. ஆய்வும் நடக்கிறது.மாவட்ட நீதிபதி மசூதிக்குள் யாரும் நுழையக் கூடாது எனத் தடை உத்தரவு போடுகிறார். ஏராளமான போலீசார் குவிக்கப்படுகின்றனர். திட்டமிட்டு பரபரப்பு ஏற்படுத்தப்படுகிறது. வழக்கு உச்சநீதிமன்றம் போகிறது. சிவலிங்கம் உள்ள இடத்தை பாதுகாக்க வேண்டும்; அதேநேரத்தில் இஸ்லாமியர் தொழுகையைத் தொடரலாம் என்று உயர் நீதிமன்றம் இப்படியும் இல்லாமல், அப்படியும் இல்லாமல் தீர்ப்பளிக்கிறது.

அந்த மசூதிக்கு கண்டெடுக்கப்பட்ட லிங்கம் என்ற பெயரில் ஒரு புகைப்படம் லட்சக் கணக்கானவர்களைச் சென்றடைந்து இருக்கிறது. ஆனால் அந்த லிங்கம் வியட்நாமில் ஒரு அகழ்வாராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்டது என்ற உண்மையைச் சொன்னால் யார் காதில் விழப் போகிறது? அடுத்த நிரந்தரமான கலகத்திற்கான வித்து விதைக்கப்பட்டுவிட்டது.

உலகத்தின் பேரதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹலில் உள்ள 22 நிலவறைகளில், சாமி சிலைகள் உள்ளதாகவும் அவற்றை திறந்து பார்க்க வேண்டும் என்றும் பொதுநல வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. சொத்து வழக்குகள், தொழிலாளர் வழக்குகளில் எல்லாம் ஒரு தலைமுறையே தாண்டினாலும் தீர்ப்பு வருவதில்லை. ஆனால் இந்த வழக்குகளில் எல்லாம் உடனடியாக தீர்ப்பு வந்துவிடும்.

நல்லவேளையாக தாஜ்மஹல் அறைகளுக்குள் சாமி சிலைகள் இல்லை என்பதாக வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு இருக்கிறது. மேல் முறையீட்டில் என்னவாகுமோ, தெரியாது !

நாட்டில் பெட்ரோல், டீசல் ஆகியவற்றின் விலை கடந்த ஒரே ஒரு ஆண் டில் மட்டும் 70 சதவீதம் அதிகரித்திருக்கிறது. பணவீக்கம் 18.08 சதமாக உயர்ந்திருக்கிறது. விளைவாக, சாமானிய மக்களின் அடிப்படைத் தேவைகளைக்கூட நிறைவு செய்ய முடியாத நிலையில், கைக்கு எட்டாது விலை உயர்ந்து, அத்தியாவசிய பொருட்கள் விண்ணில் பறக்கின்றன.

வரலாறு காணாத வகையில், அமெரிக்க டாலருக்கு இணையான ரூபாய் மதிப்பு வீழ்ச்சி அடைந்துள்ளது. இப்போது ஒரு டாலரின் விலை ரூ.77.69 ஆக உள்ளது. தொடர்ந்து இறங்கு முகம்தான். இந்தியாவின் பொருளாதாரம் 6.7 ஆக உயரும் என்று சொன்னார்கள். ஆனால் 4.6 ஆக விழுந்திருக்கிறது. இதே நிலை தொடர்ந்தால் இலங்கை போன்ற ஒரு பொருளாதார நெருக்கடி இங்கும் வரலாம்.

ஏனெனில் கடுமையான பொருளாதார நெருக்கடிகளின் போதெல்லாம் இந்தியாவைத் தூக்கிப் பிடித்து வந்த, பல துறைகளிலும் இருந்த பொதுத்துறை நிறுவனங்கள், கார்ப்பரேட் பெரு முதலாளிகளிடம் தரைமட்ட விலைக்கோ அல்லது முற்றிலும் இலவசமாகவோ தூக்கித் தரப்பட்டு வருகின்றன.

ரயில்வேயில் மூத்த குடிமக்களுக்கான கட்டணச் சலுகையை ரத்து செய்ததன் மூலம் கடந்த 13 மாதங்களில், ரூ.1500 கோடி கூடுதல் வரவு கிடைத்துவிட்டதாம். இதைச் சொல்வதில்தான் இந்த அதிகாரிகளுக்கு எவ்வளவு பெருமிதம், புளகாங்கிதம் ! ஆனால் பெரும் கார்ப்பரேட் முதலாளிகளுக்கு இவர்கள் ஆட்சியில் 10.8 லட்சம் கோடி ரூபாய் கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதை மறந்து கூடப் பேசமாட்டார்கள்.

புதியதாக வேலை வாய்ப்பு தருகிறோம் என்று முன்பு சொன்னார்கள். ஆனால் ஆறு கோடிப் பேரின் வேலை பறிக்கப்பட்டு விட்டது. வேலை வாய்ப்பு குறைந்து கொண்டே செல்கிறது. இளைஞர்களின் வேலையின்மை அதிகரிக்கிறது. இப்போது 7.83 சதவீதம் என்ற அளவில் நிற்கிறது.

தொழிலாளர் சட்டத் தொகுப்புகளை ஜூலையில் அமுல் நடத்துவதற்கு ஒன்றிய அரசு வெகுஅவசரம் காட்டுகிறது. சீக்கிரம் முடிக்கவும் செய்வார்கள். ஏனெனில் 2024க்குள் இந்தச் சட்டம் பழகி, பறிக்கப்பட்ட உரிமைகள் குறித்த முணுமுணுப்பு தொழிலாளர்களிடம் இருந்து மறைந்துவிடும் என நம்புகிறார்கள்.

இந்த அலங்கோலங்கள் அனைத்தையும் மறக்கடிப்பதற்கான வேலைதான் ஞானவாபியில் சிவலிங்கம். மதுராவில் கிருஷ்ண ஜென்மபூமி. இன்னும் வரும். 2023ம் ஆண்டு முழுமையும் மத மோதல்களை ஏற்படுத்தி, அந்த நெருப்பை அணைந்து விடாமல் விசிறிவிட்டு கொண்டே இருப்பார்கள்.

2024 தேர்தலை சந்திப்பதற்கான ஆர்எஸ்எஸ் சதித்திட்டம்தான் இது.

வேடிக்கையாகக் கூட நம்பிவிடக் கூடாது !

NEWAGE
WEEKLY
Central Organ of the Communist Party of India

தலையங்கம்
(மே. 15 - 21)

# புல்டோசர் ஆட்சியை நிறுத்து!

## அவர்களுடைய வாழிடங்களைக் கொடு!



‘அமிர்த காலம்’ என அரசு பெயரிட்டு அழைக்கும் இந்தியாவின் 75வது சுதந்திர நாள் தேசியத் தலைநகரில் புல்டோசர்களின் உறுமல்களின் அடையாளத்தோடு பவனி வருகிறது. பெரும் எண்ணிக்கையில் ஏழைகள் வசிக்கும் டெல்லியின் புறநகர் பகுதிகளுக்கு அதிகாரிகள் புல்டோசர்களுடன் வருவது தினசரி நிகழ்வானது. ஜஹாங்கீர்புரி, கோவிந்தபுரி, ஷாகீன் பாக், சரோஜினி நகர் என அந்தப் பட்டியல் நீள்கிறது. அங்கெல்லாம் ஆக்கிரமிப்பு அகற்றல் என்ற பெயரில் கோரதாண்டவம் நடத்தப்படுகிறது. இது ஆர்எஸ்எஸ் – பாஜக அரசின் வர்க்க குணத்தையும், ஏழைகள் மீதான அவர்களது அக்கறை அணுகுமுறையையும் காட்டுகிறது.

இப்பூமியில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும் தங்குவதற்கான ஓர் இடம் என்பது அடிப்படை உரிமை. பாதிக்கப்படுவோர் ஏழைகள் அல்லது முஸ்லீம்கள் என்றால் பாஜகவுக்கு அது மறந்து போகும். இது அரசியலமைப்புச் சட்ட 21ம் பிரிவை மூர்க்கத்தனமாக மீறுவது. “மனிதர்களுக்கு வாழ்வதற்கான உரிமை என்பது வெறும் மிருகங்கள்போல உயிர் வாழ்வற்கு மட்டுமானது எனக் கட்டுப்படுத்த முடியாது; அதன் பொருள் இன்னும் நீண்டு உணவு, உடை மற்றும் உறையுள் உரிமை உள்பட மனித கண்ணியத்துடன் வாழ்வது” என உச்சநீதிமன்றம் விளக்கமளித்துள்ளது. அதை அடிப்படை உரிமை என்ற நமது உச்சநீதிமன்றம் மேலும் நமது அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 19 (1) (மீ) மற்றும் சட்ட ஷரத்து 21ன்படி அது உத்தரவாதம் அளிக்கப்பட்ட உரிமையாகும் என விளக்கம் தந்துள்ளது.

ஐநாவின் ‘மனித உரிமைகளின் உலகளாவிய பிரகடனம்’ **(UDHR)**, ஒவ்வொரு தனிநபருக்கும் உண்ண உணவு, உடுத்த உடை மற்றும் மருத்துவ வசதிகளை அனுபவிப்பதுடன், திருப்தியான தரமான வாழ்க்கை வாழ்வதற்கான உரிமை உண்டு என அறிவிக்கிறது. பொருளாதாரம், சமூகம் மற்றும் பண்பாட்டு உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டின் **(CESCR)** ஷரத்து 11, வாழ்வியல் சூழல் நிலைகளைத் தொடர்ச்சியாக மேம்படுத்தும் கவனக் குவிப்புடன் ஒவ்வொருவருக்கும் போதுமான வீட்டு வசதி உரிமையை அங்கீகரித்துள்ளது. அனைத்துப் புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது மீதான சர்வதேசிய உடன்பாட்டின் ஷரத்து 43, அந்தப் புலம்பெயர் தொழிலாளர்கள் தங்கள் குடும்பங்களுடன் வசிப்பதற்கு வீட்டு வசதி பெறும் உரிமை குறித்து விவாதிக்கிறது.

மாபெரும் நகர்களுக்குப் பெருமளவில் புலம்பெயர்ந்து செல்வது புதிது அல்ல. அதற்கே உரிய காரணங்கள் மற்றும் பின்விளைவுகளுடன் அது உலகின் நடைமுறை நிகழ்வாகிறது. முக்கிய காரணம் வேளாண் துறையை மூழ்கடித்திருக்கும் நெருக்கடி; அந்நெருக்கடி கிராமப் பொருளாதாரத்தை மிக மோசமாகப் பாதித்திருக்கிறது. அதனால் பெரும் எண்ணிக்கையிலான கிராமப்புற மக்கள் வேலை, உணவு, இருப்பிடம் தேடி நகரங்களுக்குப் புலம் பெயரும் நிர்பந்தத்திற்கு ஆளாகிறார்கள். இப்படித்தான் பெரு நகரங்களுக்கு வெளியே புதிய புறநகர் பகுதிகள் உருவாகி அங்கே மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் வாழ வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகின்றனர். அது அவர்கள் தப்பிப் பிழைத்து, உயிர் வாழ்தலுக்கான கசப்பான போராட்டம்.

அங்கே மனித ஜீவன்கள் அனைத்து வகையான சவால்களையும் சந்தித்து வாழ்ந்து பின்னர், அவர்களே நகர்ப்புறத்தில் இருப்போர் வாழ்க்கைக்கு முக்கிய தேவை என்ற அளவிற்குப் பங்கு வகிப்பவர்கள் ஆவது இந்திய எதார்த்தம். 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி அரசின் புள்ளிவிபரங்களே 6கோடியே 50லட்சம் மக்கள் நகரங்களின் 10ஆயிரத்து 800 சேரிகளைச் சுற்றி வசிப்பதாகக் கூறுகின்றன. ஆனால் உண்மையான எண்ணிக்கை அரசின் புள்ளிவிபரங்களைவிட இன்னும் கூடுலாக இருக்கும் என்பது அனைவரும் அறிந்த செய்தி.

காலம் செல்லச் செல்ல நகர்ப்புறத்து மக்கள் செல்வச் செழிப்போடு அமைதியாக வாழ்க்கை நடத்திச் செல்வதற்குப்புலம்பெயர்ந்தஇந்தமக்கட் தொகுதி தவிர்க்க முடியாத அத்தியாவசியத் தேவை ஆகிவிடுகின்றனர். வசதிபடைத்த பணக்கார வீடுகளுக்கு இம்மக்கள் மதிப்பிழந்த அனைத்து வகை சிறிய உடலுழைப்பு எடுபிடி பணிகளையும் செய்து தருகின்றனர். அந்தப் பணக்காரர்களுக்கு அவர்கள்தாம் கார் ஓட்டுநர்கள், சலவை செய்வோர், கைவண்டி வியாபாரம் செய்வோர், வீட்டு வேலையாட்கள், தூய்மைப் பணி செய்வோர், ப்ளம்பர்கள், வாயிற் காவலர்கள், தோட்டக்காரர்கள், தெருவில் குப்பை பொறுக்குவோர் என அனைத்து வேலைகளையும் நகர சொகுசு வாழ்க்கைக்காகச் செய்து தருபவர்கள் அவர்கள். இந்தப் பிரிவினரின் உழைப்பு இல்லாமல் எந்த நகரமும் இன்று நிலைத்திருப்பதைக் கற்பனை செய்துகூட பார்க்க முடியாது. அவர்களே உழைப்பாளர் படையில் முக்கிய பங்கினராக உள்ளனர்.

சில சிறப்பான தருணங்களின்போது ஆட்சியாளர்கள் அவர்களது சேவையைத் தம்பிடிக்கும் பயனற்ற அர்த்தமில்லாத அடைமொழிகளால் வானளாவப் புகழ்வார்கள். தேர்தல் நேரங்களின்போது கேட்கவே வேண்டாம், பெரும் புள்ளிகள் வாக்கு கேட்டு அவர்களது சேரிகளுக்கே வருவார்கள். அடுத்த நாளே அவர்களை மறந்தும் விடுவார்கள். அந்த ஏழை பாழைகள் வாழும் இடங்களுக்குத்தான் தற்போது புல்டோசர் படை அனுப்பப்படுகிறது.

அதிகாரிகளும் பாஜக தலைவர்களும் அனுமதி பெறாத கட்டுமானங்கள் என்கிறார்கள். இந்த வாதத்தை முன் வைத்துத் தங்கள் புல்டோசர் அரசியலை நியாயப்படுத்த முயல்கிறார்கள். எங்கே நகரப் பணக்காரர்கள் குவிந்திருக்கிறார்களோ அப்பகுதிகள்தான் சட்டவிரோத கட்டட வேலைகள் பெருமளவு நடைபெறும் பகுதிகள் என்பதும் அவர்களுக்கு நன்றாகவே தெரியும். பணக்காரர்களின் மால்கள், பெரும் வணிக வளாகங்கள், கடைகள், அலுவலகங்கள், வீடுகள், தியேட்டர்கள் முதலியன அவர்கள் விரும்பும்போதெல்லாம் கட்டப்படுகின்றன அல்லது விரிவு படுத்தப்படுகின்றன. நடைபெறும் இந்தப் பெரிய கட்டட வேலைகள் அனைத்தும் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின் படிதான் நடைபெறுகின்றன என அரசால் சொல்ல முடியுமா?

புல்டோசர் அரசியல் ஆளும் வர்க்கம் கடைபிடிக்கும் இரட்டை அளவுகோல்களுக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டு நிகழ்வு. அவர்களின் சட்டத்தில் ஏழை என்றால் ஓர் அளவுகோல், பணக்காரர்கள் என்றால் வித்தியாசமான வேறு அளவுகோல். சட்டவிரோத கட்டட ஆக்கிரமிப்புகள் என்று கூறப்படும் பிரச்சனையைக் கையாளும்போதும்கூட உச்சநீதிமன்றம், முறையான எச்சரிக்கை நோட்டீஸ் வழங்குவது, மறு குடியமர்த்தல் போன்ற சில நிபந்தனைகளை விதித்துள்ளது. அத்தகைய பகுதிகளிலிருந்து காலி செய்து பெருமளவு மக்களை வெளியேற்றுவதில், அவர்களுக்கான மறுகுடியமர்த்தல் வசிப்பிடங்களுக்கான நடவடிக்கைகள் எடுப்பது தவிர்க்க முடியாதது.

பாஜக ஆட்சியாளர்களுக்கு மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக முறைகள் குறித்த அனைத்துக் கவலைகளும் முக்கியத்துவம் இல்லாதவை. பிரச்சனைகளை அவர்கள் அரசியல் பழிவாங்கல் உணர்வுடன் அணுகுகிறார்கள். மத சகிப்பின்மையும் அவர்களை வழிநடத்துகிறது. அவர்களது பைத்தியக்கார இடிப்பு நடவடிக்கைகளில் அவர்கள் மத நம்பிக்கை மற்றும் கடவுளை உள்ளே இழுக்கிறார்கள். எந்த மதத்தைச் சேர்ந்த ஏழைகளாய் இருந்தாலும் வித்தியாசமின்றி அவர்களின் வாழ்க்கையைப் புல்டோசர் அரசியல் இடித்து நாசமாக்கினாலும், ஆர்எஸ்எஸ்–பாஜக அதை இந்து–முஸ்லீம் பிரச்சனையாகச் சாயம் பூசுவதில் மிகுந்த ஆர்வத்துடன் இருக்கிறார்கள். அவர்களது பிரச்சாரப் புயல்கள் மத வன்முறை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு வதந்திகளையும், கட்டுக் கதைகளையும் பரப்புகிறார்கள். வாழ்வின் சகல பகுதிகளிலும் தோல்வி அடைந்த ஆளும் கட்சி, தேசத்திற்கு இழைக்கும் குற்ற நடவடிக்கைகளை மறைப்பதற்காக, மக்களை எப்படியாவது பிளவுபடுத்த முயல்கிறார்கள்.

2024 பொதுத் தேர்தல்களே அவர்களின் குறிக்கோள். அதற்காக மதத் தீவிரவாதிகளை முன்னணிப் படையாகத் திரட்ட நினைக்கிறார்கள். சமீபத்திய இடிப்பு நடவடிக்கைகளின் ஆய்வு இந்த உண்மையைச் சுட்டிக்காட்டுகிறது. ஏழைகள் மற்றும் சிறுபான்மையினருக்கு எதிரான வகுப்புவாதத்தால் தூண்டப்பட்ட தங்கள் பழிவாங்கல் அரசியலை அரசு நிறுத்த வேண்டும். இதுபோன்ற ஒரு வழக்கில் ஒன்றிய அரசிடம் மக்களின் மறுகுடியமர்த்தல் வேண்டுகோள் கோரிக்கை மீது முடிவெடுக்கும் வரை அந்த இடங்களில் வசிப்பவர்களுக்கு எதிராகக் கையை முறுக்கும் கடுமையான நடவடிக்கைகளை எடுக்காமல் “மனிதத் தன்மையுடன் நடந்து கொள்ளுங்கள், அதுதான் “மாதிரி அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது” என உச்ச நீதிமன்றம் கூறிய அறிவுரைகளை அவர்கள் கேட்டு மதித்து நடக்க வேண்டும்.

உச்சநீதி மன்றத்தின் உபதேசம் உறுமும் புல்டோசர் அரசின் காதுகளில் விழுமா?


தமிழில்: **நீலகண்டன்**

தத்துவார்த்தம் 29



எஸ். தோதாத்ரி

# வைசேடிகம்



**இந்தியாவின் பழமையான தத்துவங்களில் வைசேடிகமும் ஒன்று. இதை உருவாக்கியவர் கணாதர் எனப்படுகிறார். இவர் எழுதிய நூல் “வைசேடிக சூத்திரம்“ எனப்படுகிறது. பழங்காலத்திலேயே அணு பற்றி பலர் சிந்தித்து உள்ளனர். அவர்கள் இன்றைய விஞ்ஞான முறைப்படி சிந்தித்தார்கள் என்று கூறக்கூடாது. அணு பற்றிய சிந்தனைக்கு ஒரு உதாரணமாக பின்வரும் பாடலைக் கூறலாம்.**

“அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டி குறுகத் தரித்த குறள்”

இது திருக்குறள் பற்றிய பாராட்டு உரைகளில் ஒன்று. இது போன்று அணு பற்றி நமது சமய வாதிகளும் கூறியுள்ளனர்.

வைசேடிகர்கள் இதுபற்றி அதிகம் பேசியுள்ளனர். உலகம் எதிலிருந்து தோன்றியது? என்று அந்தக் காலத்திலேயே பல கேள்விகள் கேட்டுள்ளனர். இதற்கு பொருளிலிருந்து உலகம் தோன்றியது என்று வைசேடிகர்கள் கூறுகிறார்கள்.

ஆனால் உலகத்திலுள்ள பொருள்கள் பல்வேறு விதமாக இருக்கின்றன. சில பெரிய பொருள்களாக உள்ளது. சில சிறிய பொருள்களாக உள்ளது. இவற்றை எவ்வாறு விளக்குவது? வைசேடிகர்கள் இதற்கு பொருள்கள் பகுதிகளால் ஆனவை என்று பதில் தருகிறார்கள். இதற்கு அவர்கள் தரும் உதாரணம் ஆடை என்பது நூல்களால் ஆனது. ஆடையை நூல்களாகப் பிரித்துவிடலாம். பிரித்துவிட்டால் ஆடை என்ற பொருள் இருக்காது. இவ்வாறு உலகின் எல்லாப் பொருட்களையும் பிரித் துக் கொண்டே செல்லலாம். அவ்வாறு பிரித்துக் கொண்டே செல்லும் பொழுதில் எது மிகச் சிறியதாக இருக்கிறதோ அதற்கு அணு என்று பெயர். இது இறுதியான எல்லையாக உள்ளது. இந்த எல்லைக்கு மேல் என்ன உண்டு என்பது பற்றி அவர்களால் ஒன்றும் கூற இயலவில்லை.

அணுக்களைப் பிளந்து கொண்டே சென்றால் இறுதியில் ஒரு நிலை ஏற்படுகிறது. அந்த நிலையில் உள்ள மிகச் சிறிய பொருளை பரமாணு என்று அவர்கள் அழைத்தனர். உலகில் வெவ்வேறு விதமான பொருள்கள் இந்த அணுவின் சேர்க்கையால் தோன்றுகின்றன. அணுக்களின் சேர்க்கைக்கு ஏற்ப மிகச்சிறிய பொருள்களும், மிகப் பெரிய பொருள்களும் உருவாகியுள்ளன. எனவே வைசேடிகர்கள் இறுதிப் பொருளாக அணுவை ஏற்றுக் கொண்டு உலகத் தோற்றத்தை விளக்குகின்றனர்.

**நீர், நெருப்பு, காற்று, பூமி, ஆகாயம் ஆகிய ஐந்தும் பஞ்ச பூதங்கள் எனப்படுகின்றன. இவற்றின் சேர்க்கையால் உலகம் தோன்றுகிறது என்று வைசேடிகர்கள் கூறுகின்றனர். இதற்கும் மேலாகச் சென்று காலம், இடம், மனம், ஆத்மா ஆகியவற்றையும் சேர்த்துக் கொள்கின்றனர். இவ்வாறு சேர்த்துக் கொள்வதில் கருத்து முதல்வாதத்தின் தாக்கம் இருப்பதைக் காண முடிகிறது. ஏனென்றால் மனம், ஆன்மா ஆகியவற்றை பொருள் என்று கூற முடியாது. அதே போல ஆகாயத்தையும் பொருள் என்று கூற முடியாது.**

வைசேடிகத்தில் பொருள்களின் தோற்றம் பற்றி கூறுகிறார்கள். நீர், நெருப்பு, காற்று, மண் ஆகியவற்றிலுள்ள அணுக்கள் வெவ்வேறானவை என்றும், இவை இணையும் பொழுது பொருள்கள் தோன்றுகின்றன என்றும் கூறுகின்றார்கள். ஒரு அணுவானது மற்றொன்றுடன் சேர்ந்து இரண்டு அணுக்கள் ஆகின்றன. இவை வேறு ஒரு அணுவுடன் சேரும் பொழுது மூன்று அணுக்கள் ஆகின்றன. இந்த நிலையில் உலக உற்பத்தி தொடங்குகிறது. ஆனால் அணுக்கள் தானாகவே இயங்குமா? அவற்றை இயக்குவிக்க ஒரு புறத்தூண்டல் வேண்டாமா? என்ற கேள்வியை இவர்கள் முன்வைத்த போது, அதற்கு சரியான பதிலை இவர்களால் அளிக்க இயலவில்லை. இதன் காரணமாக அதிர்ஷ்டம் என்ற கருத்தை உள்ளே கொண்டு வந்தார்கள்.

பிந்தியகால வைசேடிகர்கள் மனம் அல்லது ஆன்மாவை இதற்கு காரணம் என்று கூறினார்கள். இது பொருள்முதல்வாதத்திற்கும் கருத்து முதல்வாதத்திற்கும் நடைபெற்ற போராட்டத்தின் விளைவாகும். வைசேடிகத்தைப் போன்று பொருள் பற்றிப் பேசியவர்கள் நியாயவாதிகள். நியாயம் என்பது இந்தியாவின் பழமையான தத்துவங்களில் ஒன்று. வைசேடிகர்களைப் போன்றே பொருள் பற்றி இவர்கள் பேசுவதால் நியாயம் அதனுடன் இணைந்தே காட்டப்படுகிறது. அதனால் வைசேடிகம் நியாக வைசேடிகம் என்றும் அழைக்கப்படுகின்றது. நியாயவாதிகள் பொருள் புறத்தே உள்ளது என்பதை ஏற்றுக் கொள்கின்றார்கள். கண்ணுக்கு நேர் தெரிவதை அவர்கள் ஏற்றுக்கொண்டாலும், கண்ணுக்கு நேர் தெரியாது இருக்கிறது என்றும் கூறுகின்றார்கள். உதாரணமாக கயிறு பாம்பு போல் தோன்றுகின்றது. ஆனால், அதற்காக இவர்கள் வேதவாக்கியங்களை ஏற்றுக்கொள்வதில்லை. நியாயவாதிகள் ஒன்றை நிரூபிக்க தர்க்க முறையைப் பயன்படுத்தினர். இவர்கள் அளவுக்கு வேறு எந்தத் தத்துவவாதியும் தர்க்க முறையை செழுமைப்படுத்த முடியவில்லை.

இறைவனாக இருந்தாலும் இவர்கள் தர்க்கத்திற்கு உட்படுத்தியே கண்டனர். அதற்குக் காரணம், முறை சரியாக இருக்க வேண்டும் என்பது இவர்களது கருத்து. நாம் பயன்படுத்தும் கருதுகோள் சரியாக இருந்தால், முடிவும் சரியாக இருக்கும் என்று இவர்கள் கூறினார்கள். எனவே, சரியான பிரமாணம் என்பதை இவர்கள் வலியுறுத்தினார்கள். இது இவர்களது சிறப்பு இயல்பு.

நியாயவாதிகள் தத்துவத்தில் எதார்த்த வாதிகள் எனப்படுவர். இவர்கள் பிரத்யட்சம், அனுமானம், முன்னோர் கூற்று, உவமானம் என்ற பல அளவைகளை ஏற்றுக் கொள்பவர்கள். ஆனால், இவற்றில் பிரத்யட்சத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பவர்கள்.

உதாரணமாக ஒரு மரம் இருக்கிறது; அதனை நாம் காண்கிறோம். அதனை மரம் என்று அறிகிறோம். ஆனால் இதோடு அவர்கள் நின்று விடவில்லை. பொருள் புறத்தே இருந்தாலும் அதன் குணம் அல்லது தன்மை என்பதை ஆராய வேண்டியுள்ளது.

இதன் விளைவாக தத்துவத்தில் பல சிந்தனைகள் உள்ளன. இவற்றையெல்லாம் அறிந்த நியாயவாதிகள் குணம் வேறு, பொருள் வேறு என்ற முடிவுக்கு வந்தனர். இதனை ஏற்றுக்கொள்ள உவமானம், முன்னோர் உரை ஆகியவற்றையும் பயன்படுத்தினர். இதன் காரணமாக இவர்களது தத்துவத்தில் கருத்துமுதல்வாதக் கூறுகள் இடம்பெறத் தொடங்கின. பொருள்முதல்வாதத்திற்கு நெருக்கமாக இருந்த போதிலும் சாங்கியம், வைசேடிகம் ஆகியன போன்று இதிலும் பல மாறுதல்கள் இடம்பெற்றன. ஆனால் நியாய வாதிகளின் பல கூற்றுக்களை கருத்துமுதல்வாத தத்துவாதிகள் பயன்படுத்தினர் என்பதும் உண்மை.

தொடர்புக்கு: 98947 83657

---

## பொதுத்துறை வங்கி ஊழியர்களைக் கழிசடைகள் என்று அவதூறாகப் பேசிய

# குருமூர்த்தி மன்னிப்பு கேட்க வேண்டும்

சி.ஹெச்.வெங்கடாச்சலம்

துக்ளக் ஆசிரியர் எஸ்.குருமூர்த்தி வங்கி ஊழியர்களைக் கழிசடைகள் என்று தரக்குறைவாகப் பேசியது குறித்து அகில இந்திய வங்கி ஊழியர்கள் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் சி.ஹெச். வெங்கடாச்சலம் ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமனுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பது பின்வருமாறு:

2022 மே 9 அன்று சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய எஸ்.குருமூர்த்தி பொதுத்துறை வங்கி ஊழியர்கள் குறித்து மிகவும் அநாகரிகமான, தரக்குறைவான கருத்துகளைக் கூறியுள்ளார்.

“இந்த வங்கிகள் இருக்கே, இதுல பிரச்சனை என்னவென்றால், இன்னிக்கு வங்கித்துறையில் இருக்கும் திறமையான அதிகாரிகள் எல்லாம் இந்த அரசு வங்கியில் இருந்து வெளியே போறாங்க. காரணம் என்னவென்றால் இங்கே சம்பளம் குறைச்சல், சுதந்திரம் இல்லை. இங்கே இருக்கிறது பூரா கழிசடைகள் (hair thrown away after shaving) எல்லாம் இங்க இருக்காங்க.”

நமது இந்தியா போன்ற ஒரு ஜனநாயக நாட்டில், தனிநபர் என்ற முறையில், குருமூர்த்தி தனக்கு விருப்பமான கருத்துகளைக் கொண் டிருப்பதற்கு அவருக்கு உரிமை உள்ளது. ஆனால், பொது நிகழ்ச் சிகளில் கருத்துகளை வெளியிடும் போது, அவரது உரிமை நாகரிக எல்லையின் வரம்புகளை மீறிவிடமுடியாது; மற்றவர்கள் குறித்து தரக் குறைவான, உண்மைக்குப் புறம்பான கருத்துகளை அவர் பேச வேண்டிய அவசியம் இல்லை. அவரது கருத்துகள் மிகவும் கீழ்த்த ரமானவை, அநாகரிகமானவை, வன்மையாக கண்டிக்கத் தக்கவை ஆகும். துரதிர்ஷ்டவசமாக, ஒரு பத்திரிகையின் ஆசிரியராகப் பொறுப்பு வகிப்பதுடன், இந்திய ரிசர்வ் வங்கியில் உயர் பொறுப்பு வகித்து வருகிறார் குருமூர்த்தி. எனவே, பொது நிகழ்ச்சிகள் மற்றும் அரங்குகளில் கருத்து தெரிவிக்கும் போது அவர் கவனமாகப் பேச வேண்டும்.

பிரபலமான மனிதர்கள் மற்றும் நாட்டு நடப்புகள் குறித்து கருத்து தெரிவித்து வருபவர் என்பதற்காக வங்கி ஊழியர்களின் நேர்மை, திறமை மற்றும் செயல்திறன் குறித்து அவதூறாகப் பேசுவதற்கான உரிமையைத் தான் பெற்றிருப்பதாக அவர் கருதிக் கொள்ளக்கூடாது.

போதிய பணியாளர்கள் இன்றி, உள்கட்டமைப்பு வசதிகள் இன்றி, பொதுமக்கள் தரப்பிலான ‘அதிகரிக்கும் எதிர்பார்ப் புகள்’, வங்கித்துறை அல்லாத சேவைகள் வழங்குவதில் நிர்ணயிக்கப் பட்டுள்ள இலக்குகள் என்று அளவிட முடியாத, கடுமையான மன உளைச்சல் மற்றும் அழுத்தம் நிறைந்த பணிச் சூழலில் பொதுத்துறை வங்கி ஊழியர்களும், அலுவலர்களும் பணியாற்றி வருகிறார்கள். எண்ணற்ற இடையூறுகளுக்கு மத்தியில், வங்கி ஊழியர்கள் அர்ப்பணிப்பு உணர்வுடனும், சிரத்தையுடனும் பணி யாற்றி வருகிறார்கள். குறிப்பிட்டுச் சொல்வதானால், அரசாங் கத்தின் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதில் முக்கிய பங் காற்றுகிறார்கள். எனவே, பொதுத்துறை வங்கி ஊழியர்களைக் கழிசடைகள், திறமையற்றவர்கள், தனியார் வங்கிகளுக்குச் செல்ல முடியாதவர்கள் என்று அவர் கூறிய கருத்துகள் அவதூறானவை மற்றும் கீழ்த்தரமானவை ஆகும். அவரது கருத்துகள் வரம்பு மீறியவை என்பதால் வன்மையாக கண்டிக்கிறோம்.

மாண்புமிகு நிதியமைச்சர் முன்னிலையில், வங்கித்துறை குறித்த கேள்வி ஒன்றுக்கு, வரம்புமீறி ஆணவப் போக்குடன், தான்தோன்றித்தனமாக, ஆநாகரிகமான கருத்துகளை அவர் பேசி யிருப்பது, எங்கும், எதிலும், எதைப் பற்றியும் தன் இஷ்டப்படி பேசி விடலாம் என்ற அவரது மமதையின் வெளிப்பாடு ஆகும்.

குறிப்பிட்ட இந்த நிகழ்ச்சியில் நீங்கள் உரையாற்றும் போது, வங்கித்துறை ஊழியர்களின் பங்களிப்பு பற்றி, குறிப்பாக பெருந் தொற்று காலத்தின் போது, வங்கித்துறை ஊழியர்களின் பங்க ளிப்பு மற்றும் சேவைகளை மிகத் தெளிவாக அங்கீகரித்து, பாராட் டிப் பேசியமைக்காக உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறோம். அவதூறான கருத்துகளைத் குருமூர்த்தி தெரிவித்த போது, அவற்றை மறுக்கும் வகையில் நீங்கள் தலையசைத்ததைக் காணொளி வாயிலாக நாட்டு மக்கள் அனைவரும் காண முடிந்தது. எனினும், அவரது கருத்துகளை உங்களின் பேச்சின் போது, நீங்கள் மறுத்திருக்க வேண்டும் என்று வங்கி ஊழியர்கள் எதிர்பார்த்தனர்.

பெருந்தொற்று – ஊரடங்கு காலத்தில் தங்கள் உயிரையும் பொருட் படுத்தாமல், சோதனைகள் மற்றும் வேதனைகளைப் புறந்தள்ளிவிட்டு மக்களுக்காகச் சேவையாற்றிட பொதுத்துறை வங்கிகளைச் சார்ந்த இலட்சக்கணக்கான ஊழியர்கள் மற்றும் அலுவலர்கள் வங்கி கிளைகளுக்குச் சென்று பணியாற்றினார்கள் என்பதை ஊரடங்கு காலத்தின் போது, தனது வீட்டிற்குள் முடங்கிக் கிடந்த குருமூர்த்தி அறிந்து கொள்ள வேண்டும். மேலும் சொல்வதானால், பல ஊழியர்கள் பணியின்போது தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளனர்.

வங்கி ஊழியர்களின் போராட்டத்தால் தான் வங்கிகள் நாட்டு டைமையாக்கப்பட்டன. அதன் காரணமாகத்தான் மேல்தட்டு மக்க ளுக்கான வங்கிச் சேவையானது வெகுமக்களுக்கான வங்கிச் சேவையாக மாற்றம் கண்டது. அண்மைக் காலத்தில் ‘ஜன் தன் திட்டத்தின்’ மூலமாக சாமானிய மக்களும் வங்கிச் சேவைகளைப் பெற்றிட உழைத்தவர்கள் வங்கி ஊழியர்கள் தான் என்பதைத் திரு குருமூர்த்தி தெரிந்து கொள்ள வேண்டும்.

அண்மைக் காலங்களில், அதிகம் படித்த, மிகத் திறமை வாய்ந்த இளைஞர்கள் கடுமையான போட்டிகளைக் கடந்து வங்கிப் பணிகளில் சேர்ந்து வருகிறார்கள். தனியார் வங்கிகள் மற்றும் நிறுவனங்களில் பணியாற்றிய எண்ணற்ற இளைஞர்கள், பொதுத்துறை வங்கிப் பணிகளில் சேருவதற்காக அவர்களின் வேலைகளையும் தூக்கி எறிந்தனர் என்பதையும் குருமூர்த்தி தெரிந்து கொள்ள வேண்டும். இது போன்ற வங்கி ஊழியர்கள் மற்றும் அலுவலர்களைக் கழிசடைகள் என்றும், திறமையற்றவர்கள் என்றும் கூறுவது அவரின் அறியாமை மற்றும் பேதைமையை அம்பலப்படுத்துகிறது.

பொதுத்துறை வங்கிகளில் உள்ள அரசாங்கத்தின் பங்குகள் 49 சதவிகிதமாக குறைக்கப்பட்டால், மத்திய புலனாய்வு நிறுவனம், மத்திய கண்காணிப்பு ஆணையம் உள்ளிட்ட அமைப்புகளின் வரம்பிற்கு வெளியே வங்கிகளைக் கொண்டு வந்துவிடலாம் என்ற அவரது கருத்து குறித்து இங்கு நாங்கள் விவாதிக்க விரும்பவில்லை. வங்கிகள் பொதுமக்கள் பணத்தைக் கையாளுகின்றன. எனவே, பொதுமக்களுக்கு பதிலளிக்க வேண்டிய பொறுப்பும் வங்கிகளுக்கு உண்டு. பொதுமக்களின் சேமிப்பு பணத்தைக் கையாளும் அமைப்புகள் அனைத்தும் அரசாங்க முகமைகளால் தீவிரமாக கண்காணிக்கப்பட வேண்டும்.

அவரது கருத்துகள் பிற்போக்கானவை ஆகும். மத்திய புலனாய்வு நிறுவனம் மற்றும் மத்திய கண்காணிப்பு ஆணையம் உள்ளிட்ட விசாரணை அமைப்புகளின் வரம்புக்குள் தனியார் வங்கிகளும் கொண்டு வரப்பட வேண்டும்.

பொதுத்துறை வங்கி ஊழியர்களைக் கழிசடைகள் என்று அவ தூறாகப் பேசிய திரு குருமூர்த்தியின் கருத்துகள் வங்கி ஊழியர்கள் மற்றும் அலுவலர்களின் மன உணர்வுகளை மிகவும் காயப்படுத்தி உள்ளது. எனவே, அவர் தெரிவித்த மோசமான கருத்துகளுக்காக, குருமூர்த்தி வருத்தம் தெரிவித்து, மன்னிப்பு கேட்க வேண்டும் என்ற நியாயமான கோரிக்கையை வங்கி ஊழியர்கள் வலியுறுத்துகிறார்கள்.

பொதுவெளியில் கருத்துகளை எவ்வாறு வெளிப்படுத்த வேண் டும் என்பது பற்றிய புரிதல் இன்றி, பொதுத்துறை வங்கிகள் மற்றும் அவற்றின் ஊழியர்கள் குறித்த புரிதலைத் திரித்துக் கூறிய குரு மூர்த்தி போன்ற நபர் ரிசர்வ் வங்கியின் உயர் பொறுப்புகளில் தொடரக் கூடாது என்று நாங்கள் வலியுறுத்துகிறோம்.

இவ்வாறு சி.ஹெச்.வெங்கடாச்சலம் ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமனுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.



எஸ்.காசிவிஸ்வநாதன்

# நினைவுகளுக்கு மரணமில்லை!

**அந்த நாள் வராமலேயே இருந்திருக்கக் கூடாதா? இளைய தலைமுறை தெரிந்துகொள்ளவேண்டிய மாபெரும் தலைவர் தோழர் கே.பாலதண்டாயுதம் ..மூத்த தோழர்களின் நினைவுத் தடங்களில் அழியாத வரம் பெற்றவர்..31.5.1973-ல் வானவீதியில் நெருப்பில் எரிந்து விண்ணோடு கலந்தார்.**

எத்தனை எத்தனை போராட்டம் அதில் பாலன் முன் நின்றார். இளமை என்னும் வசந்தத்தை, தலைமறைவு வாழ்க்கையிலும் சிறைச்சாலையிலிருந்தும் கழித்தார்.திரும்ப, திரும்ப இளம் தோழர்களுக்கு நினைவுபடுத்த வேண்டிய மகத்தான தலைவர் தோழர் பாலன்.

பொள்ளாச்சி அருகிலுள்ள மாக்கினாம்பட்டி கிராமத்தில் செல்வச் செழிப்புள்ள குடும்பத்தில் 4.4.1918ம் நாள் பிறந்தவர். 54 வயதுகளே வாழ்ந்த அந்த மாபெரும் தலைவர் விமான விபத்தில் மறைந்தார். இளமையிலேயே தன்னையொத்த பிள்ளைகளைக் கொண்டு 'வானர சேனை' என்ற பெயரில் ஒரு படையை அமைத்து பல நன்மைகளை மக்களுக்குச் செய்தார்.இந்திய நாட்டின் விடுதலைக்காக வெள்ளையரை எதிர்த்து வெஞ்சமரில் வீழ்ந்த பகத்சிங், ராஜகுரு, சுகதேவ்.. 1931ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23ஆம் தேதி மாலை வேளையில் தூக்கிலிடப்பட்டார்கள். செய்திகேட்டு துடிக்கின்ற பாலனின் வயது 13 தான். தியாகத்தைப் பற்றி செய்தி பார்த்த மாவீரன். தன் கால்களுக்கு விலங்கிட்டு கொண்டான். கால்களில் ஆணிகளை சம்மட்டியால் அடித்து செருகினான். நெஞ்சம் துடி துடிக்க வேதனையுடன் வேகமாக ஓடிப் பார்த்த பாலன் சோதனையில் வெற்றி பெற்றான்.துடிக்கும் ரத்தம் சிந்தியது. துணிந்த நெஞ்சம் நிமிர்ந்தது.

திருச்சி செயிண்ட் ஜோசப் கல்லூரியில் மேற்படிப்பு படித்தவர். பிஎஸ்சி படிப்புக்காக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். சோஷலிச கருத்துக் கொண்ட மாணவர்களை அணி திரட்டினார். காம்ரேட்ஸ் கிளப் என்ற பெயரில் ஒரு அமைப்பை ஏற்படுத்தினார். கேரளத்தில் இருந்து தமிழகம் வந்த தோழர் சுப்பிரமணிய சர்மாவுடன் தொடர்பு ஏற்பட்டது. பாலன் அரசியல் தெளிவு பெற்று மாணவர் போராட்டங்களுக்கு தலைமை ஏற்றார். அதனால் பழி வாங்கப்பட்ட பாலதண்டாயுதம் பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேற்றப்பட்டு நெல்லை மாவட்டம் வந்தார்.

வற்றாத தாமிரபரணி ஓடுகின்ற மண்ணிலே பஞ்சம். 1945ஆம் ஆண்டில் ஏற்பட்ட உணவு பஞ்சத்தை போக்க உணவு தானியத்தை கொள்முதல் செய்ய கம்யூனிஸ்ட் கட்சி வற்புறுத்தியது. எங்கே கொள்முதல் செய்ய அதிகாரிகள் கேட்டார்கள். பதுக்கல் நெல்லை கண்டுபிடித்து கைப்பற்றித் தருகிறோம் என பாலன் சவால்விட்டு ஏழே நாளில் 7000 கோட்டை நெல்லைக் கைப்பற்றி வெற்றிகரமான இயக்கத்தை நடத்தினார்.

நியாயவிலைக் கடைகளில் போடப்பட்ட உளுத்த சோளத்தை நிறுத்தும்படி வற்புறுத்தி 'உளுத்தச் சோளம் ஒழிப்பு இயக்கத்'தை தலைமை தாங்கி நடத்தினார். கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கு மக்கள் மத்தியில் பரவியது. தூத்துக்குடி மில் தொழிலாளர் சங்கத்தின் தலைவராகவும், தோணித் தொழிலாளர் சங்கத்தின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். நெல்லை மாவட்டத்தில் ஐக்கிய பீடி தொழிலாளர் சங்கம், ஹோட்டல் தொழிலாளர் சங்கம், அச்சுத் தொழிலாளர் சங்கம் போன்ற சங்கங்களை உருவாக்கினார். தமிழ்நாடு மாணவர் சம்மேளன செயலாளராக இருந்து செயல்பட்டார். ப.மாணிக்கத்தை நெல்லை மாவட்டத்திற்கு அழைத்து வந்து மாணவர் இயக்கங்களை கட்ட உதவி செய்தார். 1945ஜூலையில் நெல்லை மாவட்டத்தில் நடைபெற்ற ரயில்வே தொழிலாளர் மாநாடு மக்களுக்காக ரயில்வே என்ற கோஷத்தின் கீழ் ரயில்வே உபயோகிப்போர் மாநாடும் நடைபெற்றது. பாலனின் எழுச்சி மிகுந்த முழக்கம் மக்களை பொங்கி எழ வைத்தது.



**விக்கிரமசிங்கபுரத்தில் பெருவாரியான தொழிலாளர்களால் அங் கீகரிக்கப்பட்ட சங்கம் பஞ் சாலைத் தொழிலாளர் சங்கம் தான் என ஓட்டெடுப்பு மூலம் அங்கீகாரம் பெறுவதற்கு பாலனின் அரசியல் போதனையே முக்கிய காரணம்.**

1946 மே தினத்தை கொண்டாட திட்டம் தீட்டப்பட்டது. இதனால் ஆத்திரமும் எரிச்சலும் கொண்ட வெள்ளை நிர்வாகமும், நிர்வாகத்திற்கு ஆதரவான எஸ்.ஆர்.வி உள் சங்கமும் பயங்கரமான தாக்குதலை துவக்கினார்கள். கொலை ஆயுதங்களோடு தெருக்களில் புறப்பட்டார்கள். கொடிக் கம்பங்களை வெட்டினார்கள். ஒரு கம்பத்தை வெட்டும்போது முத்துக்குமாரசாமி என்ற தொழிலாளி "என்னை வெட்டு, செங்கொடிக் கம்பத்தை வெட்டாதே" என்று கொடிக்கம்பத்தை உடலோடு சேர்த்து கட்டிக் கொண்டார். 30 வெட்டுக்கள் அவர் மீது விழுந்தது. செங்கொடி மேலும் சிகப்பு ஏறியது.

ரவுடிகளை கல் எறிந்து மக்களே விரட்டி அடித்தார்கள். அந்த கலகத்தில் ரவுடி ஒருவன் மரணமடைந்தான். சிங்கையில் தொழிலாளர்களுக்கும், போலீசுக்கும் எந்த நேரத்தில் மோதல் ஏற்பட்டு விடுமோ என்ற நிலை இருந்தது. பாலன் தொழிலாளர்களுக்கு அரசியல் போதனையும், வர்க்க உணர்வும், வீரமும் ஏற்றி வைத்திருந்தார். ஒரு தொழிலாளி லீவு கேட்டதிற்கு நிர்வாகம் கொடுக்கவில்லை. மில்லுக்குள்ளேயே தொழிலாளி இறந்து போனார். பிரேதத்தை அகற்றுவதற்கு போலீஸ் படையுடன் நிர்வாகம் முயன்றது. தொழிலாளர்கள் திரண்டு எழுந்தார்கள். தொழிலாளர்களை போலீசார் வெறிகொண்டு சுட்டனர். பலர் படுகாயம் அடைந்தனர். எங்கும் ரத்தம். ரத்தவெள்ளத்தில் தோழர்கள் அருணாச்சலம், அயினி மஸ்தான் தியாகிகள் ஆனார்கள்.

பேராசிரியர் நா.வானமாமலை, தொ.மு.சி.ரகுநாதன், வழக்கறிஞர் என்.டி.வானமாமலை, வி எஸ்.காந்தி, கே செல்லையா,சோ. அழகர்சாமி, எஸ்.எஸ் தியாகராஜன் என பலரையும் செதுக்கி மக்கள் இயக்கத்தில், கம்யூனிஸ்ட் கட்சியில் செயல்படுத்தும் ஆற்றலைப் பெற்றவர் தோழர் பாலன்.. ஜீவாவின் வழியில் பாரதியையும் கம்பனையும் மக்களுக்கு கொண்டு சென்றவர். இலக்கியத்தில் தணியாத தாகம் கொண்டவர்.சிம்ம குரலுக்குச் சொந்தக்காரர் சீரிய தமிழை மக்கள் மத்தியில் வளர்த்தவர்.

1948 ஜனவரியில், முறைப்படுத்தப்பட்ட நெல்லை மாவட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் மாநாடு பாளையங்கோட்டை வண்ணாரப்பேட்டையில் நடைபெற்றது. தோழர் பாலதண்டாயுதம் எழுத்துப்பூர்வ அறிக்கையை சமர்ப்பித்தார். தோழர் சீனிவாசராவ் பங்கேற்றார். ப.மாணிக்கம் மாவட்ட செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கல்கத்தாவில் நடைபெற்ற கட்சி காங்கிரசுக்கு பிறகு கட்சியின் நடைமுறை மாறியது. கட்சி தடை செய்யப்பட்டது. பாலன் தலைமறைவு ஆனார். மக்கள் மத்தியில் தலைமறைவு வாழ்க்கையை நடத்தினார்.

1949இல் உணவுப் பொருட்களும் உணவுக் கட்டுப்பாட்டின் விளைவாக மக்கள் பெரிதும் கஷ்டப்பட்டார்கள். பதுக்கலை எடுத்து மக்களுக்கு விநியோகம் செய்யும் இயக்கம் சிவகிரியில் தொடங்கியது. உணவு தானியத்தை கொள்ளையடித்தார்கள் என்று வழக்கும் போடப்பட்டது.

1948, 49, 50ல் கம்யூனிஸ்டுகளின் மீது நாடு முழுவதும் சதி வழக்குகள் போடப்பட்டன. அதுபோல நெல்லை சதி வழக்கு போடப்பட்டது. 67 தோழர்கள் மீது 3 ஆண்டுகள் வழக்கு நடந்தது. கொடுமையான சித்திரவதைகளுக்கு தோழர்கள் உள்ளாக்கப்பட்டார்கள். தோழர்கள் பொன்னு, கே.பி.எஸ்.மணி, ப.மாணிக்கம், வேலாயுதம், அழகுமுத்து, ஆர்.வேலுச்சாமி தேவர், ஐ.மாயாண்டி பாரதி, இரா.நல்லகண்ணு ஆகிய எட்டு பேர்களுக்கு ஆயுள் தண்டனையும், பெருமாள், ஆர்.வி. அனந்தகிருஷ்ணன், தூத்துக்குடி ராமச்சந்திரன், சண்முகவேல், முனிசாமி, காசி, அண்ணாமலை, சொர்ணம் ஆகிய ஆறு பேருக்கும் 5 ஆண்டு தண்டனையும் வழங்கப்பட்டது.

1948 இல் இருந்து தலைமறைவாக இருந்த தோழர்கள் பாலன், மீனாட்சி நாதன், கிருஷ்ண கோனார், பயில்வான் அருணாச்சலம் ஆகிய 4 பேர் மீதும் தனியாக சதி வழக்கு விசாரணை நடைபெற்றது. பாலனுக்கும், மீனாட்சி நாதனுக்கும் ஆயுள் தண்டனைக் கிருஷ்ண கோனாருக்கும், பயில்வான் அருணாசலத்திற்கு நான்காண்டு சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

**சிறை குள்ளும் போராட்டம்...**
**வெளியிலும் போராட்டம்!**
**தொடக்கங்களே முடிவுகள்,**
**முடிவுகளே தொடக்கங்கள்**
**என்பது வேதாந்தமாக**
**இருக்கலாம்!. எனினும்**
**நெருப்பில் நடந்து**
**நீந்தி வளர்ந்த நீ..எம்**
**தலைநகரத்து வான வீதியில்**
**நெருப்புக் கொழுந்தாய்**
**சுழன்று முடிந்ததொரு**
**அக்கினி வளையச்**
**சரித்திரம் படைத்தாய்**
**உனது**
**தொடக்கமும் முடிவும்**
**நெருப்பு பயணம் ஆயின**
**அந்த முடிவின் கனலை**
**எங்கள்**
**தொடக்கங்களில்**
**எப்போதும் சுடராய்**
**ஏந்தி இருப்பதால்**
**உன் நினைவுகளுக்கு**
**மரணமில்லை ஒருநாளும்**
**இல்லை**
**(கவிஞர் கே.சி.எஸ். அருணாச்சலம்)**

*(தோழர் கே.பாலதண்டாயுதம் நினைவு நாள் மே–31)*

தொடர்புக்கு: **94434 68710**

# தோழர் தா.பாண்டியன் அவர்கள் பிறந்த தினம்




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநில செயலாளர், மறைந்த அருமை தோழர் தா.பாண்டியன் அவர்களது பிறந்த தினம், அவர் பிறந்த வெள்ளமலைப்பட்டியில் உள்ள தோட்டத்தில் நடைபெற்றது.

அவரது நினைவை போற்றும் விதமாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் கலந்து கொண்டார். மாநில நிர்வாக குழு உறுப்பினர் வெ.அழகிரிசாமி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர்கள் மதுரை புறநகர் ப.காளிதாஸ், தேனி கி.பெருமாள், மதுரை மாவட்ட ஏஐடியூசி போக்குவரத்து தொழிற்சங்கத்தின் தலைவர் உசிலை ஜீவா, தங்கமலை உட்பட திரளான தோழர்கள் அவரது நினைவிடத்தில் மலரஞ்சலி செலுத்தினர்.

## பி.லிங்கம் எக்ஸ்.எம்.பி.

# சகோதரி மறைவு

## தலைவர்கள் ஆறுதல்



விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பில் இந்திய கம்யூ னிஸ்ட் கட்சியின் விருதுநகர் மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி அக்கா மஞ்சனபேச்சி உடல்நலக்குறைவால் சிகிச்சை பலனின்றி மருத்துவமனையில் மரணமடைந்தார். (அக்கா மகளைதான் பி.லிங்கம் மணந்துள்ளார்) அவரது உடல் அஞ்சலிக்காக வத்திராயிருப்பு அவரது வீட்டில் வைக்கப்பட்டிருந்தது.

அவரது உடலுக்கு மாநில நிர்வாககுழு உறுப்பினர்கள் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, வி.அழகிரிசாமி எக்ஸ் எம்பி, மாவட்ட துணை செயலாளர் எஸ் .பழனிக்குமார், மாநிலக்குழு உறுப்பினர்கள் செந்தில்குமார், பாலமுருகன், மாவட்ட நிர்வாககுழு உறுப்பினர்கள் கோவிந்தன், சுவாமிநாதன், சக்கணன், சீனிவாசன், ஏஐடியுசி செல்வம் உள்பட நிர்வாகிகள் நேரில் சென்று மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

மறைந்த மஞ்சனபேச்சிக்கு கணவர் மகாலிங்கம், சுந்தரம்மாள், லிங்கம்மாள், சுந்தரவள்ளி ஆகிய 3 மகள்ளும், சுந்தரமூர்த்தி, செந்தட்டி பாண்டியன், முத்துக்காளை, சந்திரன் ஆகிய ஆகிய 4மகன்களும் உள்ளனர். தேசியபொது செயலாளர் டி.ராஜா எக்ஸ் எம்பி, மாநில செயலாளர் இரா. முத்தரசன், தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் சி.மகேந்திரன், மாநில துணை செயலாளர் மு.வீரபாண்டியன், ஜனசக்தி த.லெனின் ஆகியோர் பி.லிங்கத்திடம் தொலைபேசியில் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்தனர்.

# சங்கே முழங்கு!



## நிர்மலா சீத்தாராமன் முன்னிலையில் வங்கிப்பணியாளர்கள் மீது

# குருமூர்த்தி அவதூறு பேச்சு

## கே.சுப்பராயன் எம்.பி. கண்டனம்

**ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களுக்கு, திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் அவர்கள் எழுதிய கடிதம் வருமாறு:**

வங்கி அதிகாரிகள் பற்றி தரக்குறைவான விமர்சனத்தை தாங்கள் இருந்த மேடையிலேயே வெளிப்படுத்திய குருமூர்த்தியின் பேச்சு தொடர்பாக தங்களுடைய மேலான நடவடிக்கையை கோருகிற வகையில் கீழ்க்கண்ட தகவலை உங்களுக்கு அனுப்ப நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மே 9, 2022 அன்று சென்னையில் நடைபெற்ற துக்ளக்கின் 52வது ஆண்டு விழாவில், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் அதிகாரிகளைப் பற்றி, அந்தப்பத்திரிகையின் ஆசிரியர் ஜி.குருமூர்த்தி தரக்குறைவான கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். இது மிகவும் மோசமான அவதூறு மட்டுமல்ல, முற்றிலும் கண்டிக்கத்தக்கதுமாகும். இந்தக் கருத்து எந்தவிதமான பண்பாடும் இல்லாமல் அதீத அநாகரிகமான முறையில் சொல்லப்பட்டிருக்கிறது.

நீங்கள் மேடையில் இருந்தீர்கள் என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டிய கட்டாயத்தில் உள்ளேன். இந்த இழிவான கருத்துள்ள பேச்சு உங்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்தாதது குறித்து நான் ஆச்சரியப்படுகிறேன். ஜி. குருமூர்த்தி, “கழிசடை” என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார். இதைத் தமிழ் அகராதி “கழிவு” என்று மொழிபெயர்க்கிறது. நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் பணி புரிந்த திறமை வாய்ந்த நல்ல பயிற்சி பெற்ற ஆட்கள் தனியார் துறை வங்கிகளில் உள்ள முக்கியமான பதவிகளுக்கு சென்று விட்டார்கள் என்று ஒரு தவறான கருத்தை பொதுவெளியில் சொல்லியிருக்கிறார். தற்போதுள்ள வங்கி அதிகாரிகளை “கழிசடை” என்று விமர்சிப்பது மிகவும் அருவருப்பான செயலாகும்.

தனியார் வங்கிகளின் அதிகாரிகளை ஏதோ சில கார ணங்களுக்காக புகழாரம் செய்து விட்டு மிகுந்த உற்சா கத்துடன் அமர்ந்திருக்கிறார். ஆனால் இப்படி இழிவான வார்த்தைகளில் வசைபாடுவதற்கும், குற்றஞ்சாட்டுவதற்கும் நியாயமான காரணங்கள் எதுவும் இல்லை. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மரியாதைமிக்க அதிகாரிகளைப் பற்றிய தவறான விமர்சனத்தையும், இழிவான கருத்தையும் வெளியிட அவருக்கு எந்த தார்மீக உரிமையும் இல்லை. இது ஒட்டுமொத்தமான தேசியமயமாக்கப்பட்ட வங்கித் துறையின் மீதான வெளிப்படையான மற்றும் வெறுக்கத்தக்க கருத்து வெளிப்பாடாகும். இது கடும் ஆட்சேபனைக்குரியது. இதற்காக அவர் நிச்சயமாக, உடனடியாக பொது மன்னிப்பு கோரும் தேவையிருக்கிறது.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் செயல்பாடுகள் குறித்த அவரது கருத்தில் உள்ள நன்மை தீமைகள் குறித்து விவாதிப்பதற்கு நான் விரும்பவில்லை.

பொருளாதார நெருக்கடியின் போது உலகப் பொருளாதாரம் அதலபாதாளத்தில் மூழ்கியபோது, பொருளாதாரத்தை ஸ்திரமாகவும், சரியான நிலையில் தொடர்ந்து வளர்ச்சிப்பாதையில் கொண்டுசெல்லவும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் பங்களிப்பை வரலாறு மீண்டும் மீண்டும் நிரூபித்துள்ளது.

ஜி.குருமூர்த்தியினால் பாராட்டப்படுகிற தனியார் வங்கிகளில் தொடர்ந்து நடக்கும் மோசடிகள் மற்றும் முறைகேடுகளை மக்கள் நன்றாக அறிவார்கள். குருமூர்த்தியின் அவதூறான பேச்சு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் பணியாளர்களை ஆழமாகக் காயப்படுத்தியுள்ளது. இந்தக் கருத்து, அந்தந்தத் துறைகளில் தங்கள் பணியை மதித்து கௌரவமாகச் செயலாற்றும் அனைவர் மத்தியிலும் ஒரு தீவிரமான கோபத்தையும், வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது. குருமூர்த்தி தேசியமயமாக்கப்பட்ட வங்கிப்பணியாளர்களிடம் நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்க வேண்டும்.

தாங்கள் நிதியமைச்சர் என்பதாலும், வங்கிகளின் தலைவராக இருப்பதாலும், நீங்கள் பங்கேற்ற மேடை இந்தச் செயலுக்கான வாய்ப்பை வழங்கியதாலும் நான் உங்களைத் தொடர்பு கொள்கிறேன். நீங்கள் பிரச்சினையின் தீவிரத்தை புரிந்துகொண்டு, குருமூர்த்தி தன்னை திருத்திக்கொள்ள வேண்டும் என்ற முறையில் தலையிடுவீர்கள் என்று நம்புகிறேன்.

இவ்வாறு கே.சுப்பராயன் எம்.பி. எழுதியுள்ள கடிதத்தில் கூறியுள்ளார்.



எஸ்.சிவக்குமார்

### 4ஜி கருவிகள் வாங்க பி.எஸ்.என்.எல்.நிறுவனம் வழங்கியுள்ள

# உத்தரவா கண் துடைப்பா?



**4ஜி சேவைக்காக CDOT/TCS நான் குவாலிஃபைடு ட்ரயல் 4ஜி கருவிகள் வாங்க பி.எஸ்.என்.எல். நிறுவனம் வழங்கியுள்ள கண்துடைப்பு உத்தரவு, நீண்ட காலமாகப் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட பி.எஸ்.என்.எல். நிறுவனத்தின் வளர்ச்சி மாற்றத்தை நிச்சயமாகச் சிக்கலில் ஆழ்த்தப் போகிறது.**

பி.எஸ்.என்.எல். நிறுவனத்தின் ஊழியர்கள் பெரும் எதிர்பார்ப்புடன் விருப்ப ஓய்வுத் திட்டம் 2019 மற்றும் 4ஜி உள்ளிட்ட ரூ70ஆயிரம் கோடி பி.எஸ்.என்.எல். புத்துயிர்ப்பு தொகுப்புத் திட்டத்தை 2019 அக்டோபரில் ஒப்புக்கொண்டனர். லாபம் ஈட்டும் ஆரோக்கியமான பொதுத்துறை நிறுவனமாக பி.எஸ்.என்.எல். தழைக்கும் என்றும், அனைத்து ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் 3வது ஊதிய மாற்றத்தைப் பெறுவார்கள் என்றும் ஒவ்வொருவரும் நம்பினர். துரதிருஷ்டவசமாக விருப்ப ஓய்வுத் திட்டம் மற்றும் ரூ8500 கோடி அளவுக்கு பி.எஸ்.என்.எல். க்கு (அரசின்) உத்தரவாதம் தவிர வேறு எதுவும் நடைபெறவில்லை.

இப்போதும்கூட நிறுவனம் மிகவும் கடினமான காலத்தைக் கடந்து வருகிறது, கடுமையான நிதி நெருக்கடியைச் சந்தித்து வருகிறது. புத்துயிர்ப்புத் திட்டத்தால் கிடைத்த ஒரே ஆதாயம், நிதியாண்டு 2019–20ல் நிறுவனம் அடைந்த ரூ15,000 கோடி நட்டத்திலிருந்து 2020–21 நிதியாண்டில் நட்டம் ரூ7,500 கோடி எனப் பாதியாக குறைந்ததுதான். நட்டத்தின் இந்த மேஜிக் வீழ்ச்சி, விருப்ப ஓய்வு திட்டம் 2019ன் காரணமாக நிறுவனத்தின் மொத்த ஊழியர்களில் சுமார் பாதி, அதாவது 78,569 ஊழியர்கள், விருப்ப ஓய்வைத் தேர்வு செய்ததே ஆகும்.

ஒரு நிறுவனத்தின் செயல்பாட்டுத் திறனை மதிப்பிடுவதற்கான நான்கு அளவுகோல்கள் 1) லாபம் / நட்டம் 2) வருவாய் 3) நிறுவனத்தின் நிகர மதிப்பு மற்றும் 4) அதன் கணக்கில் உள்ள கடன். அந்த வகையில் மதிப்பிட பி.எஸ்.என்.எல். எதிர்காலமும் நம்பிக்கை தருவதாக இல்லை.

### நிறுவனம் நாள் தோறும் 20 கோடிக்கு மேல் நட்டத்தில் நடக்கிறது:

நிறுவனத்தின் செயல் இயக்கங்களிலிருந்து வருமானம் நிதியாண்டு 2019–20ன் வருமானமான ரூ18,906.56 கோடியை ஒப்பிட, நிதியாண்டு 2020–21ன் வருவாய் மாதம் தோறும் 1500கோடியுடன், 1.6% குறைந்து ரூ18,595.12 கோடியாக அறிவிக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டு 2021–22ன் வருவாய் ரூ17 ஆயிரம் கோடி மட்டுமே எதிர்பார்க்கப்படுகிறது, இது அபாயகரமான அளவு குறைவானதாகும்.

பி.எஸ்.என்.எல். நிறுவனத்தின் நிகர மதிப்பு அதற்கு முந்தைய நிதியாண்டில் இருந்த ரூ59,139.82 கோடியிலிருந்து கீழே இறங்கி 2021 நிதியாண்டின்போது ரூ51,686.8 கோடியாக குறைந்துள்ளது.

2019–20ம் நிதியாண்டில் நிறுவனத்தின் கடன் ரூ 21,674.74கோடி. இக்கடன் 2020 – 21ம் நிதியாண்டில் அதிகரித்து ரூ27,033.6 கோடியாகியுள்ளது. இப்போது கடன் 32ஆயிரம் கோடி ரூபாய் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### இந்தியாவில் 4-ஜி தொழில்நுட்ப சேவை:

இந்தியாவில் முதன் முதலாக 4ஜி தொலைத்தொடர்பு வலைப்பின்னல் ஏர்டெல் நிறுவனத்தால் 2012ம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. மொபைல் நெட்ஒர்க்கில் 4ஜி கிடைப்பதற்கு மேலும் இரண்டாண்டு ஆகி, ஏர்டெல் நிறுவனம் 2014ல் 4ஜி மொபைல் நெட்ஒர்க்கைத் தொடங்கியது. செய்தி நிறுவனங்களின் தகவல்களின்படி நமது அரசு 5ஜி அலைக்கற்றை ஏலத்தை 2022ம் ஆண்டின் இரண்டாவது பாதியில் நடத்தத் திட்டமிட்டுள்ளது; மேலும் அடுத்த தலைமுறை கம்பியில்லா பிராடு பாண்டு நெட்ஒர்க்ஸ் 5ஜியை பின்னர் 2023ல் வெளியிடவும் திட்டமிட்டுள்ளது.

இந்தியாவில் புதிய தலைமுறை தொழில்நுட்பம் அறிமுகமாகி 10 ஆண்டுகள் கடந்த பிறகும், இந்திய அரசுக்குச் சொந்தமான பொதுத்துறை நிறுவனமான பி.எஸ்.என்.எல். நிறுவனத்திற்கு 4ஜி சேவை அளிக்க இன்னும் அனுமதி அளிக்கப்படவில்லை.

உலகம் முழுமையும் 5ஜி மற்றும் அதற்கு மேல் உள்ள தொழில்நுட்பங்களுக்கு மாறி நகர்ந்து வரும்போது, 4ஜி என்பது காலம் கடந்த, வழக்கொழிந்த பழைய தொழில்நுட்பமாகி விடும். எனினும் 4ஜி, பி.எஸ்.என்.எல். நிறுவனத்திற்கு லாபம் அளிக்கும் செயல்பாட்டிற்குரிய களமாகவே இருக்கும்; ஏனெனில் இன்றைய நிலையில் 3ஜி சேவையுடன் ஒப்பிட, சிஎம் வெர்ட்டிகல் சேவையிலிருந்து பி.எஸ்.என்.எல். 15 மடங்கு வருவாயை பெற முடியும்: காரணம் 3ஜி மாதிரியான தொலைபேசியால் இணைய தளத்தை அதிகபட்சம் 21விதீஜீஊ வேகத்தில் மட்டுமே இணைக்க முடியும்; அதுவே 4ஜி போன், தியரிபடி அதிகபட்சம் 300 விதீஜீஊ வேகத்தில் இணைக்க முடியும்.

தற்போது பி.எஸ்.என்.எல். 6ஆயிரம் 4ஜி ஙிஜிஷி வாங்குவதற்காகப் பர்ச்சேஸ் ஆர்டர்ஸ் (**PO**) வெளியிட்டுள்ளது. இந்த பி.எஸ்.என்.எல். உத்தரவு வெறும் கண் துடைப்பு என்பதைத் தவிர வேறில்லை? மார்ச் 2020ல் டெலிகாம் கருவிகள் வாங்க 9,300 கோடி ரூபாய் மதிப்புள்ள 4ஜி டெண்டர் வெளியிட்டது; பின்னர் இந்த 4ஜி டெண்டர் வெளிநாட்டு நிறுவனங்களுக்குச் சாதகமாகச் சாய்ந்து இருப்பதாகக் காரணம் காட்டி ரத்து செய்யப்பட்டது.

4ஜிக்காக வெளிநாட்டுக் கருவிகளை வைத்துக் கொள்ள ரிலையன்ஸ் ஜியோ நிறுவனத்தை அனுமதித்தது அதுவும், யூஎஸ்ஓ நிதியிலிருந்து அரசு நிதி வழங்கி. இது, ரிலையன்ஸ் ஜியோவுக்கு ஆதரவான, அரசு பொதுத்துறை நிறுவனத்தின் நலன்களுக்கு எதிரான தன்னலக் குழுவின் அப்பட்டமான இரட்டை நிலைபாடு.

### 4 -ஜிக்கான பர்ச்சேஸ் ஆர்டர் குறித்து நமது சில சந்தேகங்கள்

1. எலெக்ட்ரானிக் தொலைபேசியகங்களின் சகாப்தத்தின்போது **CDOT**டுடன் பி.எஸ்.என்.எல். ன் அனுபவம் பாராட்டும்படி இருந்தது, அதன் காரணமாகவே நாம் **OCB** 283, **5ESS** போன்ற வெளிநாட்டு ஸ்விட்ச்களுக்காக சென்றோம். திறனற்ற **CDOT NGN**, ஹுவாய் மற்றும் யுடிஸ்டார்காம் போன்றவற்றைவிட செயல்திறனில் பின்தங்கியே இருந்தது. வெளிநாட்டு ஸ்விட்ச்களுடன் ஒப்பிட **CDOT** ஸ்விட்ச்களின் மின் பயன்பாட்டு நுகர்வு மிகவும் அதிகம்.
2. உடனடியாக 6000 டவர்களுக்கும், பின்னர் மேலும் 6000 டவர்களும் பி.எஸ்.என்.எல். உத்தரவிடும் நிகழ்முறையில் ஈடுபட்டுள்ளதாக அறிகிறோம். இப்படி இறுதியில் மொத்தம் ஒரு லட்சம் டவர்களுக்கும் அதிகமாக அதாவது, 1.12 லட்சம் டவர்களுக்கான 4ஜி பிடிஎஸ்கள் பெறுவதற்காக உத்தரவு வழங்கப்படும் எனத் தெரிய வருகிறது. பி.எஸ்.என். எல். அறிக்கைகளின்படி, சுமார் 70 ஆயிரம் டவர்கள் மட்டுமே உள்ளன. தேவைக்கும் அதிகமாக மீதம் உள்ள 4ஜி பிடிஎஸ்களை என்ன செய்யப் போகிறோம், அவற்றைப் பயன்படுத்தி நிர்மாணிப்பதற்கான திட்டம் குறித்தும் எதுவும் தெரியவில்லை.
3. 4ஜி சேவை அளிக்கும் டவர்கள் ஃபைபர்மயமாக்கப்படுவது கட்டாயமாகும். பெரும்பான்மையான பி.எஸ்.என்.எல். டவர்கள் ஃபைபர் கேபிள் இணைப்பு பெறாதவை மற்றும் ஒர்க் ஆன் இ1 அல்லது மைக்ரோ வேவ் டவர்களாகும். அதற்கான மூலதனம் மற்றும் செயல் திட்டம் தற்போதைய திட்டத்தில் சேர்க்கப்படவில்லை.
4. தேவையான அடிப்படை கட்டமைப்பின் பற்றாக்குறை காரணமாக நமது சில **BTS**கள், மின்சாரம் தடைபடும்போது, ஏற்கனவே அணைக்கப்பட்டு விடுகின்றன; இதே நிலை 4ஜி சேவைக்குப் பிறகும் தொடர்ந்தால், அது பி.எஸ்.என். எல். நிறுவனத்திற்கு அழகன்று, வாய்ப்புள்ள வருங்கால வாடிக்கையாளர்களும் பி.எஸ்.என்.எல்.ஐ விட்டு விலகி விடுவர். அடிப்படை கட்டமைப்பு தரமேம்பாட்டிற்குத் தேவையான மூலதனம் குறித்த யோசனை எதுவும் இதுவரை முன்வைக்கப்படவில்லை.
5. சண்டிகார், அம்பாலா நகர்களில் பரிசோதனை முயற்சியாக நிறுவப்பட்டுள்ள **CDOT/TCS** தொழில்நுட்பத்தின் 4ஜி ப்ரோடோ டைப் பிடிஎஸ்களிலிருந்து நூற்றுக் கணக்கான தொழில்நுட்ப / செயல்திறன் குறைபாடுகள் குறித்த செய்திகள் வெளிவந்துள்ளன.
6. **CDOT/ TCS** சிஸ்டத்தில் **CISCO** ரௌட்டர்களுக்கான சிப்கள் பெறுவதற்குச் சுமார் ஒரு வருடம் காத்திருப்புக் காலம் (வெயிட்டிங் டைம்) இருப்பதாக நம்பிக்கைக்குரிய வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

பல காரணங்களால் ஏற்கனவே வாடிக்கையாளர்கள் தற்போதைய பி.எஸ்.என்.எல். சேவையில் அதிருப்தி அடைந்துள்ளர்; இந்நிலையில் 4ஜிக்கு ஆர்வமாக காத்திருக்கும் வாடிக்கையாளர்கள் 4ஜி சேவையை அனுபவிக்கத் தயாராக உள்ளபோது, பி.எஸ்.என்.எல். தரமான 4ஜி சேவையை வழங்க வேண்டும்; தாக்குப் பிடித்து பி.எஸ்.என்.எல்.நிறுவனம் நிலைத்து நிற்கவும், பி.எஸ்.என்.எல். வளர்ச்சி மாற்றத்திற்கும் நல்லது.

பி.எஸ்.என்.எல். டவர்களுடன் பி.எஸ்.என்.எல். கட்டமைப்பைப் பயன்படுத்தி தங்களின் பரிசோதனைகளை நடத்த **CDOT/TCS** நிறுவனங்களை அனுமதிக்கலாம்; அப்படிச் செய்வதற்குத் தேவையான காலத்தையும் அவர்கள் எடுத்துக் கொண்டு, 4ஜியுடன் நிலைப்படுத்தி, தங்களின் 4ஜி சிஸ்டம் தரமான உற்பத்திப் பொருள்தான் என நிரூபித்து அவற்றை பி.எஸ்.என். எல். புகுத்தலாம். சோதனை முயற்சிகள் மேற்கொள்ளப்படும் காலத்தில் ’**CDOT/TCS** நிறுவனங்களால் நடத்தப்படும் 4ஜி பரிசோதனை’ என்ற பெயரைத் தவிர பி.எஸ்.என்.எல். பெயர் எங்கும் பயன்படுத்தப்படக் கூடாது. வாடிக்கையாளர்களின் அதிருப்தி பி.எஸ்.என்.எல். நிலைத்திருப்பதற்கு கேடு நேர்வதாகிவிடும்; பி.எஸ்.என்.எல். பெயரில் அவர்கள் அளிக்கும் இந்த 4ஜி சேவை குறைபாட்டால் வாடிக்கையாளர்களின் கோபம் அதிகரிக்கத் தொடங்கும். பர்ச்சேஸ் ஆர்டர்களால் கிடைக்கும் தரமில்லாத 4ஜி சிஸ்டத்தைப் பயன்படுத்தி அடுத்து பி.எஸ்.என். எல். அளிக்கும் 4ஜி சேவை, எதிர்காலத்தில் நம்மை நாடிவர நினைக்கும் வாடிக்கையாளர்களையும் மேலும் அதிருப்தியுறச் செய்யும்.

உள்நாட்டு தொழில்நுட்ப மேம்படுத்துநர்களான **CDOT/ TCS** நிறுவனங்கள், பரிசோதிக்கப்பட்ட தரமான மற்றும் சந்தையில் போட்டியிடத்தக்க 4ஜி சிஸ்டத்தை பி.எஸ்.என்.எல். நிறுவனத்திற்கு வழங்கும் வரையில், பி.எஸ்.என்.எல். தற்போது வழங்கியுள்ள பர்ச்சேஸ் ஆர்டர்கள் வெறும் கண்துடைப்பே!

தமிழாக்கம்: **நீலகண்டன்**



-& டி.ராஜா

# தேசத் துரோக சட்டம் நீக்கப்பட வேண்டும்




**230 ஆண்டுகளுக்கு முன்பு, புகழ்மிகு பிரிட்டிஷ் – அமெரிக்க எழுத்தாளரும், அரசியல் அறிஞரும், தத்துவஞானியாகவும் திகழ்ந்த தாமஸ் பெய்ன் 'மனிதரின் உரிமைகள்' எனும் ஆய்வு நூலை இங்கிலாந்தில் வெளியிட்டார். இதன் காரணமாக, அவர் மீது தேசத்துரோக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. 'மனிதரின் உரிமைகள்' முடியாட்சி முறையையும் வம்சாவளி அரசாங்க முறையையும் மிகக் கடுமையாக விமர்சித்தது; ஏழைகளுக்கான சமூக நலவாழ்வு நடவடிக்கைகளை முன்னிறுத்தியது.**

முடியாட்சி மற்றும் பிரபுத்துவத்திற்கு எதிரான தாமஸ் பெய்னின் விமர்சனம், தனி நபர் இறையாண்மை மீது அவர் கொண்டிருந்த நம்பிக்கை ஆகியவை ஆளும் வர்க்கத்தினருக்கு எரிச்சல் ஊட்டியது. அவதூறான முறையில் தேசத் துரோக குற்றம் சுமத்தப்பட்டு முறையான விசாரணையும் இன்றி தாமஸ் பெய்னுக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. இன்றைய நமது காலத்தில் முடியாட்சி முறையை ஆதரிக்கும் கருத்துகள் கண்ணுக்கு புலப்படவில்லை. ஜனநாயக சமுதாயத்தின் வலிமைமிகு தூண்களாக மக்களாட்சி முறைமை, அரசமைப்பு விழுமியங்கள் மற்றும் மக்களின் இறையாண்மை உள்ளிட்டவை எழுச்சி பெற்றுள்ளன. தாமஸ் பெய்னின் கூற்று மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. அவருக்கு தூக்கு தண்டனை விதித்தவர்களின் கூற்று பொய்யாகிப் போனது.

தாமஸ் பெய்னுக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டு 200 ஆண்டுகள் கழிந்த பிறகு 2010ஆம் ஆண்டில் பிரிட்டன் அரசாங்கம் தேசத் துரோக சட்டத்தை ரத்து செய்திட முடிவு செய்தது. அது குறித்து பிரிட்டிஷ் நீதித்துறை அமைச்சர் கிளேயர், "தற்காலத்தில் பேச்சுரிமை ஜனநாயகத்தின் உரைகல்லாக கருதப்படுகிறது. மேலும், சுதந்திரத்தைப் பாதுகாத்திட அரசை விமர்சிக்கக் கூடிய குடிமக்களின் ஆற்றல் மிகவும் இன்றியமையாதது ஆகும்" என்று கூறினார்.

நமது சட்டத்துறை கட்டமைப்பில் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் ஆறாவது அத்தியாயத்தில் தேசத்துரோகச் சட்டம் இடம் பெறுகிறது. இந்திய வெகுமக்களின் விடுதலை உணர்வைக் கண்டு அஞ்சி நடுங்கிய காலனிய அரசாங்கம், தேசிய விடுதலை இயக்கத்தையும், பேச்சுரிமையையும் நசுக்கிட இந்தச் சட்டத்தை தாராளமாகப் பயன்படுத்தியது. 1898ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட சட்டத்தின்படி பாலகங்காதர திலகர் தொடங்கி மகாத்மா காந்தி உள்ளிட்ட எண்ணற்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் மீது தேசத்துரோக சட்டம் பாய்ந்தது. தேசத்துரோக குற்றச்சாட்டு விசாரணையின்போது பேசிய மகாத்மா காந்தியடிகள்

"குடிமக்களின் சுதந்திரத்தைப் பறிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட அரசியல் சட்டப் பிரிவுகளில் 124–ஏ தலையாய சட்டப்பிரிவு ஆகும்" என்று குறிப்பிட்டுள்ளார். பிரிட்டிஷாரிடம் இருந்து விடுதலைப் பெற்ற பிறகு உதயமான இந்திய குடியரசின் தேவைகள் பிரிட்டிஷ் காலனிய அரசாங்கத்தின் தேவைகளில் இருந்து மிகவும் வேறுபட்டவைகளாக இருந்தன. காலனிய அரசாங்க சட்டங்களின் நோக்கமானது, எழுச்சியுறும் விடுதலை உணர்வை கட்டுப்படுத்த வேண்டும் என்பதாக இருந்தது. ஆனால், சுதந்திரத்திற்குப் பிறகு குடிமக்களின் கருத்துச் சுதந்திரம், மத நம்பிக்கை, வழிபாடு ஆகிய உரிமைகளை இந்திய அரசியல் அமைப்பு உறுதிப்படுத்தியது. நமது ஜனநாயக வாழ்வின் கோட்பாடுகளாக சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவம் ஆகியவை உருப்பெறவேண்டும் என்று அரசியல் நிர்ணய சபையில் டாக்டர் அம்பேத்கர் உணர்ச்சிகரமாக வாதிட்டார். நாட்டின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேரு தேசத்துரோக சட்டத்தை சமரசமற்ற முறையில் விமர்சித்தார் என்ற போதிலும் கூட, அந்தச் சட்டப்பிரிவு இன்றளவும் தக்க வைக்கப்பட்டுள்ளது.

நமது நாட்டில் பேச்சுரிமை மற்றும் கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமைகளை அரசியலமைப்பு சட்டத்தின் சரத்து 19 (1) (a) அடிப்படை உரிமைகளாக உத்தரவாதப்படுத்தி இருக்கிறது. ஆட்சி அதிகாரத்தில் உள்ள அரசாங்கத்தையும், அதன் கொள்கைகளையும் விமர்சனத்திற்கு உட்படுத்துவது நாடாளுமன்ற ஜனநாயகத்தின் ஒரு அத்தியாவசியமான பகுதியாகும். விமர்சனமும், சகிப்புத்தன்மையும் மக்களாட்சி மாண்பார்ந்த சமுதாயத்தை மேலும் வலுப்படுத்துகின்றன. அரசாங்கத்தின் பொறுப்புடை தன்மையை நடைமுறைப்படுத்துவதால் இவை இரண்டும் தேசப்பற்றின் ஒரு வடிவமாகத் திகழ்கின்றன. எனினும்,

**காலனிய ஆட்சியின் எச்சமாகத் தொடரும் இந்திய தண்டனைச் சட்டத்தின் 124&ஏ பிரிவானது, பேச்சுரிமை மற்றும் கருத்து சுதந்திரத்தை ஒடுக்குவதற்கான ஒரு பிரிவாக நீடித்து வருகிறது.**

அரசியல் கருத்து வேறுபாடுகளை ஒழிப்பதற்காக தேசத்துரோக சட்டப்பிரிவை அரசாங்கங்கள் பயன்படுத்தி வரு கின்றன. இந்தப் போக்கை கருத்தில் கொண்டு இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 124–ஏ வை நீக்க வேண்டும் என்பதற்காக 2011ஆம் ஆண்டில் நாடாளுமன்ற மாநிலங்களவையில் தனிநபர் சட்ட முன்வடிவை நான் கொண்டு வந்தேன்.

குடிமக்களுக்காகவும், சமச்சீரான மேம்பாட்டிற்காகவும் நாட்டின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டிற்காக பணியாற்றி

## தேசத் துரோகச் சட்டம் மீதான உச்ச நீதிமன்றத்தின் இடைக்கால தடை

### சிபிஐயின் தேசிய செயற்குழு வரவேற்பு

தேசத் துரோகச் சட்டத்தின் மீதான உச்ச நீதிமன்றத்தின் இடைக்காலத் தடையை வரவேற்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:


2022 மே 11 அன்று தேசத் துரோகச் சட்டத்தின் மீது இடைக்கால தடை விதித்து உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வரவேற்கிறது. இந்தச் சட்டத்தை முற்றாக நீக்க வேண்டும் என்ற கோரிக்கையை கட்சி மீண்டும் பெருமையுடன் வலியுறுத்துகிறது. இந்தச் சட்டம் தொடர்பான கட்சியின் சீரான நிலைப்பாடு நியாயமானது என்பது உச்ச நீதிமன்ற தீர்ப்பின் மூலம் இன்று நிரூபணமாகியுள்ளது.

பிரிட்டிஷ் காலத்து சட்டமான இந்தத் தேசத் துரோகச் சட்டத்தின் சரத்துகளை ஒன்றிய அரசாங்கம் மறுஆய்வு செய்யும் வரையில், இந்தத் தேசத் துரோகச் சட்டத்தின் கீழ் புதியதாக முதல் தகவல் அறிக்கை எதுவும் பதிவு செய்திடக் கூடாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதைக் கட்சி சுட்டிக் காட்டுகிறது.

இந்தத் தீர்ப்பை வழங்கிய தலைமை நீதிபதி என் வி ரமணா, "இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 124–ஏ கீழ் குற்றஞ்சாட்டப்பட்டு, சிறையில் இருப்பவர்கள் பிணை உள்ளிட்ட நிவாரணம் கோரி நீதிமன்றங்களை நாடும் பொழுது, இந்தத் தேசத் துரோகச் சட்டத்தைப் பயன்படுத்தாமல் இருப்பது தான் சரியானது" என்று கூறியுள்ளார். பிரிவு 124 – ஏ கீழ் முதல் தகவல் அறிக்கைகளை மாநில மற்றும் ஒன்றிய அரசாங்கங்கள் இனி பதிவு செய்திடாது என்று நம்புவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 124 – ஏ வை நீக்கக் கோரி 2011 ம் ஆண்டிலேயே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா, நாடாளுமன்ற மாநிலங்களவையில் தனிநபர் சட்ட முன்வடிவை கொண்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும். இவ்வாறு தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## இளைஞர் பெருமன்ற கிளை சார்பில் தண்ணீர் பந்தல் திறப்பு



திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், நல்லூர் ஊராட்சி அம்பேத்கர் நகர் பேருந்து நிறுத்தம் அருகில், அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற கிளை சார்பில் தண்ணீர் பந்தல் திறப்பு விழா கிளை செயலாளர் வி.பாலாஜி தலைமையில் நடைபெற்றது. தண்ணீர் பந்தலை இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் பி.வி.செந்தில் திறந்து வைத்தார். நிகழ்வில் தமிழ்மாநில விவசாயத் தொழிலாளர் சங்க சோழவரம் ஒன்றியச் செயலாளர் கே.குமரேசன், கிளைத் தலைவர் எம்.ஜெயராஜ், துணைச் செயலாளர் அப்துல், பொருளாளர் கே.ஜெயராஜ் மற்றும் விஜய், அப்சல், இலியாஸ், மூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**அடிமை ஒட்டு மொத்தமாக விற்பனை செய்யப்பட்டு விடுகிறான். பாட்டாளி தன்னை நாள்கணக்கில், மணிக்கணக்கில் விற்றுக் கொள்ள வேண்டி இருக்கிறது.**

**- ஏங்கல்ஸ்**

## ஜிப்மரில் ஹிந்தி த... மீது நடவடிக்கை ...

### மன்சுக் மாண்டவியாவுக்கு கே....



ஒன்றிய குடும்பநலத்துறை மற்றும் சுகாதாரத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியாவுக்கு திருப் பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் எழுதியுள்ள கடிதத்தில் கூறியுள்ளதாவது:

புதுச்சேரி, 'ஹிந்தி செல்' ஜிப்மர் இயக்குனர் வெளியிட்டுள்ள சுற்றறிக்கை கடிதப் அபாயமான சூழலை உருவாக்கியுள்ளது. இந்த சுற்றறிக்கை ஆத்திரமூட்டுவதாகவும், சாச்சைக்குரிய வகையில் இந்தி மொழியை திணிக்க தூண்டுவதாகவும் உள்ளது. ஆட்சிமொழி விதிகள்: 1976ஐ மேற்கோள் காட்டி அனைத்து பதிவுகள், கோப்புகள் மற்றும் பதிவேடுகளில் இந்தி மற்றும் ஆங்கிலம் பயன்படுத்தப்பட வேண்டும் என்று சுற்றறிக்கை வலியுறுத்துகிறது"

"அலுவல் மொழி குறித்த நாடாளுமன்றக் குழுவிற்கு வழங்கப்பட்ட உத்தரவாதத்தை நிறைவேற்றுவது", "எதிர்காலத்தில் அனைத்து பதிவுகள்/சேவை புத்தகங்கள் சேவை கணக்குகளில் உள்ள அனைத்து பதிவுகளும் முடிந்தவரை இந்தியில் மட்டுமே செய்யப்படும்", சிவப்பு நிறத்தில் "இந்தி மட்டும்" என்று அடிக்கோடிட்டு மீண்டும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த சுற்றறிக்கையில், "இந்தியில் ஒன்றியத்தின் அதிகாரபூர்வ பணியை பரிவர்த்தனை செய்ததற்காக" என தலைப்பிடப்பட்டுள்ளது.

இது ஆத்திரமூட்டும் செயல், இந்தியை திணிப்பதே இதன் அடிப்படை நோக்கம். இந்தி பேசாத மாநிலங்களில் ஆங்கிலத்திற்குப் பதிலாக 'ஹிந்தி' என்று உள்துறை அமைச்சரின் சமீபத்திய வெளிப்படையான பேச்சிலிருந்து இந்த சுற்றறிக்கை அதன் எதிரொலியைக் காட்டுகிறது. இந்தியாவின் முன்னோடி மருத்துவ நிறுவனங்களில் ஒன்றான ஜிப்மர், மத்திய அரசின் அழுத்தத்திற்கு அடிபணிந்து, அத்தகைய சுற்றறிக்கையை வெளியிட்டு, இந்தி திணிப்பின் நோக்கத்தைத் தொடர, இது மிகவும் ஆபத்தானது மற்றும் மதிப்புமிக்க மருத்துவ நிறுவனத்திற்கு தகுதியற்றது. சுற்றறிக்கைக்கு எதிரான போராட்டங்களுக்குப்பிறகு ஜிப்மர் நிர்வாகம் அவசரமாக வெளியிட்ட செய்தி அறிக்கையை




வரும் அமைப்புகள் மற்றும் நபர்கள் மீது இந்தப் பிரிவு ஏற்படுத்தும் பாதகமான விளைவுகளை நான் மாநிலங்களவையில் எடுத்துரைத்தேன்.

1860ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட இந்திய தண்டனைச் சட்டத்திலிருந்து பிரிவு 124–ஏ வை நீக்க வேண்டியது அவசியம் என்று உணரப்பட்டது. மாநிலங்களவையில் நான் கொண்டு வந்த தனிநபர் சட்ட முன்வடிவு வாக்கெடுப்புக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை என்றாலும், நான் முன்வைத்த வாதங்கள் இந்த மோசமான சட்டப் பிரிவின்மீது ஒரு விவாதத்தை ஏற்படுத்தியது. தேசத்துரோக சட்டப்பிரிவை நீக்க வேண்டும் என்று தனிநபர் சட்டமுன்வடிவை நான் கொண்டு வந்தபோது, காங்கிரஸ் கட்சி தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் இருந்தது. இதை நான் குறிப்பிடுவதற்கான காரணம் என்னவென்றால் எந்தக் கட்சி ஆட்சி அதிகாரத்தில் இருந்தது பற்றியதல்ல எனது சிந்தனை; சட்டப்பிரிவு 124–ஏ மற்றும் உபா சட்டம் போன்ற ஜனநாயக விரோத, எதேச்சதிகார, நியாயமற்ற அதிகாரங்கள் அரசாங்கத்திட்டம் இருப்பது பற்றியதாகவே எனது சிந்தனை மேலோங்கி இருந்தது.

2014ஆம் ஆண்டு பாஜக தலைமையிலான கூட்டணி ஆட்சிக்கு வந்த பிறகு பல மாநில சட்டமன்றத் தேர்தல்களில் பாஜக வெற்றிகண்ட பிறகு தேசத்துரோக சட்டப்பிரிவு பயன்படுத்தப் படுவது குறிப்பிட்டு சொல்லத்தக்க அளவிற்கு அதிகரித்துள்ளது. அரசாங்கத்தின் நிலைப்பாட்டை எதிர்த்து துணிந்து கேள்வி எழுப்பும் அமைப்புகள், மனித உரிமை செயல்பாட்டாளர்கள் மற்றும் அரசியல்வாதிகளின் தலைக்குமேல் 124–ஏ எனும் வாள் தொங்கிக் கொண்டிருக்கிறது. கருத்து வேறுபாடு உடையவர்களை தேச விரோதிகள் என்று முத்திரையிட்டு அவர்கள் மீது தேசத்துரோக வழக்குகள் பதிவு செய்வது தற்போது ஒரு வழக்கமாகி விட்டது. இந்தப் போக்கு விடுதலைப் போராட்டத்தின் போது உயர்த்திப் பிடிக்கப்பட்ட லட்சியங்களான விவாதித்தல், கலந்தாலோசித்தல், மற்றும் அரசாங்கத்தை விமர்சிப்பது ஆகியவற்றிற்கு எதிரானதாக இருக்கிறது.

**தேசத்துரோக சட்டப்பிரிவின் கீழ் பொய்யான குற்றச்சாட்டை சுமத்துவது மட்டுமின்றி மற்றவர்களின் தேசப்பற்றை கேள்விக் குள்ளாக்குவதும் பாஜகவின் நடைமுறை வழக்கமாகி விட்டது. "நேயத்தைச் சட்டத்தால் உற்பத்தி செய்திடவோ, முறைப் படுத்திடவோ முடியாது" எனும் காந்தியடிகளின் மகத்தான பொன்மொழியை பாஜக தலைவர்களால் ஒருபோதும் விளங்கிக் கொள்ள முடியாது.**

124–ஏ மற்றும் உபா சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்த தரவுகளைப் பார்க்கும்போது இதுபோன்ற மக்கள் விரோத சட்டங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவை என்பது முற்றிலுமாக அம்பலப்பட்டு விடுகிறது. தேசிய குற்ற ஆவண காப்பகத்தின் தரவுகளின்படி 2017ஆம் ஆண்டில் மொத்தம் 156 தேசத்துரோக குற்றவழக்குகள் நிலுவையில் உள்ளன. அந்த ஆண்டில் போலீசார் மட்டத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு அல்லது வழக்குகள் வாபஸ் பெறப்பட்ட நிலையில் 27 வழக்குகள் மட்டுமே முடித்து வைக்கப்பட்டன. நீதிமன்ற விசாரணைக்கு உட்பட்ட 58 வழக்குகளில் ஒரு வழக்கில் மட்டுமே குற்ற நிர்ணயம் நிரூபணம் ஆனது. தேசத்துரோக வழக்குகளில் ஏறத்தாழ 90 சதம் வழக்குகள் நிலுவையில் உள்ளன.

அண்மையில், தேசிய குற்ற ஆவணங்கள் காப்பகம் வெளி யிட்டுள்ள 2020ஆம் ஆண்டிற்கான தரவுகளின்படி வழக்கு களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஆனால் வழக்கு விசார ணைகளில் எவ்வித முன்னேற்றமும் இன்றி நிலைமை தொடர் கிறது. பதிவு செய்யப்பட்ட 230 வழக்குகளில் 23ல் மட்டுமே குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டு நீதிமன்றங்களில் ஏறத்தாழ 95 சதம் தேசத்துரோக குற்ற வழக்குகள் நிலுவையில் இருந்தன. அரசாங்கத்தின் ஆணைகளை எதிர்த்து கேள்வி எழுப்புவோரை அச்சுறுத்துவதற்காகவும், தொடர்ந்து தொல்லை கொடுப்பதற்காகவும் வலுவற்ற சாட்சி யங்களின் அடிப்படையில் அல்லது போதிய சாட்சியங்கள் இன்றி தேசத்துரோக வழக்குகள் தொடுக்கப்படுகின்றன என்பது குறைவான குற்ற நிர்ணய விகிதத்தின் மூலம் தெளிவாகிறது.

அடிப்படை ஆதாரமற்ற தேசத்துரோக குற்றச்சாட்டுகள் மற்றும் தேசவிரோத நடவடிக்கைகள் பெயரால் அச்ச உணர்வு மிக்க ஒரு சூழலை உருவாக்கிட, அரசியல் செயல்பாட்டாளர்கள், மனித உரிமை போராளிகள் உள்ளிட்டோரை அரசாங்கம் மீண்டும், மீண்டும் சிறையில் அடைத்து வருகிறது.

உபா சட்டம் தொடர்பான பிரச்சினையிலும் நிலைமை மோசமாகவே உள்ளது. 2017 –2020 ஆம் ஆண்டுகளில் உபா சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 75 சதம் அதிகரித்துள்ளது. 2020ஆம் ஆண்டில் மொத்தம் 4,827 வழக்குகள் நிலுவையில் இருந்தன. அவற்றில், அந்த ஆண்டில் 398 வழக்களில் மட்டுமே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய முடிந்தது. 95 சதம் வழக்குகள் நிலுவையில் இருந்தன. இந்தியாவின் மோசமான சிறைச்சாலை சூழல்களில் பெரும் எண்ணிக்கையிலான குடிமக்களுக்கு சுதந்திரம் மற்றும் வாழ் வதற்கான அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு, அவர்கள் பெரும் துன்பங்களுக்கு உள்ளாக்கப்பட்டு வேதனையுற்று வருகிறார்கள் என்பதைத்தான் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை மிகத் தெளிவாக சுட்டிக் காட்டுகிறது.

நமது அரசியலமைப்பின் அடிப்படையான விழுமியங்களுக்கு அபாயத்தை உருவாக்கி வரும் இந்தச் சட்டங்களை ரத்து செய்ய வேண்டும் என்று முற்போக்கு சிந்தனை கொண்ட மக்கள் திரளும் அரசியல் துறையினரும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். சட்டப்பிரிவு 124–ஏ செயல்படுத்தப்படுவது குறித்து பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய தேவை எழுந்துள்ளது என்று இந்திய சட்ட ஆணையம் 2018ஆம் ஆண்டு ஆகஸ்ட் 30 அன்று வெளியிட்ட ஒரு கலந்தாய்வு அறிக்கை கூறுகிறது.

அண்மையில் 2022 மே 11 அன்று 124–ஏ சட்டப்பிரிவு குறித்த விஷயம் விரிவான முறையில் பரிசீலிக்கப்படும் வரையில் ஒன்றிய, மற்றும் மாநில அரசுகள் தேச துரோக சட்டப்பிரிவை பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும் என்றும், ஏற்கனவே நிலுவையில் உள்ள வழக்குகள் மீது இடைக்கால தடை விதித்தும் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தற்போது உருவாகியுள்ள எதார்த்தமான சூழலில், நமது தேசத்தின் ஜனநாயக அடித்தளங்களை மேம்படுத்த வேண்டும் என்றால், தேசத்துரோக சட்டத்தை நாம் கட்டாயம் ஒழித்தாக வேண்டும். ஜனநாயகத்தின் உயிர்ப்பான செயல்பாட்டிற்கு விமர்சனம், மாற்றுக் கருத்துகள் மற்றும் விவாதங்கள் அவசியமானவை ஆகும்.

உண்மை இவ்வாறு இருக்க மற்றொரு புறத்தில் அரசாங்கத்தை எதிர்த்து கேள்வி எழுப்புவோர் வேட்டையாடப்படுவது வரலாற்றின் மத்திய காலத்தையும், சர்வாதிகார ஆட்சியாளர்களையும் நமக்கு நினைவூட்டுகிறது. பேச்சுரிமை மற்றும் விவாதத்திற்கான சகாப்தத்திற்கு உண்மையில் நாம் கட்டியம் கூற வேண்டிய காலம் உதயமாகி விட்டது. அதற்கு தேசத்துரோக சட்டம் நீக்கப்பட வேண்டும்.

தமிழில்: **அருண் அசோகன்**

# திணிப்பு: அதிகாரி எடுக்க வேண்டும்

## சுப்பராயன் எம்.பி. வலியுறுத்தல்

நம்பமுடியவில்லை. இது தீங்கானது. ஜிப்மர் என்பது தமிழ் பேசும் யூனியன் பிரதேசமான புதுச்சேரியில் இயங்கும் மருத்துவ நிறுவனம் ஆகும்.

மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் இந்த நோயாளிகளுக்கு உணவளித்து, இந்த நோயாளிகளின் பதிவுகளை பராம ரிக்கின்றனர். அனைத்து பதிவேடுகளும் தமிழில் பராமரிக் கப்படுவதும், மருத்துவர்களுக்கு தமிழில் படிக்க, எழுத, பேச பயிற்சி அளிக்கப்படுவதும் அவசியம். அத்தகைய கொள்கை மாற்றம் மட்டுமே நிறுவனத்தின் முழுமையான வளர்ச்சியை உறுதிப்படுத்த முடியும். மாறாக, ஜிப்மரில் உள்ள 'ஹிந்தி செல்' இந்தி அல்லாத மருத்துவர்கள் மற்றும் ஊழியர்களுக்கு சிறப்பு வகுப்புகளை நடத்தும் இந்தி மொழியை ஊக்குவிக்கிறது. யூடி மற்றும் ஜிப்மரில் தமிழ் பேசும் மக்கள்தொகை அதிகம் என்பதால் ஹிந்தி ஒரு செயல்பாட்டு மொழியாக இருக்க முடியாது. வெளிநோயாளர் பதிவுகள் இருமொழி, ஆங்கிலம் மற்றும் இந்தி மொழிகளில் இருப்பதை அறிந்து நான் ஆச்சரியப்படுகிறேன். பரிசோதனைக்காக நோயாளிகளுக்கு வழங்கப்படும் விசார ணைப் படிவங்கள் ஆங்கிலம் மற்றும் இந்தியில் உள்ளன. இது நோயாளிகளை தொல்லைக்குள்ளாக்குகிறது மற்றும் மருத்துவ மனையின் நோக்கத்தையும் அர்ப்பணிப்பையும் தோற்கடிக்கிறது. இது பழைய நடைமுறையாக இருக்கலாம் ஆனால் திருத்தம் தேவை. எனவே, தார்மீக சீற்றத்தை தீவிரப்படுத்தாத வகையில், சுற்ற றிக்கையை நிபந்தனையின்றி, நீங்கள் தலையீட்டு திரும்பப் பெற உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். சுற்றறிக்கை வெளியிட காரணமான அதிகாரி மீது துறை ரீதியான விசாரணை மற்றும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இத்தருணத்தில், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள தமிழ் பேசும் மக்களுக்கு உறுதியளிக்கும் வகையில், வெளிநோயாளர் பதிவுகள் மற்றும் விசாரணைப் படிவங்களை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வழங்க உத்தரவிடலாம். பெரும்பான்மையான 'தமிழ் மட்டுமே தெரிந்த நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பது அவசியமான தமிழ் பேசாத மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தமிழில் பேச பயிற்சி அளிக்கும் உத்தரவைத் தொடங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். எனது வேண்டுகோள் பரிசீலிக்கப்பட்டு, கூடிய விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று நம்புகிறேன். இவ்வாறு கடிதத்தில் கூறியுள்ளார்.



## பெரியாறு கோவிலாறு அணை பாசன விவசாயிகள் சங்கத் தேர்தலில்


# த.வி.ச. அமோக வெற்றி

வத்திராயிருப்பு பகுதியில் பெரியாறு கோவிலாறு அணை உள்ளது. இந்த அணை பாசன கண்மாய் குளங்கள் வத்திராயிருப்பு, விலாகசமுத்திரம், கூனிகுளம், குசவன்குளம், அனுப்பங்குளம், வில்வராயன்குளம், மாத்தூர், நத்தம்பட்டி, பெரியகுளம் உள்பட 10 ஊர்களில் உள்ளன. இவைகளில் பொதுப்பணித்துறை "நீர்ப் பாசன கமிட்டிகளை" அமைத்துள்ளது.

இக்கமிட்டிகள் மூலமாக விவசாய நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவது , மராமத்து வேலைகள் நடைபெறுகிறது. தற்போது நீர்ப்பாசன கமிட்டிகளின் பதவி காலம் முடிந்த நிலையில்,

அனைத்து கண்மாய் குளம் நீர்ப்பாசன கமிட்டிகளுக்கும் சிபிஐ தமிழ்நாடு விவசாயிகள் சங்க நிர்வாகிகள் தேர்தல் நடத்த வேண்டுமென கோரிக்கை வைத்தன் அடிப்படையில் வருவாய் வட்டாச்சியர் அந்தந்த கண்மாய்குளம் உள்ள ஊர்களில் தேர்தலை நடத்தினார்.

1000க்கும் மேற்பட்ட விவசாயிகள் வாக்களித்தனர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி த.வி.ச. உறுப்பினர்களுக்கு வாக்கு கேட்டு வீடுவீடாக சென்று வேலை செய்தனர். வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. அதில் த.வி.ச. நிர்வாகிகள் வத்திரா யிருப்பு முருகன், நத்தம்பட்டி ராசய்யா, மகராஜபுரம் ராம்ராஜ், அனுப்பங்குளம் சுந்தரம் உள்ளிட்டவர்கள் அமோக வெற்றி பெற்றார்கள். வெற்றி பெற்றவர்கள் சிபிஐ மாநில நிர்வாககுழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ , மாவட்ட செயலளர் பி.லிங்கம் ஆகியவர்களுக் சால்வை அணிவித்து மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர்.




**தொழிற்சங்க போராட்டங்கள் குறுகிய நோக்கு உடையவையோ அல்லது சுயநலநோக்கு கொண்டவையோ அல்ல. அடிமட்டத்தில் மிதிபட்டு கிடக்கும் கோடிக்கணக்கான மக்களின் விடுதலையே நோக்கமாகக் கொண்டிருக்கும். - மார்க்ஸ்**



# பட்ட மரத்தில் பகல் குருடு போகிறது

- கணபதி இளங்கோ



**சமுதாய விழிப்புணர்வூட்டலுக்காக சமய குருமார்கள் பல்லக்கில் சென்று பிரச்சாரம் மேற்கொண்ட காலம் ஒன்று இருந்தது. மதவாதத்துக்கு எதிராக, வைதீக பிராமணிய கருத்தியலுக்கு எதிராக ஞானியாரடிகள் (சைவ சித்தாந்த பெருமன்றத்தை நிறுவியவர், சைவசித்தாந்த போதகர்) ஊர் ஊராகச் சென்றுப் பிரச்சாரம் மேற்கொண்ட நாட்களில் பெரியார் அவர்கள் ஞானியாரடிகள் பயணித்த பல்லக்கை தன் இளம் வயதில் சுமந்தார் என்பது வரலாறு.**

பின்னாட்களில் பெரியார் குடிஅரசு இதழை வெளியிட்ட போது அதனைத் தொடங்கி வைத்தவர் ஞானியாரடிகள் ஆவார். சமய விழிப்புணர்வுக்காக, தத்துவ போதனைகளுக்காக பல்லக்குப் பிரச்சாரம் மேற்கொள்வது என்ற நிலைக்கு மாறாக, பிற்காலத்தில் ஆட்சியதிகாரத்துக்காகப் பல்லக்கு பவனி என்பது மேற்கொள்ளப் படுகின்றன.

தனது அதிகாரத்தை நிலை நிறுத்தி வைப்பதற்காக, அதிகார வர்க்கத்திற்கும், மதவாதத்திற்கு துணை நிற்றலுக்காகவும், சனாதனத்தை உயர்த்திப் பிடிப்பதற்காகவும் பல்லக்கு பவனி என்பது சமூக சீர்கேட்டையே மேலும் வளர்க்கும்.

ஏற்றத்தாழ்வு மிக்க படிநிலை சமுதாயத்தை பாதுகாக்கவே பயன்படும். நிலமானிய சமூகத்தின் மிச்ச சொச்சமான முடியாட்சி காலத்து வழக்கத்தை இன்றும் வேண்டுவது பிற்போக்குத்தனமாகவே காணமுடிகின்றது.

மடங்களின் தோற்றம்:

நந்தியருள்பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்
என்றிவர் என்னோடு எண்மருமாமே (திருமந்திரம் 78)

மேற்கண்ட திருமூலரின் பாடலில் "சிவபெருமானே குருவாக வந்து திருமூலர் உட் பட எண்மருக்கு ஞானோபதேசம் வழங்க அவ்வெண்மரும் தமது சீடர்களுக்குத் தாம் பெற்ற கல்வியைப் பரம்பரையாக உபதேசித்து நிலை நிறுத்தியதாகவும் அவ்வாறு சமய வளர்ச்சிக்காகவும், கல்வி வளர்ச்சிக்காகவும் பொது நன்மை கருதி ஏற்படுத்தப்பட்டவைகளே இன்றைய மடங்கள் என்பதை உணர்த்தி நிற்கிறது.

இவற்றுள் தற்போது சைவ ஆதீனங்களைக் கவனிக்குமிடத்து பெரும்பாலும் முற்கூறிய எண்மருள் இரண்டாவதாக நின்றவருடைய, பரம்பரையில் உதித்த மெய்கண்டருடைய 49 சந்தானங்களுடைய நிலயங்களாக அமைவனவாகும். திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள் ஆகிய மடங்கள் இத்தகைய குரு பரம்பரையில் வந்தவைகளாகவே அமைகின்றன.

இவர்களுள் தில்லை மூவாயிரத்தவரின் தலைமையாக விளங் கியவர் உமாபதி சிவாச்சாரியார் ஆவார். இவர் சைவ சித்தாந்த சாஸ்திரங்களில் துறைபோகிய ஞானம் பெற்று பல நூல்களை படைத்தளித்தவர். பிராமணர்களின் உட் பிரிவை சார்ந்தவர். ஆகவே, உமாபதி சிவாச்சாரியார் என்று அழைக்கப்பட்டார்.அவர் காலத்தில் திரு மடத்தில் அவர் அன்றாடப் பணிகளை நிறைவேற்றிட பல்லக்கில் சென்று வருவது வழக்கமாக இருந்தது. பல்லக்கில் அமர்ந்து செல்லும் காலத்தில் அவருக்கு முன்பு தீப்பந்தங்களை ஏந்தியவாறு தொண்டர்கள் முன்செல்ல பல்லக்கைச் சுமந்தவாறு மற்றவர் பின் செல்வது வழக்கம்.

**பகல் வேளையிலும் தீப்பந்தம் பிடித்துச் செல்வது மரபாக நீடித்தது. ஒரு நாள் அவ்வாறு தீப்பந்தங்கள் முன்செல்ல பல்லக்கில் உமாபதி சிவாச்சாரியார் அமர்ந்து செல்லும் போது "பட்ட மரத்தில் பகல் குருடு போகிறது" என்று ஒருவர் சொல்ல சிவாச்சாரியார் விக்கித்து கீழே இறங்கிவிட்டார்.**

அவ்வாறு கூறியது யாரென அறிந்து அவர் காலில் விழுந்து வணங்கி தம்மை அவரது மாணவராக ஏற்றருள வேண்டினார்.

அவ்வாறு தவறுணர்த்திய மறைஞான சம்பந்தர் சிவாச் சாரியாரை சீடராக ஏற்கவில்லை. இந்த நிலையில் அவரை பல நாட்கள் பின் தொடர்ந்து செல்கிறார் சிவாச்சாரியார். ஒரு நாள் மறைஞான சம்பந்தர் ஒரு வீட்டில் கூழ்வாங்கி குடித்தபடி நிற்க – கீழே ஒழுகிய கூழைப் பிடித்து சிவாச்சாரியார் பருகியதைக் கண்டு அதன்பிறகு சிவாச்சாரியாரை அவரது மாணாக்கராக ஏற்றார் என்பது வரலாறு.

அதன் பிறகு சிவாச்சாரியார் இறுதிவரை பல்லக்கில் அமரவே இல்லை என்பது உண்மையாகும். இச்சம்பவம் உணர்த்தும் உண்மை யாதெனில் உண்மையான ஞானிகள், முற்றும் துறந்த துறவிகள் பல்லக்கில் ஏறக் கூடாது என்பதுவே ஆகும்.

இவ்வாறு தமிழகத்திலும், வட இந்தியாவிலும் நேபாளத்திலும் சைவத்தின் பரவலுக்கு அடிகோலிய எண்மருள் இரண்டாமவரின் சீடரான மெய்கண்டரின் சந்தானங்களின் (உமாபதி சிவாச்சாரியார்) கிளைகளே பரவி நிற்கின்ற நிலையில் திருக் கைலாய பரம்பரை மெய்கண்ட ஆதீனம் என்றும், மெய்கண்ட பரம்பரை சந்தானம் என்றும் தம்மைக் கூறிக் கொள்ளும் ஆதீனங்கள், குறிப்பாக மெய்கண்டதேவர், உமாபதி சிவாச்சாரியார், அருள் நமச்சிவாயர் குருபரம்பரையில் தொடர்ச்சியாக விளங்கி வரும் திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பணந்தாள் முதலிய மடங்கள், தம் செயலிலும் நடை முறையிலும் வழுவி, நோக்கங்களை கைவிட்டு, உடைமைகளை ஆண்டு அனுபவித்தும், அதிலிருந்து தம்மை தற்காத்துக் கொள்ள வைதீகத்தோடு கைகோர்த்து குதூகலிப்பதும், தம் தனித் தன்மையை இழந்து பல்லிளித்து நிற்பதும் பழைமையில் ஊறி சுகபோகங்களுக்கு அடிமை பட்டு கிடப்பதும், அதிகாரமையமாக தம்மை நிலைநிறுத்தி கொள்ளவும், சமூக நலன் கருதாத தன்மையும் தம்மக்கள் தம்மொழி சார்ந்த நல நாட்டமின்மையும் கொண்டவராக பல்லக்கு பவனி, பட்டினப் பிரவேசம் என்று கொக்கரிப்பது தம் சமய முன்னோர்களுக்கு செய்யும் இழுக்காகும்.

இவர்கள் மெய்ஞானியரும் இல்லை. துறவியரும் இல்லை என்ப தையே இந்த போக்கு உணர்த்துகிறது. இவர்கள் மக்கள் முன் அம்பலப்பட்டும் தம் குறை உணர்ந்தாரில்லை.

இந்த நவீன காலத்தில் இந்த நவீனமாந் தன்மைக்கு தம்மை உட்படுத்திக் கொண்டுள்ள இவர்கள், குளிரூட்டப்பட்ட மகிழுந்து களையும் இன்னபிற வசதிகளையும் அனுபவிக்கின்ற இவர்கள், விடாப்பிடியாக இத்தகைய வசதி தோன்றாத காலத்தில் மேற்கொண்ட செயலை இன்றும் பிடிவாதமாக வற்புறுத்துவது இன்றைய சமூக சூழலுக்கு ஒவ்வாத செயல் அல்லவா? மனிதனை மனிதன் தூக்கிச் சுமக்கச் செய்வது மனித விரோதப் செயல் என்ற அறிவும் இருக்காதா?

இங்கு இன்னொன்றையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. பண்டிகை நாட்களில் கோயில்களில் உற்சவர் உலா வரும் போது, அதனைப் பலரும் பல்லக்கில் தூக்கிச் சுமப்பதும் மேலே உற்சவருக்கு அருகே பூசை என்கின்ற பெயரில் நின்றுகொண்டு குதூகலிப்பதையும் கண்டு மனம் வேதனைப்படுகிறது. அந்த கூட்டத்தை கீழே இறக்கி விடுவது எப்போது? அவர்கள் தம் அகந்தை நீங்கி கீழே இறங்கவும் சட்டம் இயற்றப்பட வேண்டும். இத்தகைய குணக்கேடுகள் அகன்று இழிவுகள் மறையும் காலம் வரவேண்டும் என்பதே நம் அனைவரின் எதிர் பார்ப்புமாகும்.

தொடர்புக்கு: **94452 83135**

# வெங்காயம் பயிரிட்ட விவசாயிகள் கண்ணீர்!

## தமிழக அரசு உதவிட விவசாயிகள் சங்கம் வேண்டுகோள்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

வெங்காயம் விலை கடும் வீழ்ச்சி அடைந்ததால் இதை பயிரிட்ட விவசாயிகள் தற்போது கண்ணீர் வடிக்கின்றனர்.

பயிரிட்டு முதிர்ந்த நிலையிலுள்ள வெங்காயத்தை எடுக்க கூட வாய்ப்பில்லை. வெங்காயத்தை எடுத்து விற்பனை செய்தால் ஒரு கிலோ ரூபாய் ஐந்துக்கு விலை போவதால் கூலி கூட கிடைக்காது. பின்னால் விலை உயரும் என நினைத்து இவைகளை எடுத்து வைக்கவும் முடியாது. ஏனெனில் இது வீரிய விதைகளைகொண்டு விளைவித்ததால் சிலநாட்களிலேயே அழுகி சறுகாகிவிடும். இதனால் வெங்காயம் சாகுபடி செய்த பெரம்பலூர்; திண்டுக்கல்; நாமக்கல்; திருப்பூர் மற்றும் சில மாவட்ட விவசாயிகள் அரசின் உதவி கேட்டு போராடி வருகின்றனர். உணவுக்கு சுவையையும் உடலுக்கு ஊட்டத்தையும் கொடுக்க கூடிய வெங்காயத்தை மீண்டும் பயிரிட விவசாயிகளுக்கு அரசு ஆதரவளிக்க வேண்டும். குறைந்தபட்ச விலையாக கிலோ ரூபாய் 30 என அரசு நிர்ணயம் செய்து, தமிழ்நாடு அரசே கொள்முதல் செய்து பொது வினியோக அங்காடிகள் மூலம் இவைகளை விற்பனை செய்திட அவசர நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

மேலும் இதுவரை இந்த சாகுபடியில் இழப்பை சந்தித்து உள்ள விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டுமென தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் தமிழக அரசை கேட்டுக் கொள்கிறோம். மேலும் இக் கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் மே 23 அன்று மேற்கண்ட மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர்களிடம் தமிழக அரசுக்கு இக் கோரிக்கை மனுக்களை மாவட்ட விவசாய சங்க நிர்வாகிகள் கொடுப்பார்கள்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.



**பழங்குடியினருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரி வட்டாட்சியர் அலுவலகத்தில்**

# குடியேறும் போராட்டம்

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாற்றில் வசிக்கும் பழங்குடியினர், மாற்றுத் திறனாளிகள், கணவரால் கைவிடப்பட்டோர் உள்ளிட்டோருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரி ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் சார்பில், வட்டாட்சியர் அலுவலகத்தில் குடியேறும் போராட்டம் நடைபெற்றது.

செய்யாறு வட்டாட்சியர் அலுவலகம் அருகே நடைபெற்ற இந்தப் போராட்டத்துக்கு, ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க வட்டாரச் செயலர் எம்.பிரியா தலைமை வகித்தார். வட்டார நிர்வாகிகள் சந்திரா, விஜயா, மஞ்சுளா, வேளியம்மாள் ஆகியோர் முன்னிலை வகித்தார்.

இதில், தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர்கள் சங்க மாவட்டச் செயலர் தங்கராஜ், மாவட்ட நிர்வாகிகள் எம்.வெங்கடேசன், ரகமத்துல்லா, என்.பத்ராச்சலம், கிருஷ்ணவேணி, நம்பிராஜன், ஆரிப் உள்ளிட்டோர் பங்கேற்று கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கமிட்டனர்.

இதையடுத்து, வட்டாட்சியர் அலுவலகத்தில் குடியேற முயன்ற அவர்களை போலீஸார் தடுத்து நிறுத்தினர்.

இதைத் தொடர்ந்து, செய்யாறு வட்டம், வளர்புரம் பகுதியில் வசிக்கும் பழங்குடியின மக்களுக்கும், செய்யாறு நகர்ப் பகுதியில் வசிக்கும் மாற்றுத் திறனாளிகள், விதவைகள், கணவரால் கைவிடப்பட்டோர், வாடகை வீடுகளில் வசிப்போருக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்க வலியுறுத்தி, செய்யாறு வட்டாட்சியரிடம் அவர்கள் கோரிக்கை மனு அளித்தனர்.

# மாநகராட்சி சார்பில் வசூலிக்கும் தினசரி கட்டணத்தை உயர்த்த கூடாது

## ஏஐடியுசி தீர்மானம்

கும்பகோணம் மாநகராட்சி ஏஐடியூசி தெரு வியாபார தொழிலாளர்கள் சங்கத்தின் நிர்வாகிகள் மற்றும் பொறுப்பாளர்களின் கூட்டம் சங்கத்தின் மாவட்ட தலைவர் பி.சிவக்குமார் தலைமையில் கும்பகோணத்தில் ஏஐடியுசி தொழிற்சங்க அலுவலகத்தில் நடைபெற்றது.

மாநில அமைப்பு நிலை முடிவுகளை விளக்கி ஏஐடியூசி மாவட்ட செயலாளர் ஆர்.தில்லைவனம் உரையாற்றினார்.

தெரு வியாபார தொழிலாளர்கள் சங்க மாவட்டச் செயலாளர் ஆர்.பி.முத்துக்குமரன், கைத்தறி சங்க மாநில தலைவர் கோ.மணிமூர்த்தி, தொலைபேசி ஊழியர்கள் சங்கத்தின் செயலாளர் என்.இசக்கிமுத்து, சங்கத்தின் பொறுப்பாளர்கள் கே.பாலகிருஷ்ணன், கே.சரவணன், பி.சாமிநாதன், ஏ.அடைக்கலசாமி, மார்க்கெட்.எஸ்.ரவி உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

தெரு வியாபாரிகளிடமிருந்து மாநகராட்சி சார்பில் வசூலிக்கும் தினசரி கட்டணத்தை உயர்த்த கூடாது, தெரு வியாபாரிகளின் நல வாரிய பதிவு நடைமுறைகளை எளிமையாக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் இடைக்கமிட்டி, கிளை மாநாடுகள்



**திருப்பரங்குன்றம் ஒன்றிய மாநாடு:** மதுரை மாவட்ட புறநகர் திருப்பரங்குன்றம் ஒன்றிய 25 வது மாநாடு, மேனாள் மாநில செயலாளர் முன்னாள் எம்.பி. தா.பாண்டியன், தேசிய குழு உறுப்பினர் பி.சேதுராமன் மாநாட்டு நினைவரங்கில் ஆர்.வீரபத்திரன் தலைமையில் நடைபெற்றது. மூத்த தோழர் இராசு கொடியேற்றினார். மாநில செயற்குழு உறுப்பினர் கே.சந்தானம் மாநாட்டு துவக்கவுரை ஆற்றினார்.

இதனைத் தொடர்ந்து ஒன்றிய செயலாளர் பி.முத்துவேல் வேலையறிக்கையினை வாசித்தார். தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் மதுரை மாவட்ட செயலாளர் ஜி.சந்தனம், மாவட்ட குழு இரவிவர்மா மற்றும் இந்திய மாதர் தேசிய சம்மேளனம் மதுரை மாவட்ட புறநகர் பொறுப்புச் செயலாளர் கே.நாகஜோதி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். ஒன்றிய செயலாளராக ஆர்.விஜயா, துணை செயலாளர்களாக ஆர்.ரெங்கநாதன், பி.மகாமுனி, பொருளாளராக ஆர்.பாலகிருஷ்ணன் ஆகியோர் மாநாட்டில் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். மதுரை புறநகர் மாவட்ட செயலாளர் பா.காளிதாஸ் மாநாட்டினை நிறைவுரை செய்தார்.

இம்மாநாட்டில் விளாச்சேரி மொட்டமலை சர்வே எண் 371/1, 371/2 மற்றும் தட்டனூரா் சர்வே எண் 70 ஆகிய இடங்களில் மூன்று சென்டில் வீடு குடியிருக்கும் ஏழை, எளியவர்களுக்கு உடனே இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட வலியுறுத்தியும்,

கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக ஹார்விபட்டியில் இயங்கிவந்த உயர்நிலைப்பள்ளி தற்போது மூடப்பட்டுள்ளது. அதனால், அந்த பகுதி மாணவர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாகி உள்ளது. எனவே உயர்நிலைப்பள்ளியை திறக்க வேண்டும் என்று வலியுறுத்தி மாநாட்டில் தீர்மானம் நிறைவேற் றப்பட்டது.

**திருவள்ளூர் தாலுகா மாநாடு:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருவள்ளூர் தாலுகா 24வது மாநாடு மனவாள நகரில் நடைபெற்றது. இதில் மாநில செயற்குழு உறுப்பினர் டி.எம். மூர்த்தி அரசியல் விளக்கவுரையாற்றினார். மாவட்டச் செயலாளர் கே.கஜேந்திரன், துணைச் செயலாளர் ஜெ.அருள், நிர்வாகக்குழு உறுப்பினர் மயில்வாகனன், வி.தொ.ச.மாவட்டத் தலைவர் டி.கே. ராஜா உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர்.

செயலாளராக பி.சரவணன், துணைச் செயலாளர்களாக எஸ்.ராபின், டி.வெங்கடேசன், பொருளாளராக வழக்கறிஞர் ராமச்சந்திரன் ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

திருவள்ளூர் பகுதியில் கலை அறிவியல் கல்லூரி தொடங்கிட வேண்டும், திருவள்ளூர் தாலுகாவில் அனைத்து கிராம சாலைகளையும் சீரமைத்திட வேண்டும், திருவள்ளூர் தாலுகாவில் உள்ள தனியார் தொழிற்சாலைகளில் உள்ளூர் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**கடையம் ஒன்றிய மாநாடு:** தென்காசி மாவட்டம் கடையம் ஒன்றிய 30வது மாநாட்டை மூத்த தோழர் மாடசாமி கொடியேற்றி துவங்கி வைத்தார். விவசாய சங்க தலைவர் கே.சட்டநாதன், மாவட்ட குழு உறுப்பினர் ஆர்.ஈஸ்வரன், மாதர் சங்கம் இ.வள்ளி ஆகியோர் தலைமை தாங்கி மாநாட்டை நடத்தினர். வேலை அறிக்கையை ஒன்றிய செயலாளர் எஸ்.வேலாயுதம் வாசித்தார். ஒன்றிய செயலாளராக தோழியர் எஸ்.ஜீவா (33), துணைச் செயலாளர்களாக அரிஹரன், சிவசுப்பிரமணியம், பொருளாளராக செல்வஅந்தோணி ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

மாநாட்டில் மாநில நிர்வாக குழு உறுப்பினர் எஸ்.காசிவிசுவநாதன், மாவட்ட செயலாளர் த.இசக்கித்துரை, ஏஐடியுசி நெல்லை மாவட்ட செயலாளர் எஸ்.சடையப்பன், ஏஐடியுசி தென்காசி மாவட்ட செயலாளர் தி.சுப்பையா மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் எஸ்.மாரியப்பன், ஏ.பரமசிவன், விவசாய சங்க மாவட்ட துணை செயலாளர் எம்.எஸ்.கிட்டப்பா, ஜனசக்தி மாவட்ட பொறுப்பாளர் ஆர்.சமுத்திரக்கனி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

**வில்லிவாக்கம் ஒன்றிய மாநாடு:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின், திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் ஒன்றிய 5வது மாநாடு நடைபெற்றது. வி.சுந்தரடிவேல் தலைமையேற்றார். வி.இராஜீவ்காந்தி வரவேற்புரை ஆற்றினார். மாவட்ட துணைச் செயலாளர் ஜெ.அருள் வாழ்த்துரை வழங்கினார். மாவட்ட நிர் வாகக்குழு உறுப்பினர் எஸ். மயில்வாகனன் துவக்க வுரையாற்றினார். மாவட்ட செயலாளர் கே.கஜேந்திரன் நிறைவுரையாற்றினார்.

வி.இ.ராஜீவ் காந்தி ஒன்றியச் செயலாளராகவும், எம்.சுரேஷ், வி.வெங்கடேச பெருமாள் ஆகியோர் துணை செயலாளர்களாகவும், சரத்ராஜா பொருளாளராகவும் மாநாட்டில் தேர்வு செய்யப்பட்டனர்.

**மதுரை மாநகர் மாவட்ட மேற்கு பகுதி மாநாடு:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை மாநகர் மாவட்ட மேற்கு பகுதி மாநாடு ஏஐடியூசி பஞ்சாலை தொழிலாளர்கள் சங்கத்தில் நடைபெற்றது.

மாவட்ட செயலாளர் எம்.எஸ்.முருகன், மாநாட்டை துவக்கிவைத்து பேசினார். வேலை அறிக்கையை பகுதி செயலாளர் ஜனசக்தி என்.ஜீவா சமர்பித்தார். மாநாட்டில் மேற்கு பகுதி நிர்வாகிகளாக ஜனசக்தி என்.ஜீவா செயலாளராகவும், துணை செயலாளராக ரா.தினேஷ், பெருளாளராக விளாங்குடி கே.எஸ்.மணி ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர். எம்.நந்தாசிங் நிரைவுறையாற்றினார்.

**காரியாபட்டி சிபிஐ ஒன்றிய மாநாடு** : இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் காரியாபட்டி ஒன்றிய 24வது மாநாடு செவல்பட்டியில் நடைபெற்றது. முருகேசன், இரவிச்சந்திரன் ஆகியோர் தலைமை வகித்தார்கள். மூத்த தோழர் முத்தையா கொடியை ஏற்றிவைத்துப் பேசினார். இளங்கோ வரவேற்றார். மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி மாநாட்டை தொடங்கிவைத்துப் பேசினார்.


மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், மாநில குழு உறுப்பினர்கள் செந்தில்குமார், பாலமுருகன் , தவிதொச மாவட்ட செயலாளர் வரதராஜ் ஆகியோர் பேசினார்கள். ஒன்றிய செயலாளர் வேல்ச்சாமி வேலை அறிக்கை சமர்ப்பித்து பேசினார். ஒன்றிய குழுவிற்கு 19 தோழர்களும், நிர்வாக குழுவிற்கு 9 தோழர்களும் அதில் செயலாளராக முருகன், துணை செயலாளராக ஞானகுமார், பொருலாளராக ரவிச்சந்திரன் ஆகியோர் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டார்கள. அனைத்து ஊராட்சிகளிலும் சுத்தமான குடிநீர் வழங்க வேண்டும், காரியாபட்டி ஊராட்சியிலும் 100நாள் வேலை திட்டத்தை அமுல்படுத்த வேண்டும், மதுரை தூத்துகுடி தேசிய நெடுஞ்சாலையில் ஆவியூர் தோப்பில் சர்வீஸ் ரோடு அமைக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

**கூட்டடி கிளை:** கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே கூட்டணி கள்ளக் குறிச்சி கிராமத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கூட்டடி கிளை மாநாடு நடைபெற்றது. கே.மணிகண்டன் தலைமையில் மூத்த தோழர் ஏகாதசி கட்சி கொடியினை ஏற்றினார்.

கிளை செயலாளராக மணிகண்டன், துணை செயலாளராக டி.அண்ணாமலை, பொருளாளராக பி.வெங்கடேசன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.மாவட்டநிர்வாககுழு உறுப்பினர் மு.கலியபெருமாள், மாவட்டக்குழு உறுப்பினர் எம்.வெங்கடேசன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

**கொரட்டுர் கிளை:** கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், கொரட்டுர் கிளை மாநாடு ஜி.மணி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் மு.கலியபெருமாள், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்ட செயலாளர் எம்.வெங்கடேசன், மாவட்டக்குழு சு.தாமோதரன் ஆகியோர் கலந்து கொண்டனர். கட்சி கொடியினை எம். வெங்கடேசன் ஏற்றிவைத்தார். கிளை செயலாளராக எம்.ரவி, துணைச்செயலாளராக எஸ்.தூக்கிட்டு, பொருளாளராக ரமேஷ் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**கெடிலம் கிளை:** கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை வட்டம் இந்திய கம்யுனிஸ்ட கட்சி கெடிலம் கிளை மாநாடு நடைபெற்றது. கிளை செயலாளர். ஆ.ஆறுமுகம் தலைமை தாங்கினார். மாவட்டசெயலாளர் கே.எஸ்.அப்பாவு, மாவட்ட நிர்வாக குழு மு.கலியபெருமாள்.தமிழ் நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்ட செயலாளர் எம். வெங்கடேசன், மாதர் சம்மேளன மாவட்டக்குழு ரீத்தா ஆகியோர் கலந்து கொண்டனர்.



**சங்கரன்கோவில் தாலுகா கிளை மாநாடு:** சங்கரன்கோவில் தாலுகா பனையூர் கிளை மாநாடு நடைபெற்றது. மாநாட்டில் கிளை செயலாளராக சுப்பிரமணியன், துணைச் செயலாளராக பால்ராஜ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். சங்கரலிங்காபுரம் கிளை மாநாடு நடைபெற்றது இதில் செயலாளராக கருப்பசாமியும், துணைச் செயலாளராக பெரிய மாரியப்பன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். கோதை நாச்சியார்புரம் கிளை மாநாடு நடைபெற்றது. மாநாட்டில் கிளை செயலாளராக மாரிமுத்து தேர்வு செய்யப்பட்டுள்ளார். குலசேகரமங்களம் கிளை மாநாடு நடைபெற்றது. கிளைச் செயலாளராக மாடசாமியும், துணைச் செயலாளராக கோவிந்தனும் தேர்வு செய்யப்பட்டனர்.

சங்கரன்கோவில் கிளை மாநாடு சித்திரபுத்திரன் தலைமையில் நடைபெற்றது. இதில் ஆறுமுகம் செயலாளராக தேர்வு செய்யப்பட்டார்.

பாஞ்சாங்குளம் கிளை மாநாடு பொன்ராஜ் தலைமையில் நடைபெற்றது. செயலாளராக சமுத்திரம் தேர்வு செய்யப்பட்டார்.

பெரியூர் கிளை மாநாடு நடைபெற்றது. செயலாளராக இராமர் தேர்வு செய்யப்பட்டார்.

மாநாடுகளில் சங்கரன்கோவில் தாலுகா செயலாளர் (பொறுப்பு) ஏ.கனகராஜ், மாவட்டக்குழு உறுப்பினர்கள் எம்.முருகன் ஆர்.மனுவேல்ராஜன், தாலுகா குழு உறுப்பினர் கே.வேலாயுதம், சுப்புலாபுரம் கிளைச் செயலாளர் கணபதி ஆகியோர் பங்கேற்று மாநாடுகளை சிறப்பாக நடத்தி முடித்தனர்.

---

**விருதுநகர் மாவட்டத்தை முதன்மை மாவட்டமாக மாற்ற செயல் திட்டத்தை விளக்கி**

# சிபிஐ பாதயாத்திரை

திருவில்லிபுத்தூர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகத்தில் சிபிஐ மாவட்ட நிர்வாக குழு கூட்டம் நடைபெற்றது. மாநில நிர்வாககுழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ தலைமை வகித்து மாநில நிர்வாக கழு. முடிவுகளை விளக்கிப் பேசினார். மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி வேலை அறிக்கை வாசித்தார். மாவட்ட மாநாட்டை ஜுலை 1,2 தேதிகளில் திருவில்லிபுத்தூரில் நடத்தவும், விருதுநகர் மாவட்டத்தை முதன்மை மாவட்டமாக மாற்ற செயல் திட்டத்தை விளக்கி மாவட்டம் முழுவதும் 4 குழுக்கள் பாதயாத்திரையாக சென்று ஜுன் 14முதல் 20 வரை பிரச்சாரம் மேற்கொள்வது என்றும், சேத்தூர் நகர செயலாளர் ராஜா மீது அவதூறு பரப்புவதை கண்டித்து இயக்கம் நடத்துவது உள்ளிட்ட முடிவுகள் எடுக்கப்பட்டன. கூட்டத்தில் மாநில நிர்வாக குழு உறுப்பினர் வி.அழகிரிசாமி எக்ஸ் எம்பி, மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், மாவட்ட பொருளாளர் சமுத்திரம், மாநில குழு உறுப்பினர்கள் செந்தில்குமார், பாலமுருகன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

---

## தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் மயிலாடுதுறை மாவட்ட சிறப்பு பேரவை

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மயிலாடுதுறை மாவட்ட சிறப்பு பேரவை என். ஜி.ஓ. சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. மாவட்ட தலைவர் தங்க சேகர் தலைமை வகித்தார். சீர்காழி வட்டத் தலைவர் செம்மலர் வீரசேனன் வரவேற்புரை நிகழ்த்தினார்.மா.பிரபாகரன் மறைந்த தலைவர்களுக்கு இரங்கலுரை நிகழ்த்தினார். மாநில குழு உறுப்பினர் வழக்கறிஞர் எஸ்.சுந்தரய்யா நோக்கவுரை நிகழ்த்தினார். மாவட்ட செயலாளர் என்.சுரேஷ் அறிக்கை வாசித்தார்.

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநில பொதுச் செயலாளர் இரா.காமராசு விளக்க உரை நிகழ்த்தினார். முனைவர் டி. தியாகராஜன், மாவட்ட சிறப்புத் தலைவர் ஜெக.சண்முகம், மேனாள் நகர்மன்றத் தலைவர் வழக்கறிஞர் கே.பி.எஸ்.எம்.கனி வண்ணன் ஆகியோர் கருத்துரையாற்றினர்.

---

## தியாக சீலர் சி.எஸ்.சுப்பிரமணியம் கட்டிட நிதி வழங்கியோர்

| | |
|---|---|
| தோழர் **சி.எச்.வெங்கடாச்சலம்,** (பொதுச் செயலாளர், அகில இந்திய வங்கி ஊழியர் சம்மேளனம்) | ரூ.1,00,000 |
| **தஞ்சாவூர் (வடக்கு) மாவட்டக்குழு** | ரூ.50,000 |
| தோழர் **வி.பாலசுப்பிரமணியம்,** (பி.எஸ்.என்.எல். ஓய்வு, மயிலாடுதுறை) | ரூ.500 |
| **ஆர்.பத்மநாபன்,** (பி.எஸ்.என்.எல். ஓய்வு, மயிலாடுதுறை) | ரூ.500 |

---

# வாசகர் டுவிட்

**ஆசிரியர் ஜனசக்தி,**

ஒன்றிய பாஜக – ஆர்எஸ்எஸ் அரசு மருத்துவக் கல்வியை காவி மயமாக்கி வருகிறது. இந்துத்துவ, பார்ப்பனிய சித்தாந்தத்தை திணிக்கிறது என்பதனை டாக்டர்ஜி.ஆர்.ரவீந்திரநாத் தனது கட்டுரையில் ஆதாரங்களோடு சுட்டிக்காட்டியுள்ளார்.

– **ஆர்.சீனிவாசன்,** பட்ரோடு, சென்னை

**ஆசிரியர் ஜனசக்தி,**

பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்பதன் மூலம் கிடைக்கும் பணத்தில் உள்கட்டமைப்பை மேம்படுத்துவோம் என்று கூறுபவர்கள், அதற்கு நேர் மாறாக அதானிக்கும், அம்பானிக்கும் வசதிகளைப் பெருக்கித் தருகிறார்கள் என்று த.லெனின் தனது ‘‘போராட்டங்கள் எழும்; பொல்லாத அரசுகள் விழும்‘‘ என்ற கட்டுரையில் விளக்கியுள்ளார்.

– **கே.கொம்பையா,** ஸ்ரீ வைகுண்டம்

**ஆசிரியர் ஜனசக்தி,**

பல்லக்கு அரசியலும் – பஜனைக் கூட்டமும் என்ற தலைப்பில் இரா. முத்தரசன் அவர்களின் கட்சிக் கடிதத்தில் ‘‘பட்டினப்பிரவேசம் என்கிற பெயரால் கலகம் செய்வது என்று நீங்கள் முடிவெடுத்தால் அதனை தமிழக மக்கள் எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்பதை நன்கு அறிவார்கள்’’ என்று தெளிவுபடுத்துகிறார்.

– **டி.பக்கிரிசாமி,** திருப்பூர்

**ஆசிரியர் ஜனசக்தி,**

பருத்தி நூல் விலை ஏற்றத்தால் ஏற்படும் வாழ்வாதாரப் பிரச்சினை குறித்து என். ராதாகிருஷ்ணன் எழுதிய நடுப்பக்க கட்டுரை பெரிதாக இருந்தாலும், தேவையான விவரங்களை கொண்டு உள்ளது. மே 15ஆம் தேதி வரை மே தினச் செய்திகள் போட்டுக் கொண்டிருக்க தேவையில்லை.

– **தங்கராஜ்,** தஞ்சாவூர்

## கட்சி நிதி அளிப்பு



தோழர் தா.பா அவர்களின் 90ஆவது பிறந்தநாளிலிருந்து கட்சி நிதிக்காக, உண்டியலில் சேர்த்து வைத்த 653 ரூபாய் பணத்தை மாநில செயலாளர் இரா.முத்தரசன் அவர்களிடம் இளைஞர் பெருமன்ற மாநில செயலாளர் க. பாரதி வழங்கினார்.



## கலை இலக்கியப் பெருமன்ற திருவள்ளூர் மாவட்டப் பேரவை

தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம் திருவள்ளூர் மாவட்ட பேரவை கூட்டம் மே 16 அன்று அமுதூர் மேடு பகுதியில் சமூகநல கூடத்தில் கலை மாரி தலைமையில் நடைபெற்றது.

கலை இலக்கியப் பெருமன்ற டி.எஸ்.என்.நடராஜன் மாநில மாநாடு குறித்து விளக்கிப் பேசினார். சி.பி.ஐ. மாவட்டச் செயலாளர் கே.கஜேந்திரன் வாழ்த்துரை வழங்கினார்.

மாவட்ட துணைச் செயலாளர் ஜே.அருள், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் மயில்வாகனன், வில்லிவாக்கம் ஒன்றியச் செயலாளர் வெ.ஏ.ராஜீவ்காந்தி, வி.ராமானுஜம் உள்ளிட்டோர் பங்கேற்றனர். துவக்கமாக புரட்சிகர பாடல்கள் பாடப்பட்டன.

புதிய செயலாளராக கலைமாரி தேர்வு செய்யப்பட்டார். மேலும் மாநில மாநாட்டு பிரதிநிதிகளாக மாரி, கார்க்கி அம்பிகாபதி, பாஸ்கர், ரவிக்குமார், சரத்ராஜ், பாலாஜி, சிவபெருமான் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். நிறைவாக எஸ்.மயில்வாகனன் நன்றி கூறினார்.



## அய்யம்பேட்டையில் சர்வீஸ் சாலை கேட்டு சாலை மறியல்

தஞ்சை மாவட்டம், அய்யம்பேட்டை அருகே புரக்குடி பாலம் எண் 153 மக்கள் சுடுகாட்டிற்கு செல்லும் பாதையும், சூல மங்கலம் பாலம் எண் 154, ஊராட்சிக்கு உட்பட்ட பாதையும் தடைச் செய்யப்பட்டதைக் கண்டித்தும், தஞ்சை விக்கிரவாண்டி தேசிய நெடுஞ்சாலை குறுக்கே சர்வீஸ் ரோடு அமைத்துத் தரக் கோரியும் சாலை மறியல் போராட்டம் அய்யம்பேட்டை யில் நடந்தது.

பாபநாசம் தஞ்சாவூர் நெடுஞ்சாலையில் அய்யம்பேட்டை பேருந்து நிழற் குடை அருகே நடந்த சாலை மறியல் போராட்டத்திற்கு விவசாய சங்க ஒன்றியச் செயலாளர் கனகராஜ், வையச் சேரி ஊராட்சி மன்றத் தலைவர் ரமேஷ் தலைமை வகித்தனர். இதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பாபநாசம் ஒன்றியச் செயலாளர் தர்மராஜ் உள்பட புரக்குடி, புண்ணிய நல்லூர், வையச் சேரி, சூலமங்கலம், கோனூர் உள்ளிட்ட கிராமங்களிலிருந்து 200 க்கும் மேற்பட்ட மக்கள் கலந்துக் கொண்டனர்.

சாலை மறியலால் மெயின் சாலையில் போக்குவரத்து கடும் பாதிப்பிற்காளானது. பாபநாசம் தாசில்தார் மதுசூதனன், பாபநாசம் டி.எஸ் பி பூரணி, அய்யம்பேட்டை இன்ஸ்பெக்டர் வனிதா ஆகியோர் பேச்சு வார்த்தை நடத்தி சாலை மறியலை கைவிடச் செய்தனர்.

## பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு

# 1000 பீடிக்கு ரூ.13- ஊதிய உயர்வு

### பேச்சு வார்த்தையில் உடன்பாடு!

தமிழக பீடித் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு தொடர்பான 10.08. 2015 தேதிய முத்தரப்பு ஒப்பந்தம் 14.05.2019ல் காலாவதியானதைத் தொடர்ந்து, பீடித் தொழிலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்கள் ஊதிய உயர்வு உள்ளிட்ட பொதுக்கோரிக்கைகள் கொண்ட தொழிற்தகராறினை தொழிலாளர் ஆணையர் முன் தாக்கல் செய்தன. இதன்மீது தொழிலாளர் தனி துணை ஆணையர் முன் பல்வேறு தேதிகளில் சமரசப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன.

நிறைவாக, 10.05.2022 அன்று சென்னை, தேனாம்பேட்டை, டிஎம்எஸ் வளாகத்தில் உள்ள தமிழ்நாடு தொழிலாளர் நலவாரிய கருத்தரங்கு கூடத்தில் தொழிலாளர் ஆணையர் முனைவர் அதுல் ஆனந் இ.ஆ.ப., தொழிலாளர் தனி இணை ஆணையர் உ.லட்சுமி காந்தன் உள்ளிட்ட தொழிலாளர் துறை அதிகாரிகள் முன்னிலையில் சமரசப் பேச்சு வார்த்தை நடைபெற்றது.

இதில் பீடி உற்பத்தியாளர்கள் சங்கங்களின் பிரதிநிதிகளும், அனைத்து தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இதில், பின்வரும் உடன்பாடு ஏற்பட்டு, 1947 ஆண்டின் தொழிற்தகராறுகள் சட்டம் பிரிவு 12 (3) ன் கீழ் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

ஒப்பந்த ஷரத்துக்கள்:

1) தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கும் தற்போது வழங்கப்பட்டுவரும் அடிப்படை கூலியிலிருந்து 10.05.2022 முதல் 1000 பீடிகளுக்கு ரூ.13.00 வீதம் உயர்த்தி வழங்க நிர்வாகத்தரப்பில் ஒப்புக் கொண்டனர். அதனை தொழிற்சங்க தரப்பிலும் ஏற்றுக் கொண்டனர்.

2) 14.05.2019 முதல் 09.05.2022 வரை 10.08.2015 தேதிய ஒப்பந்தத்தில் உள்ள ஷரத்துக்களே பொருந்தும் என்பதை இருதரப்பினரும் ஏற்றுக்கொண்டனர்.

3) இந்த ஒப்பந்தம் 10.05. 2022 முதல் 09.05.2025 வரை மூன்று ஆண்டுகளுக்கு அமுலில் இருக்கும் என இருதரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4) தொழிற்சங்கங்கள் எழுப்பியுள்ள இதர கோரிக்கைகள் மீது தொழிலாளர் துறையூனர் முன்பு பேசித் தீர்த்துக் கொள்ளப்படும் என இருதரப்பினரும் ஏற்றுக்கொண்டனர்.

இந்த ஒப்பந்தப்படி, 10.05.2022 முதல் 1000 பீடிகள் சுற்றுவதற்கு அடிப்படைச் சம்பளமாக ரூ.119.80ம், அகவிலைப்படியாக ரூ.128.01ம், ஆக மொத்தம் ரூ.247.81வழங்கப்படும்.

இந்த ஒப்பந்தம் மூலம் தமிழ்நாடு முழுவதும் உள்ள சுமார் ஐந்து லட்சத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பயனடைவார்கள்.

ஏஐடியுசி சார்பில் தமிழ்நாடு பீடி, சுருட்டு மற்றும் புகையிலை தொழிலாளர் சம்மேளன பொதுச்செயலாளர் நெல்லை எஸ்.காசி விஸ்வநாதன், சம்மேளன பொருளாளர் ஈரோடு எஸ்.சின்னசாமி, திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை கே.ஆர்.வேணுகோபால், கே.பி.மணி, ஆம்பூர் கே.எஸ்.ஹசேன், வேலூர் மாவட்டம், பள்ளி கொண்டா ஹி.வேலு, பேர்ணாம்பட்டு ஜி.எஸ். மூர்த்தி, ராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு ஜி.பாலு உள்ளிட்டோர் கலந்து கொண்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

## கண்ணையன் தீக்குளிக்க காரணமான

# தொழிலதிபர் மீது நடவடிக்கை எடுத்திடுக

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தென்சென்னை மாவட்டச் செயலாளர் எஸ். ஏழுமலை மற்றும் ராஜா அண்ணாமலைபுரம், கோவிந்தசாமிநகர், இளங்கோதெரு, கட்டபொம்மன் தெரு, கரிகாலன் தெருவைச் சேர்ந்த பாதிக்கப்பட்டவர்கள் சென்னை காவல்துறை ஆணையரிடம் அளித்துள்ள புகார் மனுவில் கூறியுள்ளதாவது:

கோவிந்தசாமி நகர், இளங்கோ தெரு, கட்டபொம்மன், கரிகாலன் தெரு பகுதிகளில் பல தலைமுறையாக குடியிருந்து வருகின்றோம். பக்கிங்ஹாம் கால்வாய்க்கு சுமார் 70 அடி தூரத்தில் எங்கள் குடியிருப்பு பகுதி வீடுகள் உள்ளன. குடியிருப்பு பகுதியால் கால்வாய்க்கு எவ்வித பாதிப்பும் இல்லை.

1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப்பகுதி சட்டப்படி அரசாணை 1582ன் கீழ் கோவிந்தசாமி நகர் அறிவிக்கப்பட்ட குடிசைப்பகுதி என்று அரசால் அறிவிக்கப்பட்டதன் படி மின் இணைப்பு , வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை, வீட்டு வரி, குடிநீர் வரி, சொத்துவரி எங்களுக்கு வழங்கப் பெற்றது.

ஆனால், குடியிருப்பிற்கு பின்புறம் உள்ள ராஜிவ்ராய் பெரும் செல்வந்தர் ஆவார். அவர் தனது சுயநலத்திற்காக செல்வாக்கை பயன்படுத்தி எங்களது குடியிருப்புகளை இடிக்கச் செய்து, எங்களது வாழ்வாதாரத்தையும், குழந்தைகளின் கல்வியையும் நிலை குலையைச் செய்துள்ளார். இதன் காரணமாக எங்கள் தெருவைச் சேர்ந்த கண்ணையன் என்பவர் தீக்குளித்து மரணமடைந்து விட்டார்.

எங்களின் வாழ்க்கையை சீர்குலைத்த, எங்களின் குடியிருப்புகளை இடித்து தரைமட்டமாக்கி, எங்களின் வாழ்வையே சீர்குலைத்த, கண்ணையாவின் மரணத்திற்கு காரணமான ராஜிவ்ராய் மீது உரிய வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுத்து கைது செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு புகார் மனுவில் கூறியுள்ளனர்.

## குவாரிகளில் ஏற்படும் விபத்து!

# சட்டங்களை முழுமையாக அரசு அமல்படுத்த வேண்டும்!

### சிபிஐ நெல்லை மாவட்டக்குழு வேண்டுகோள்!

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நெல்லை மாவட்ட செயலாளர் எஸ். காசிவிஸ்வநாதன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

மே 14 நள்ளிரவில் கல்குவாரியில் ஏற்பட்ட விபத்தில் செல்வம் என்ற தொழிலாளி உயிரிழந்திருக்கிறார். பல தொழிலாளர்கள் காயமடைந்துள்ளனர். பாளையங்கோட்டை அருகே முன்னீர்பள்ளம் கிராமத்தை அடுத்த அடைமிதிப்பான் குளத்தில் சுமார் 20க்கும் மேற்பட்ட தனியார் கல்குவாரிகள் இயங்கி வருகிறது . இது போன்ற நிலை மாவட்டம் முழுவதும் உள்ளன. இயற்கைவளம் சூறையாடப்படுகிறது. அங்கு பணிபுரியும் தொழிலாளர்களுக்கு எந்தப் பாதுகாப்பும் இல்லை.

வெடி குண்டு வைத்து பாறைகள் உடைக்கப்பட்டும், சுண்ணாம்புக்கல் அள்ளப்பட்டும், விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டிய தண்ணீர் பாட்டில்களில் அடைத்தும் விற்கப்படுகின்றன. மொத்தத்தில் இயற்கை வளங்கள் சூறையாடப்படுகின்றன.

ஏற்கனவே ஆத்தங்கரை பள்ளிவாசலில் சுண்ணாம்பு குவாரிகளால் ஏற்படுகின்ற விபத்துகள் குறித்தும், பொதுமக்களுக்கு ஏற்படுகின்ற அபாயங்கள் குறித்தும் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் பங்கேற்ற ஆர்ப்பாட்டங்களையும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நடத்தியுள்ளது.

இயற்கை வளங்களை சூறையாடுவதை தடுக்கவும், விபத்தில் சிக்கிக்கொண்ட தொழிலாளர்களுக்கு போதுமான நிதி உதவி செய்யவும், உயிரிழந்தவர் குடும்பத்திற்கு 25 லட்சம் ரூபாய் கொடுக்கவும், இறந்தவர் குடும்பத்திற்கு அரசு வேலை வழங்கவும், தனியார் குவாரிகளை கட்டுப்படுத்திட முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தமிழக அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

## சிவகிரியில் செந்தொண்டர் பயிற்சி முகாம்

தென்காசி மாவட்டம் சிவகிரி நகர குழு சார்பில் செந்தொண்டர் படை பயிற்சி முகாம் சிவகிரி அருகில் கோம்பை ஆற்று பகுதியில் நடைபெற்றது. இதில் 50க்கும் மேற்பட்ட இளைஞர்கள், மாணவர்களுக்கு மதன்குமார் பயிற்சி அளித்தார்.

முகாமில் சிவகிரி நகர செயலாளர் பாலசுப்பிரமணியன், பொருளாளர் ராஜேந்திரன், லட்சுமணன், ராஜகோபால், சண்முகவடிவு, குருவு, அருணாசலம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### இந்திய மாதர் தேசிய சம்மேளனம் சார்பில்

# மதுரையில் கியாஸ் விலை உயர்வை கண்டித்து போராட்டம்



மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் திருவள்ளுவர் சிலை முன்பு, இந்திய மாதர் தேசிய சம்மேளனம் சார்பில், மத்திய அரசின் பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு விலை உயர்வை கண்டித்து, இந்திய மாதர் தேசிய சம்மேளனம், மதுரை மாவட்ட புறநகர் பொறுப்புச் செயலாளர், கே.நாகஜோதி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் மண் அடுப்பு மற்றும் மண்பானைக்கு சூடம் பத்தி, சாம்பிராணி பொருத்தி அதன்முன்பு பூஜை செய்தும், அதன் பின்னர் சமையல் கேஸ் சிலிண்டர்க்கு மாலை அணிவித்து ஒப்பாரி வைத்தும், பறை அடித்தும் நூதன முறையில் மத்திய அரசுக்கு கண்டனத்தை தெரிவித்தார்கள்.

மேலும் இந்திய மாதர் தேசிய சம்மேளனம் தமிழ்நாடு மாநில துணைச் செயலாளர் எம்.கண்ணகி கண்டன உரையாற்றினார், என்.எஃப்.ஐ.டபுள்யூ மாநில குழு உறுப் பினர் எஸ்.சூரியகலா முன்னிலை வகித்தார், ஆர்.விஜயா, பி.மூக்கம்மாள், பெண்கள் திறன் மேம்பாட்டு பயிற்சியாளர்கள் விமலா, லோகேஸ்வரி உள்ளிட்டோர் கலந்து கொண்டு முழக்கங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

## மயிலாடுதுறையில் மக்கள் தொண்டர் படை பயிற்சி முகாம்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மயிலாடுதுறைமாவட்டக்குழுசார்பில் மக்கள் தொண்டர் பயிற்சி முகாம் சீர்காழியில் நடைபெற்றது. இதில் மா.பிரபாகரன் அனைத்திந்திய இளை ஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் பயிற்சியாளர் ஆர்.சந்திரசேகர ஆசாத் மாநில பயிற்றுனர் எம்.பாபு மதனகோபால் மாவட்ட பயிற்றுனர் ஆகியோர் பங்கேற்று பயிற்சி வழங் கினர். பயிற்சி முகாம் துவக்கி வைத்து மாவட்ட செயலாளர் சீனிவாசன்



வாழ்த்துரை வழங்கினார். பயிற்சி முகாமை எம்.செல்வராசு எம்.பி. முடித்து வைத்து வாழ்த்துரை வழங்கி வீரர்களுக்கு சான்றிதழ் வழங்கி கௌரவித்தார். மாவட்ட குழு உறுப்பினர் வழக்கறிஞர் சு.சுந்தரய்யா இளைஞர்களை ஊக்கு வித்து பாராட்டி பேசினார்.

## சுமைதூக்கும் தொழிலாளர் சங்க ஆண்டு பேரவை



ஏஐடியூசி தமிழ்நாடுநுகர்பொருள் வாணிப கழக சுமைதூக்கும் தொழிலாளர் சங்க 36வது ஆண்டுப்பேரவை திருவாரூர்மாவட்டம்மன்னார்குடியில் என்.புண்ணீஸ்வரன் நினைவரங்கில் மாநிலத் தலைவர் அ.சாமிகண்ணு தலைமையில் நடைபெற்றது.மாநில பொதுச் செயலாளர் சி.சந்திரகுமார் எதிர்கால கடமைகள் குறித்து அறிக்கை முன்வைத்தார். நாகை நாடாளுமன்ற உறுப்பினரும் ஏஐடியூசி மாநில துணைத் தலைவருமான எம்.செல்வராசு துவக்கி வைத்து உரையாற்றினார். மாவட்ட செயலாளர் ஆர்.சந்திரசேகர் ஆசாத் ஏஐடியூசி கொடியை ஏற்றி வைத்தார். ஏ.சிவா வரவேற்புரை ஆற்ற எம். கலியபெருமாள் நன்றியுரையாற்றினார். அஞ்சலி தீர்மானத்தை மன்னார்குடி மாவட்ட செயலாளர் வி கணேசன் முன்மொழிந்தார்.

மாநில பொருளாளர் தி. கோவிந்தராஜன் வரவு செலவு அறிக்கை முன்வைத்தார். நிகழ்ச்சியில் முன்னாள் மாவட்ட ஊராட்சி தலைவர் எம். செல்வராஜ், கோட்டூர் ஒன்றிய பெருந்தலைவர் வாசுகி முருகேசன், மன்னார்குடி ஒன்றிய செயலாளர் வீரமணி, நகர செயலாளர் கலைச்செல்வன், இளைஞர் பெருமன்ற செயலாளர் அருள்ராஜன், வங்கி ஊழியர் சங்க தலைவர் பிச்சைக்கண்ணு, தொலைபேசி ஊழியர் சங்கத் தலைவர் சின்னக்கண்ணு, சங்க நிர்வாகிகள் எஸ்.சிவானந்தம், எம்.எஸ். கிருஷ்ணன், கே.எஸ்.முருகேசன் உள்ளிட்டோர் பங்கேற்று இறந்த 22 தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு ரூபாய் பத்தாயிரம் வீதம் ரூ 2,20,000 குடும்ப நிதி வழங்கினர். 716 தொழிலாளர்கள் பேரவையில் பங்கேற்றது சிறப்புக்குரியது.

நெல் கொள்முதலில் குறைபாடுகளின்றி கொள்முதல் செய்யவேண்டும், முன்கூட்டியே திட்டமிட வேண்டும், கூலி உயர்வு அளிக்க வேண்டும், ஒப்பந்த முறையை கைவிட்டு நேரடி தொழிலாளர் முறையை தொடர்ந்து அமல்படுத்தப்பட வேண்டும் என் பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாவட்ட தலைவராக பி.மாசிலாமணி, மாவட்ட செயலாளராக எஸ்.புஸ்பநாதன், பொருளாளராக செல்லதுரை,துணைத்தலைவர்களாக எம்.ராஜேஷ் கண்ணா, குணசேகரன் துணை செயலாளர்களாக ப.பாலு, எம்.ஜி.பாலசுந்தரம் மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்கள் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.



### காட்டுப் பன்றிகள் அட்டகாசத்தை கட்டுப்படுத்தக் கோரி

# காத்திருப்பு போராட்டம்

மெலட்டூர் அருகே அம்மாபேட்டை ஒன்றியம் விழுதியூர் ஊராட்சி வெட்டுவாய்க்கால் பகுதியில், நூற்றுக் கணக்கான காட்டுப்பன்றிகளால் விவசாயம் பாதிப்படைந்ததுடன், பொதுமக்கள் உயிருக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டு வந்தது. இதைத் தொடர்ந்து தஞ்சை மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டும் காட்டுப் பன்றிகளை பிடிக்க நடவடிக்கை எடுக்காத வனத் துறையை கண்டித்து, விழிதியூர் கிராம நிர்வாக அலுவலகம் முன்பு, தமிழ்நாடு விவசாய சங்கம் சார்பில் காத்திருப்பு போராட்டம் நடந்தது.

போராட்டத்திற்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் ஒன்றியச் செயலாளர் வெங்கடேசன் தலைமை வகித்தார். இதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அம்மாபேட்டை ஒன்றிய செயலாளர் செந்தில்குமார், தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் பாலு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய துணைச் செயலாளர் குருமூர்த்தி,மாதர் சங்க ஒன்றிய செயலாளர் தாமரைச்செல்வி உள்பட பலர் கலந்துக் கொண்டனர். இதில் கலந்துக் கொண்டவர்கள் அங்கேயே சமைத்தும் சாப்பிட்டனர்.




### விருதுநகர் மாவட்டத்தில் பாதயாத்திரை, தொண்டர்படை பயிற்சி, நிதிவசூல் திட்டமிட

# கிளை செயலாளர்கள் பேரவைக்கூட்டம்

விருதுநகர் மாவட்டத்தில் இந்திய கம்யூனிஸ் கட்சியின் சார்பில் பாதயாத்திரை, தொண்டர்படை பயிற்ச்சி, வீடுவீடாக நிதிவசூல் செய்வதற்கு திட்டமிடும் வகையில் மாவட்ட முழுவதும் உள்ள கிளை செயலாளர்கள் மற்றும் முக்கிய நிர்வாகிகளை கூட்டி திட்டமிடுவது என முடிவு செய்யப்பட்டது. விருதுநகரில் நடைபெற்ற கூட்டத்திற்கு மாநில குழு உறுப்பினர் பாலமுருகன் தலைமை வகித்தார். விருதுநகர் சக்கணன், சாத்தூர் சாமிநாதன், அருப்புக்கோட்டை முனியசாமி, திருச்சுழி செல்வம் , மாநில குழு உறுப்பினர் செந்தில்குமார் உள்பட கிளை செயலாளர்கள் கலந்து கொண்டார்கள்.

கிருஷ்ணன் கோவிலில் நடைபெற்ற கூட்டத்திற்கு பொன்னு பாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ தலைமை வகித்தார். வத்திராயிருப்பு கோவிந்தன், திருவில்லிபுத்தூர பலவேசம் , தவிச மாவட்ட செயலாளர் சவுந்திரபாண்டியன் உள்பட கிளை செயலாளர்கள் கலந்து கொண்டார்கள். இராஜபாளையத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு மாவட்ட நிர்வாககுழு உறுப்பினர் வி.இரவி தலைமை வகித்தார். இராஜபாளையம் மேற்கு கணேசமூர்த்தி, இராஜபாளையம் கிழக்கு இராமச்சந்திரன், வெம்பக்கோட்டை நடராஜன், இராஜபாளையம் நகரம் விஜயன் ,ஏஐடியுசி மாவட்ட செயலாளர் முத்துமாரி, விதொச மாவட்ட செயலாளர் வரதராஜன் உள்பட கிளை செயலாளர்கள் கலந்து கொண்டார்கள். மூன்று மையங்களில் நடைபெற்ற கூட்டங்களில் மாநில நிர்வாககுழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார் ஆகியோர் கலந்துகொண்டு நோக்கங்களை விளக்கி பேசினார்கள்.

## அடிப்படை வசதிகள் செய்து தரக்கோரி தேவாரம் மேற்கு கிளை ஆர்ப்பாட்டம்

தேனி மாவட்டம், தேவாரம் மேற்கு கிளை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக அனைத்து தெருவிளக்குகளை பராமரிப்பு செய்திடு, பஸ் நிலையத்தின் பணியை விரைந்து முடித்திடு போன்ற மக்கள் கோரிக்கையை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு கிளை செயலாளர் ஆறுமுகம் தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்து உத்தமபாளையம் ஒன்றிய செயலாளர் வீ.பாண்டி உரையாற்றினார். கட்சியின் மாவட்ட செயற்குழு உறுப்பினர் வே.பரமேஸ்வரன் சிறப்புரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் தோழர்கள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.



## சுவாமி திருஞானசம்பந்தர் (கவிதை நாடகம்)

இந்து சமயத்தின் இரு கண்களாக போற்றப்படுபவை சைவம்,வைணவம்ஆகும். இவற்றுள் சைவசமய நூல்களாகப் பன்னிரு திருமுறைகள் சிறப்பாகப் போற்றப்படுகின்றன. பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்தரால் பாடப்பட்டவை. அடுத்த மூன்றும் சுவாமி திருநாவுக்கரசரால் பாடப்பட்டவை ஆகும். ஏழாவது திருமுறை சுந்தரரால் பாடப்பட்டது. திருஞானசம்பந்தர் பாடிய 4147 பாடல்களில் அற்புத நிகழ்வுகள் நிகழ்த்திய தலங்கள் குறித்த பாடல்களை தெரிந்துகொள்ள வேண்டும் என்ற குறிக்கோளுடன் படைக்கப்பட்டது இந்நூல்.

''மூவாசை துறந்து முழுஞானம் பெற்றவர்கள், நாவார நல்கும் நல்வாக்கும் நல்லாசியும், தவறாது பலிக்கும் தன்மை உடையது''. பொன்னாசை, பொருளாசை, மண்ணாசை துறந்தவர்கள் உடைய நல்வாக்கே பலிக்கும். இப்படி மூவாசை துறந்தவர்கள் தான் முழு ஞானம் பெற்றவர்கள் ஆவார்கள். ஆனால் இன்றைய நிலைமையில் இந்த மூன்றின் மேல் அதிக ஆசை கொண்டவர்கள் தான் ஞானிகளாகவும், யோகிகளாகவும், முனிவர்களாகவும் ''போலியாக'' வலம் வந்து கொண்டிருக்கிறார்கள்.



''பக்குவப்பட்டவர்க்கே மெய்யனத் தோன்றும், பக்குவம் அற்றவர்க்குப் பொய்யனத் தோன்றும்''. மெய் என நாம் எதை தேடுகிறோம். பக்குவம் என்பதே மெய் ஆகும் என கூறுகிறார். ஏனெனில் பக்குவப்பட்டவர்க்கே மெய் எது, பொய் எது என தெரியும் என்று குறிப்பிடுகிறார்.

''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி, ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது, வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே''. இறைவனை காதலன் ஆக்கி கசிந்து கண்ணீர் மல்கி பாடும் போது அவருடைய அருளாசியைப் பெற முடியும் என பாடுகிறார்.

இந்நூல் ஞானப்பால் உண்ணல், பொற்றாளம் பெறுதல், முத்துச்சிவிகை, முத்துக்குடை பெறுதல், முயலகன் என்னும் நோய் தீர்த்தல், குளிர் காய்ச்சல் போக்குதல், வேள்விக்குப் பொருள் பெறுதல், சமணர்களை அனல்வாதம், புனல்வாதம் நிகழ்த்தி வெல்லுதல், புத்த மதத்தினரை வென்று அவர்களை சைவர்கள் ஆக்கிய திறன், நிறைவாக பூம்பாவையை வெந்த சாம்பலிலிருந்து பொண்ணு ருவாக்குதல் என்னும் நிகழ்வுகளாக இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

சைவ நெறியின் மீது பற்று உடையவர்கள் இந்நூலின் மீது மிகுந்த நாட்டம் கொள்வார்கள். டாக்டர் ஆ.கணேசன் அவர்கள் சுவாமி திருஞானசம்பந்தர் என்னும் கவிதை நாடக நூலை மிகச் சிறப்பாக உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்.


**– சமரன்**

**தொகுப்பாசிரியர் : டாக்டர் ஆ. கணேசன்**
**வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்,அம்பத்தூர், சென்னை 50**
**பக்கங்கள் : 108 விலை: ரூ.100**

# நூல் நயம்

## ராஜ் கௌதமன் கட்டுரைகள்

சமுதாயத்தை பாதிக்கக் கூடிய பல்வேறு பிரச்சினைகள், சம்பவங்கள்,அரசியல் நிகழ்வுகள் குறித்து ராஜ்கௌதமன் பல்வேறு இதழ்களில் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பே இது. வாஜ்பாய் தலைமையிலான மத்திய அரசு வேதாகம கல்வி என்கிற பெயரில் ஒரு கல்வித் திட்டத்தை அறிவித்தது. அதை ஒட்டி தமிழக அரசும் இதே கல்வி திட்டத்தை அறிவித்து அதற்கு பெரும் நிதி ஒதுக்கி அதை மாணவர்கள் படிக்க வேண்டும் என சட்டப்பேரவையில் அறி வித்துள்ளதை, இச்செய்தியின் அரசியல் பின்னணியை புரிந்து கொள்வது ஒன்றும் சிரமம் இல்லை. பார்ப்பனப் பெண்ணை முதலமைச்சராகக் கொண்டு தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள'' திராவிட அரசாங்கத்தின்'' சாதி அடிப்படை வெட்ட வெளிச்சமாகியுள்ளது. எங்கும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள பார்ப்பனிய மீட்பு வாதத்தின் ஒரு பருக்கை தான் இது என வேதாகமக் கல்வியைத் சாடியுள்ளார்.



வரலாற்றில் எத்தனையோ சக்திகள், ஏற்றத் தாழ்வான, தங்களுக்குப் பாதகமான நிலைமைகளை அகற்ற போராடி\வந்திருக்க,புறக்கணிக்கப்பட்ட மக்கள் திரள்களான இனக் குழு மக்கள், மகளிர், தலித் மக்கள் ஆகிய பிரிவினரை மட்டும் இங்கே முன்னிலைப்படுத்துவதற்கான நியாயம் ஒன்று இருக்கிறது. அதனை ஒரே வாக்கியத்தில் கூறுவதென்றால், இதுவரை ஏற்றத்தாழ்வான, பாரபட்சமான அநீதியான சமூக நிலைமைகளை எதிர்த்துப் போராடிய எல்லா சக்திகளாலும் புறக் கணிக்கப்பட்டவர்களாக இனக்குழுமக்களும், மகளிரும்,தலித் மக்களும் இருப்பதே அவர்களை முன்னிலைப்படுத்துவதற்கான நியாயம் ஆகும். இதனை ''புறக்கணிக்கப்பட்ட மக்கள் நோக்கில், மறுபரிசீலனை சமூக உருமாற்றமும்'' என்ற கட்டுரையில் கூறியுள்ளார்.

''இந்நாட்டவன் என்ற நாட்டுரிமை உணர்வு இல்லாமல் அரசியல் விடுதலை இருக்க முடியாது. எங்கே சாதி அமைப்புமுறை பரவி இருக்கிறதோ அங்கே நாட்டுரிமை இருக்காது, என்று பாரதி 'இந்து' பத்திரிகையில் 1904 இல் எழுதிய கட்டுரை வாசகத்தை 'பாரதியின் அரசியல் இயக்கம்' என்ற கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். பல்வேறு சமூகப் பிரச்னைகள் குறித்தும், பெண்ணியம், தலித்தியம், பாரதி இயல், நவீன இலக்கியம் ஆகிய பொருண்மைகளில் எழுதப்பட்ட காத்திரமான கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல். நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் வெளியிட்டுள்ள ''ராஜ்கௌதமன் கட்டுரைகள்'' என்னும் இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம். **– இன்சுவை பாரதி**

**தொகுப்பாசிரியர் : டாக்டர் ஆ. கணேசன்**
**வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்,அம்பத்தூர், சென்னை 50**
**பக்கங்கள் : 108 விலை: ரூ.100**

**வாரம் தோறும் வெளிவரும்**

**ஜனசக்தி - நூல் நயம்**

புத்தக விமர்சன பகுதிக்கு அனைத்துப் பதிப்பகங்களின் புத்தகங்களும் வரவேற்கப்படுகின்றன. புத்தகங்களை அனுப்புவோர் 2 பிரதிகள் அனுப்ப வேண்டும்.

தொடர்புக்கு : 8220468816

அனுப்பவேண்டிய முகவரி:
**ஜனசக்தி**
பாவை பிரிண்டர்ஸ் மாடி
142/16 ஜானி ஜான்கான் ரோடு, இராயப்பேட்டை,
சென்னை - 600014

சுழலும் உலகம்

செய்தித்தொகுப்பு: அருண் அசோகன்



# வளரும் நாடுகளைத் திவாலாக்கும் அமெரிக்க கொள்கைகள்

1970களிலிருந்து அமெரிக்க நாணயமான டாலரின் மேலாதிக்கத்தை பயன்படுத்திக் கொண்டு அந்நாடு உலகத்தை ஒரு வேட்டைக் காடாக்கி வருகிறது. அமெரிக்க மத்திய ரிசர்வ் வங்கியின் தற்போதைய கடுமையான நிதிக் கொள்கைகள் மற்றும் அதிகரித்து வரும் எண்ணெய், உணவுப் பொருட்களின் விலை காரணமாக வளரும் நாடுகள் திவாலாகிப்போகும் சூழல் உருவாகியுள்ளது. இதன் காரணமாக வளரும் நாடுகள் அவற்றின் பொதுச் சொத்துக்களை அமெரிக்க முதலீட்டாளர்களுக்கு விற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படும் என்று கூறப்படுகிறது.


கடந்த மார்ச் மாதத்தில் அமெரிக்க மத்திய ரிசர்வ் வங்கி அதன் வட்டி விகிதத்தை 25 புள்ளிகள் உயர்த்தியது. மீண்டும் இந்த மாதத்தில் 50 புள்ளிகளை உயர்த்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. ஏற்றுமதி – இறக்குமதி சமன்பாடு பாதிக்கப்பட்டு அந்நியச் செலாவணி நெருக்கடியில் உள்ள வளரும் நாடுகள், நிதி நெருக்கடி காரணமாக அவற்றின் சொத்துக்களை விற்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகின்றன; சர்வதேச நிதியத்திடம் கடன் பெற வேண்டிய நிலைமைக்கு தள்ளப்படுகின்றன. இதுபோன்ற சூழலில், வேறு வழியின்றி சர்வதேச நிதியத்தின் நிபந்தனைகள் மற்றும் உத்தரவுகளின்படி, வளரும் நாடுகள் அவற்றின் பொதுச் சொத்துக்களை விற்பனை செய்யும் கட்டாயம் உருவாகி விடும். நிலம், காடுகள், கனிம வளங்கள், உள்கட்டமைப்புகள் இன்னபிறவும் பொதுச் சொத்துகள் என்ற வகைப்பாட்டிற்குள் அடங்கும்.

அமெரிக்காவிலும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்து வருவதை பொருளாதார நிபுணர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். 2008 ஆம் ஆண்டிலிருந்து அமெரிக்க பொருளாதாரம் மெல்ல சரிந்து வருகிறது; வாழ்க்கைத் தரம் குறைந்து வருகிறது. வளர்ச்சி மற்றும் அனைத்து வளங்களின் பெரும் பகுதி, அந்நாட்டு மக்கள் தொகையில் வசதி படைத்த ஒரு சதவிகிதத்தாரிடம் குவிந்து வருகிறது. எனவே, மீதமுள்ள 99% மக்களின் பொருளாதார நிலைமை மோசமடைந்து வருகிறது. இந்த நிலைமை மேலும் தீவிரமடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கோவிட் பெருந்தொற்றின்போது, அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட பல டிரில்லியன் டாலர் பொருளாதார ஊக்குவிப்பு நடவடிக்கைகள் ஏகபோக சக்திகள், தனியார் முதலீட்டு நிறுவனங்கள், ரியல்எஸ்டேட் நிறுவனங்கள் ஆகியோரை உள்ளடக்கிய அந்த ஒரு சதவிகித மேல் தட்டு வர்க்க மக்களுக்கு மட்டுமே பயனளிப்பதாக இருக்கிறது. இந்தப் பின்புலத்தில் அமெரிக்காவின் நிதிக் கொள்கைகள் காரணமாக வளரும் நாடுகளில் பொருளாதார நெருக்கடிகள் அதிகரித்து, அவை கடனில் மூழ்கி திவாலாகும் நிலை ஏற்பட வாய்ப்புகள் அதிகம் என்று பொருளாதார நிபுணர்கள் கருத்து தெரிவிக்கிறார்கள்.

### அமெரிக்க டாலருக்கு எதிராக

## பிரேசில் முன்மொழியும் இலத்தீன் அமெரிக்க நாணயம்



பிரேசில் நாட்டில் இந்த ஆண்டு அதிபர் தேர்தல் நடைபெற இருக்கிறது. இந்தத் தேர்தலில் இடதுசாரி தலைவரான லூலா டி சில்வா வெற்றி பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தான் வெற்றி பெறும் பட்சத்தில் அமெரிக்க நாணயமான டாலரின் ஆதிக்கத்தை குறைத்திட இலத்தீன் அமெரிக்க நாடுகளுக்காக 'சுர்' (தெற்கு) எனும் நாணயத்தை உருவாக்க இருப்பதாக தேர்தல் பிரச்சார பேரணி ஒன்றில் பேசும்போது கூறியுள்ளார்.

பிரேசில் நாட்டு தொழிலாளர் கட்சியின் நிறுவனத் தலைவரான லூலா 2003 – 2011 வரை இரு முறை அந்நாட்டின் அதிபராகப் பொறுப்பு வகித்துள்ளார். ஸ்பானிஸ் மொழியில் தெற்கு என்று பொருள்படும் 'சுர்' எனும் சொல்லை அத்தகைய புதிய நாணயத்திற்குப் பெயராக அறிவித்த லூலா, இலத்தீன் அமெரிக்காவில் உள்ள நாடுகள் வழக்கம்போல அவற்றின் நாணயத்தை உள்நாட்டு பரிவர்த்தனைக்கு பயன்படுத்திக் கொண்டு, நாடுகளுக்கு இடையேயான வர்த்தகத்திற்கு டாலருக்கு பதிலாக இப்புதிய நாணயத்தை பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கூறியுள்ளார். இதன் மூலம் அந்தப் பிராந்தியத்தில் பணவீக்கத்தை கட்டுப்படுத்த முடியும் என்று நம்பிக்கை தெரி வித்துள்ளார். மேலும், இப்புதிய நாணயம் இலத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு இடையிலான ஒருமைப்பாட்டையும், அந்தப் பிராந்தியத்தின் பொருளாதார இறையாண்மையையும் வலுப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பத்திரிகையாளர் ஷிரின் அபுஅக்லே படுகொலை

பாலஸ்தீன பகுதியில் செய்தி சேகரிப்பு பணியில் ஈடுபட்டிருந்த அல்ஜசீரா பத்திரிகை நிருபர் ஷிரின் அபுஅக்லே இஸ்ரேலிய ராணுவத்தினரால் அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இந்தப் படுகொலையை உலகத் தலைவர்கள் பலரும் கடுமையாகக் கண்டிதுள்ளதோடு வெளிப்படையான மற்றும் சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கருத்து தெரிவித்துள்ளனர்.

2021 நவம்பர் மாதம் ஷிரின் அபுஅக்லே தன்னை பேட்டி கண்டதாக நினைவு கூர்ந்து வருத்தம் தெரி வித்துள்ள ஐ.நா.வுக்கான அமெரிக்க தூதர் லின்டா தாமஸ் கிரீன்பீல்டு, அபுஅக்லேவின் படுகொலை மிகவும் கொடூரமானது என்று குறிப்பிடுகிறார்.

இந்தப் படுகொலை குறித்து விரிவான விசாரணை கோரிய அமெரிக்க உள்துறை செய்தித் தொடர்பாளர், ஊடக சுதந்திரத்தின் மீதான நேரடித் தாக்குதலாகவே இந்தப் படுகொலையைக் கருதுவதாக கூறியுள்ளார். அபுஅக்லேவின் படுகொலையை ஒரு மோசமான குற்றச் செயல் என்று கண்டித்த பாலஸ்தீன தலைமை, உண்மை நிலவரத்தை மூடி மறைப்பதற்காக பத்திரிகையாளர்களை குறிவைத்து வேட்டையாடுவது எனும் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு கொள்கையின் ஒரு பகுதியே இதுபோன்ற படுகொலைகள் என்று சுட்டிக் காட்டியுள்ளது. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இப்படுகொலை குறித்து வழக்கு தொடுக்க உள்ளதாக பாலஸ்தீன தலைமை அறிவித்துள்ளது.

பத்திரிகையாளர்களுக்கு எதிரான வன்முறையை சீனா எப்போதும் கடுமையாக ஆட்சேபித்து வருகிறது என்று சீன வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார். இதுபோன்ற குற்றங்கள் சட்டம் மற்றும் நீதியின்படி எதிர்கொள்ளப்படும் என்று சீனா நம்புவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அல்ஜசீரா பத்திரிகை நிருபர் ஷிரின் அபுஅக்லே இஸ்ரேலிய ராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டுள்ளதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா வன்மையாக கண்டித்து டுவிட்டரில் செய்தி வெளியிட்டுள்ளார். கட்சியின் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ள அவர் இஸ்ரேலிய ராணுவத்தினரின் இதுபோன்ற மோசமான குற்றச் செயல்களுக்கு எதிராக சர்வதேச சமூகம் ஒன்றிணைந்து போராட வேண்டும் என்று அறைகூவல் விடுத்துள்ளார்.

## முற்போக்கு எழுத்தாளர் கூட்டமைப்பின் தேசிய மாநாடு

# ஜாலியன் வாலாபாக் நூற்றாண்டு விழா செய்தியை நாடெங்கும் பரப்புவோம்!

1919 ஏப்ரல் 13ல் நடந்த ஜாலியன்வாலா பாக் படுகொலை நிகழ்வின் நூற்றாண்டு நினைவாக மூன்று ஆண்டுகளுக்கு முன் 2019ல் ஜாலியன்வாலா பாக் மாநாட்டை நடத்த முடிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால் கரோனா பெருந்தொற்று மற்றும் அதன் கட்டுப்பாடுகள் காரணமாக நடத்த இயலாது போனது. தற்போது முற்போக்கு எழுத்தாளர் கூட்டமைப்பின் பஞ்சாப் கிளை அம்மாநாட்டை அமிர்தசரஸ், குருநானக் தேவ் பல்கலைக் கழகத்தின் ஸ்ரீகிரந்த் சாகிப் பவன் அரங்கில் “ஜாலியன்வாலா பாக், நேற்று மற்றும் இன்று : எதிர்ப்பைக் கட்டியமைத்தல்” என்ற தலைப்பிலான இரண்டு நாள் தேசிய மாநாட்டை எழுத்தாளர் சங்கம், பஞ்சாப் சாகித்ய அகாடமி மற்றும் குருநானக் தேவ் பல்கலைக் கழக ஜாலியன்வாலா பாக் இருக்கை அமைப்புகளுடன் கூட்டாக நடத்தியது.

எப்போதெல்லாம் ஜெனரல் டயர் போன்ற கொடியவர்கள் பிறப்பார்களோ அப்போதெல்லாம் தேசத் தியாகிகள் உத்தம் சிங் மற்றும் பகத் சிங் போன்றவர்கள் கொடுமைகளை மறுத்து எதிர்த்து நின்று அவர்களுக்குப் பாடம் புகட்ட மக்கள் மத்தியிலிருந்து பிறப்பார்கள் என்ற வலிமையான செய்தியுடன் சென்ற வாரம் அம்மாநாடு வெற்றிகரமாக நடந்தேறியது.

தொடக்க அமர்வில் புகழ்பெற்ற அறிஞர் பரஞ்சாய் குஹா தாகுர்தா, ‘இந்நாட்களில் சமூக ஊடகங்கள் மூலமாகப் பரப்பப்படும் வகுப்புவாத விஷம் எதிர்காலத் தலைமுறைகளுக்கு ஆபத்து நிரம்பியது. அதனை எதிர்கொள்ள இன்றைய தேவை ஒன்றுபட்ட பெருந்திரள் இயக்கம் என்பதே ஜாலியன்வாலா பாக் வழங்கும் செய்தியாகும்” என்று குறிப்பிட்டார்.

மாநாட்டில் கேரளாவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் பினாய்விஸ்வம், சகிப்பின்மை மற்றும் இந்நாட்களின் வகுப்புவாத வன்முறை தொடர்பாகத் தனது அனுபவங்களைக் கூறினார்.

## குர்னாம் கன்வர்

சமீபத்திய ஜஹாங்கீர்புரி வன்முறையில் பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்துத் தார்மிக ஆதரவை வெளிப்படுத்தவும் அவர்களது துயர்களைப் பகிர்ந்து கொள்ளவும், காயம்பட்ட உணர்வுகளை ஆற்றவும் அங்கே சென்றதாகவும், ஆனால், தன்னை அனுமதிக்க நிர்வாகமும் போலீசாரும் தடுத்து விட்டனர் என்றார். போராடும் மக்களுடனும், இந்தியாவின் பன்முகக் கலப்புக் கலாச்சாரத்துடனும் உறுதியாக நிற்பதற்காக எழுத்தாளர்கள் மற்றும் அறிஞர்களை அவர் பாராட்டினார்.

பட்டியாலா பஞ்சாபி பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் டாக்டர் அரவிந்த் எழுத்தாளர் கூட்டமைப்பின் பஞ்சாப் பிரிவு தலைவர் டாக்டர் தேஜ்வந்த் கில் அனைவரையும் வரவேற்றார். அனைத்திந்தியத் தலைவர் மேனாள் டிஜிபி விபூதி நாராணன் ராய் நன்றி கூறினார். பஞ்சாப் பொதுச் செயலாளரும் புகழ்பெற்ற பஞ்சாபிக் கவிஞருமான பேராசிரியர் சுர்ஜித் ஜட்ஜ், டாக்டர் சுக்தேவ் சிங், டாக்டர் சரப்ஜித் சிங்

குல்ஸார் சிங் சாந்து காஷ்மீரின் முற்போக்குக் கவிஞர் ஹாலிட் ஹூசைன், டீஸ்டா செட்டால்வத், ஷாமுல் இஸ்லாம், பர்முந்தர் சிங் முதலானவர்கள் உரையாற்றினர். நிகழ்வுகளை டாக்டர் சுக்தேவ் சிங் சிர்ஸா வழி நடத்தினார்.

இரண்டாவது அமர்வு “இங்கே கலந்து இருக்கிறது, இந்து முஸ்லீம் இரத்தம்” (பாபு ஃபிரோஸ் தின் ஷரஃப் எழுதிய கவிதை வரி) என்ற தலைப்பின் கீழ் சௌதி ராம் யாதவ், டாக்டர் அமன்தீப் கவுர், ரவீந்தர் நாத். ஹீடு பரத்வாஜ், டாக்டர் ஷவீந்தர்பால் கவுர், கோபால்ஜி பார்த்தன், பால்ஜித் சிங் விராக் உள்ளிட்டோர் உரையாற்றினர்.

மாலை அமர்வில் பல்வேறு மாநிலங்களிலிருந்து வந்திருந்த கவிஞர்கள் ஜாலியன்வாலா பாக் படுகொலை நிகழ்வுக்கு அர்ப்பணித்து தங்கள் கவிதைகளைப் படைத்தளித்தனர். அந்நிகழ்வு மறுநாள் காலையும் தொடர்ந்தது. பூபின்தர் சாந்து வழிநடத்திய அமர்வு நாட்டின் பன்மை கலாச்சாரத்தையும் ஜனநாயகத்தையும் பாதுகாக்கப் போராடவும் தியாகம் செய்யவும் தனது குரலை அழுத்தமாக எழுப்பியது. இரவு அதே தலைப்பில் புகழ்பெற்ற பஞ்சாபி இயக்குநர் கேவல் தாலிவால் அவர்களால் ஒரு நாடகம் நடத்தப்பட்டது.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், எழுத்தாளர், அமைப்பின் மேனாள் பொதுச் செயலாளர் டாக்டர் இராஜேந்திர இராஜன், இரமேஷ் யாதவ், அஷிஸ் திரிவேதி, டாக்டர் சரப்ஜித் சிங், வினீத் திவாரி உள்பட பல அறிஞர்கள் உரையாற்றினர்.

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஜாலியன்வாலாவின் ஒரிஜினல் கட்டமைப்பை மீண்டும் நிர்மாணிக்க வலியுறுத்தப்பட்டது; இந்தியாவில் அதிகரித்துவரும் வகுப்புவாத வன்முறை குறித்துக் கவலை தெரிவித்தது; ஒன்றுபட்ட போராட்டம் மற்றும் பொதுவான இரத்தத்தைத் தியாகம் செய்த ஜாலியன்வாலாவின் செய்தியை அனைத்துச் சமூகங்களும் பரவச் செய்ய தீர்மானம் அறைகூவல் விடுத்தது. மற்றொரு தீர்மானம் ரஷ்ய உக்ரைன் போரை உடனடியாக நிறுத்தவும் பிரச்சனைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு கண்டு நேட்டோவின் சதிகளை முறியடிக்கவும் வலியுறுத்தியது.

பங்கேற்ற அனைவரையும் அனைத்திந்திய முற்போக்கு எழுத்தாளர் கூட்டமைப்பின் (கிமிறிகீகி) பொதுச் செயலாளர் டாக்டர் சுக்தேவ் சிங் சிர்ஸா பாராட்டினார்.

தமிழில்: நீலகண்டன்

# பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலை உயர்வைக் கண்டித்து

## இந்திய மாதர் தேசிய சம்மேளனம் ஆர்ப்பாட்டம்

பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலை உயர்வினை கண்டித்து இந்திய மாதர் தேசிய சம்மேளனம் சார்பில் தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**திருத்துறைப்பூண்டி:** திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தலைமை தபால் நிலையம் எதிரில், சாலையில் விறகு அடுப்பு வைத்து சமைக்கும் நுதன போராட்டம் இந்திய மாதர் தேசிய சம்மேளனம் திருத்துறைப்பூண்டி ஒன்றியக்குழு சார்பில் எழுச்சியோடு நடைபெற்றது. பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலை உயர்வினை கண்டித்து கேஸ் சிலிண்டருக்கு மாலை அணிவித்தும், சாலையில் விறகு வைத்து அடுப்பு வைத்து சமைக்கும் போராட்டமும் நடத்தினர். தங்கள் உள்ள குமுறலை வெளிப்படுத்தும் விதமாக ஒப்பாரி பாடல் வழியாக தங்களது கண்டனத்தை வெளிப்படுத்தினர். இதில் சங்கத்தின் மாவட்ட செயலாளர் எஸ்.தமயந்தி. ஒன்றிய செயலாளர் சு.தமிழ் செல்வி, ஒன்றிய தலைவர் எஸ்.கவிதா, ஜி.குருமணி, கே.விஜயா, க.சுஜாதா, பி.ஜோதி ஆகியோர் தலைமையில் நடைபெற்ற போராட்டத்தில் 600 க்கும் அதிகமான பெண்கள் கலந்துகொண்டு கண்டனத்தை வெளிபடுத்தினர். முன்னதாக திருவாரூர் சாலை பிஎஸ்ஆர் மணிமண்டபம் அருகிலிருந்து பேரணியாக நாகை சாலை தலைமை தபால் நிலையம் வந்தடைந்தனர்.




இந்திய மாதர் தேசிய சம்மேளனம் கன்னியாகுமரி மாவட்டத்தின் சார்பில் கியாஸ் விலை உயர்வு கண்டித்து ஆர்ப்பாட்டம் மீனாட்சிபுரம் நாகர்கோவிலில் செல்வராணி தலைமையில் நடைபெற்றது. பேரூராட்சி கவுன்சிலர் எஸ்.சுதாதுவக்கி வைத்து பேசினார்.

இந்தப் போராட்டத்தை வாழ்த்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட பொருளாளர் சுபாஷ் சந்திரபோஸ், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் இந்திய மாதர் தேசிய சம்மேளன அருள்குமார், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.கே.ஸ்ரீகுமார், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தாலுகா செயலாளர் அண்ணாதுரை, கல்யாணசுந்தரம், தங்கம் ஆகியோர் இந்தப் போராட்டத்தை வாழ்த்திப் பேசினர். ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்து மாவட்ட செயலாளர் இசக்கிமுத்து பேசினார்.

**மதுரை:** மதுரை மாநகர் மாவட்டம் சார்பில் சமையல் கேஸ், பெட்ரோல், டீசல், விலை உயர்வை கண்டித்து மதுரையில் மாவட்ட செயலாளர் பா.ராஜலெட்சுமி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சியின் மாநகர் மாவட்ட செயலாளர் எம்.எஸ்.முருகன், சி.தாமஸ், மாதர் சங்க துணை செயலாளர் காமாட்சி, மணிமேகலை எக்ஸ்.எம்.சி. உட்பட திரளாக பெண்கள் பலர் கலந்து கொண்டனர். மாவட்ட தலைவர் கற்பகவல்லி நன்றிகூற ஆர்ப்பாட்டம் நிறைவுற்றது.

**புளியங்குடி:** தென்காசி மாவட்டம் புளியங்குடியில் இந்திய மாதர் தேசிய சம்மேளனம் சார்பில் பெட்ரோல் டீசல் கேஸ் மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்த கோரி ஒன்றிய மோடி அரசை கண்டித்து புளியங்குடி நகர்மன்ற 29வது வார்டு உறுப்பினர் பாக்கியம் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் மாதர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் கந்தம்மாள், சிவகிரி சண்முகவடிவு, ராயகிரி சிவகுரு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வாசுதேவநல்லூர் ஒன்றிய செயலாளர் ப.வேலு, புளியங்குடி கிளை செயலாளர்கள் சீனிவாசன், சுப்பிரமணியன், மணிகண்டன், பிச்சையா ஆகியோர் பங்கேற்று கண்டன உரையாற்றினர்.












JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 21.05.2022 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registrar of Newspapers for India, Under Regd No: 1222/57


















1ம் பக்கத் தொடர்ச்சி >>

கேட்டிருந்தால் நாங்கள் உதவி இருப்போம். 2015 ஆண்டே முன்னாள் முதலமைச்சர் கலைஞர், புதிய கல்விக் கொள்கை உருவாக்கப்படுவதை எதிர்த்தார். புதிய கல்விக்கொள்கை அமல்படுத் துவது நமது கடிகாரத்தை நாமே திருப்பி வைப்பதற்கு சமம் என்று கருத்து தெரிவித்திருந்தார். முந்தைய காலத்தில் இந்தியாவில் என்ன கல்விமுறை இருந்ததோ அதனை இந்த புதிய கல்விக் கொள்கை அழைத்து செல்கிறது.

“பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை நாலும் கலந்து உனக்கு நான் தருவேன்கோலஞ் செய்துங்கக் கரிமுகத்துத்தூமணியேநீயெனக்குச் சங்கத் தமிழ் மூன்றும் தா “ என்று எங்களுக்கு தமிழில் மந்திரங்கள் உள்ள போது சமஸ்கிரதம் எதற்கு.

எங்களுக்கு புரியும் மொழியில் கல்வி வேண்டும். மேலும், கற்கை நன்றே கற்கை நன்றே நன்றே பிச்சை எடுத்து பிச்சை புகினும் கற்கை நன்றே என்று தான் ஔவையார் போன்றவர்கள் கூறினார்களே தவிர தன்மானத்தையும் , தாய் மொழியையும் விட்டுக் கொடுத்து படிக்க வேண்டும் எனக் கூறவில்லை.

அனைத்து குழந்தைகளும் படிப் பதற்காக உதவித்தொகை வழங்கும் திட்டம் கொண்டு வரப்பட்டது. இடஒதுக்கீடு என்ற சொல்லே இந்த கொள்கையில் இல்லை. இவ்வாறு அமைச்சர் பேசினார்.

மாநாட்டில் மகாராஷ்டிரா மாநில அமைச்சர் ஜித்தேந்திர அவாத் பேசியது, தேசிய கல்வி கொள்கை என்ற பெயரில் செயல்படுத்தப்பட இருக்கும் இந்த கொள்கை தேசிய சுரண்டல் கொள்கையே, இந்தியாவிலிருக்கும் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, பழங்குடியினருக்கு கல்வியை எட்டாக்கணியாக்கும் முயற்சியே இந்த தேசிய கல்வி கொள்கை. மேலும் செல்லப்போனால் கல்வி என்பது பொது பட்டியலிலிருந்து மாநில பட்டியலுக்கு கொண்டு வரப்பட வேண்டும், டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் அவர்களின் கூற்றுப்படி இட ஒதுக்கீடு என்பது மைய நீரோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டவர்களை அதிகாரத்தை நோக்கி முன்னிறுத் துவதே, மாறாக அது பொருளாதாரம் சார்ந்தது அல்ல.

கல்வித்துறையின் வளர்ச்சி பற்றி விவாதிக்கையில் நாம் கண்டிப்பாக நிதி நிலை அறிக்கையில் மிக குறைவாகவே கல்வி துறைக்கு ஒதுக்கப்படும் நிதி குறித்து கேள்வி எழுப்ப வேண்டும். அதுமட்டுமல்லாது கல்வி நிலையங்களில் மாணவர் களுக்கு எதிரான வகுப்பு வாத சக்தி களின் வன்முறையை முறியடிக்க வேண்டும். நாட்டின் அனைத்து தரப்பு மக்களுக்கும் கல்வி கிடைத்திட வழி வகை செய்திட வேண்டும். இதற்கு ஒருங்கிணைந்த மாணவர் அமைப்புகள் மூலம் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்றார்.

கேரள உயர் கல்வித்துறை அமைச்சர் பிந்து பேசியது, கல்வித் துறையில் ஜனநாயகம், மதச்சார் பின்மை, சமூக நீதி ஆகிவற்றை பாதுகாக்க கேரளாவும் தமிழகமும் இணைந்து போராடுவோம். ஒன்றிய அரசின் தேசிய கல்விக் கொள்கை 2020 ஆவணந்தைப் பார்த்தோமானால் அது பலவிதமான முரண்பாடுகளையும், பல சிக்கல்களையும் தன்னுள் கொண்டு குறிப்பிட்ட பிரிவினரை கல்வியில் இருந்து ஒதுக்கி வைப்பதாக உள்ளது. நமது அரசியல் சாசனத்தில் குறிப்பிட்டுள்ள மதச்சார்பின்மை குறித்து இந்த கல்விக்கொள்கை மவுனம் சாதிக்கிறது, இப்படி எதுவும் குறிப்பிடாமல் இருப்பதும் ஒரு வகையில் கிரிமினல் குற்றம் தான். இட ஒதுக்கீடு எத்தனை அவசியம் வன்பது குறிந்து புதிய கல்விக்கொள் கையில் ஒரு வரிகூட கிடையாது.

தற்போதுள்ள அரசியல், சமூகப் பொருளாதார சூழலில், மதவாத சக்திகள் உலக மூலதனம் மற்றும் கரப்பரேட் நிறுவனங்களுடன் கை கோர்த்து செயல்படுகின்றனர். மேலும் கல்வியைக் காவியமாக்கவும், வர்த்தக மயமாக்கவும் மாற்றுவதற்கான பல்வேறு ஆலோசனைகளை தேசிய கல்விக் கொள்கையில் கூறப்பட்டுள்ளது.

ராஜீவ்காந்தி பிரதமராக இருந்த போது 1986 ஆம் ஆண்டு புதிய கல்விக்கொள்கை வடிவமைக் கப்பட்டது. 34 ஆண்டுகளுக்கு பின்னர் தற்போது கொண்டு வரப்பட்டுள்ள புதிய தேசிய கல்விக்கொள்கை “ முந்தைய கல்விக்கொள்கைகளில் இருந்து பல்வேறு வகையில் மாறுபட் டுள்ளது. ஏற்கெனவே இருந்த கல்விக் கொள்கையால் நாட்டில் ஏற்பட்ட மோசமான விளைவுகளை புதிய தேசிய கல்விக் கொள்கை பரிசீலிக் கத் தவறிவிட்டது.




# பேரறிவாளன் விடுதலை: கலங்கரை விளக்காக வழிகாட்டும் வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு

நாட்டின் உச்சநீதிமன்றம் அரசியல் அமைப்பு சட்டம் பிரிவு 142 வழங்கியுள்ள அதிகாரத்தின் மூலம் கு.பேரறிவாளன் வழக்கில் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பளித்துள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் கைது செய்யப்பட்ட கு.பேரறிவாளன் உள்ளிட்டோருக்கு முதலில் மரண தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் இது ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது. நீண்டகாலம் சிறைவாசம் அனுபவித்து விட்டதை கருத்தில் கொண்டு பேரறிவாளன் உட்பட 7 பேர்களும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற தமிழ்நாடு ஒருமுகமாக வலியுறுத்தி வந்தது.

இது தொடர்பாக கு.பேரறிவாளன் சட்டப் போராட்டத்தை முன்னெடுத்தார். அவரது தயார் திருமதி அற்புதம்மாள், மக்களியக்கத்தை கட்டமைக்கும் முயற்சியில் சலிப்படையாது ஈடுபட்டார். அரசியல் கட்சிகளும், சமூக செயல்பாட்டாளர்களும், மனித உரிமைப் போராளிகளும் போராட்டத்தில் பங்கேற்று ‘எழுவர் விடுதலை’ பெரும் இயக்கமானது. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையும், அமைச்சரவையும் சிறைவாசிகள் விடுதலையை வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றியது. மக்கள் உணர்வை பிரதிபலித்த சட்டமன்றத் தீர்மானங்களுக்கு ஆளுநர் மதிப்பளிக்காமல் காலம் கடத்தி வந்தார். “சட்டத்தின் ஆட்சி”க்கு காவலனாக இருக்க வேண்டிய ஆளுநர் மாளிகை மாநில அரசின் உரிமைகளை மனிதாபிமானத்தை நிராகரித்தது. தன் சுயவிருப்பத்தை நிறைவேற்றி கொள்ளும் உணர்வில் செயல்பட்டது. ஆளுநர் மாளிகையின் நீண்டகால தாமதத்தையும், முடிவெடுக்காமல் தட்டிக் கழித்து வந்த பொறுப்பற்ற செயலையும் உச்சநீதிமன்றம் கடுமையாக விமர்சித்துள்ளது. மாநில அரசின் உரிமைகளை ஒன்றிய அரசு மதித்து நடக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது. ஓரளவு எச்சரிக்கையும் செய்துள்ளது.

அரசியல் அமைப்புச் சட்டம் வழங்கியுள்ள உரிமைகளை பாதுகாக்க சட்டப் போராட்டத்தை முன்னெடுத்து, நீதிபரிபாலன மகா சமுத்திரத்தில் பயணிக்கும் ஒவ்வொருவருக்கும் வழிகாட்டும் கலங்கரை விளக்காக அமைந்துள்ள உச்சநீதிமன்றத்தின் வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மகிழ்ச்சியோடு வரவேற்கிறது. இந்தத் தீர்ப்பின் வெளிச்சத்தில் இதே வழக்கில் சிறைபடுத்தப்பட்டுள்ள சாந்தன், முருகன், ஜெயகுமார், ராபர்ட், பையாஸ், ஜெயச்சந்திரன் மற்றும் நளினி ஆகியோரை விடுதலை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

### தெலங்கானா மாநிலத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி போராட்டம்:

# பினாய் விஸ்வம் எம்.பி. கைது

## தேசிய செயற்குழு கடும் கண்டனம்

தெலங்கானா மாநிலத்தில் தோழர் பினாய் விஸ்வம் எம்.பி. கைது செய்யப்பட்டுள்ளதைக் கண்டித்து சிபிஐ தேசிய செயற்குழு விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தெலங்கானா மாநிலக்குழு நடத்திவரும் நிலவுரிமைப் போராட்டத்தில் வாராங்கல் மாவட்டத்தில் பங்கேற்ற கட்சியின் தேசியக்குழு செயலாளர் பினாய் விஸ்வம் எம்.பி. கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டுள்ளார். இதனை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

மக்கள் இயக்கங்களை நசுக்கிட நினைக்கும் தெலங்கானா அரசாங்கத்தின் எதேச்சதிகார நடவடிக்கைகளைக் கண்டு கட்சி ஒருபோதும் அதன் போராட்டங்களின் தீவிரத்தைக் குறைத்துக் கொள்ளாது.

இந்த கைது நடவடிக்கையைக் கண்டித்து கட்சியின் அனைத்து மாநில அணிகளும் போராட்டங்களை நடத்துமாறு அறைகூவல் விடுக்கப்படுகிறது.

இவ்வாறு தேசிய செயற்குழு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்தச் செய்தியை அறிந்தவுடன் பொதுச் செயலாளர் டி.ராஜா, கட்சியின் தெலங்கானா மாநில குழு செயலாளர் சத்தா வெங்கட்ட ரெட்டி மற்றும் பினாய் விஸ்வம் ஆகியோரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு நிலைமை குறித்து கேட்டறிந்தார்.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.